307

ஈழமுரசு

30 நவம்பர் – 06 டிசம்பர் 2000

## மாவீரர் நாள் சிறப்பிதழ்

# தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் அவர்களின் மாவீரர்நாள் செய்தி



*தலைமைச் செயலகம்*
*தமிழீழ விடுதலைப் புலிகள்*
*தமிழீழம்*
*27.11.2000*

எனது அன்பிற்கும் மதிப்பிற்கும் உரிய தமிழீழ மக்களே,

எமது மண்ணிற்காக விடுதலை என்ற உன்னத விழுமியத்திற்காக தமது இன்னுயிரை ஈகம் செய்த எம் உயிர் வீரர்களை நாம் நினைவு கொள்ளும் இன்றைய நாள் ஒரு புனித நாள். இந்த நன்னாளில் ஆன்மக் கதவுகளை அப் புனிதர்களுக்காக திறந்து கொள்வோம்.

நீங்காத நினைவுகளாக எம்மோடு ஒன்றிக் கலந்துவிட்ட உணர்வுகளாக, காலத்தால் சாகாது என்றும் எம்முள் உயிர்வாழும் இம் மாவீரர்களை இன்று கௌரவிப்பதில் தமிழீழ தேசம் பெருமை கொள்கிறது.

மாவீரர் நினைவாக ஈகச்சுடரை ஏற்றும்பொழுது அந்த எரியும் சுடரில் அந்தத் தீ நாக்குகளின் அபூர்வ நடனத்தில், அந்த அற்புதமான படிமத்தில், நான் ஒரு தரிசனத்தைக் காண்கிறேன்.

அக்கினியாக பிரகாசித்தபடி ஆயிரமாயிரம் மனித தீபங்கள், நெருப்பு நதிபோல ஒளி காட்டி, வழிகாட்டிச் செல்லும் ஒரு அதிசயக்காட்சி திடீரென மனத்திரையில் தோன்றி மறையும்.

மாவீரர்களே எமது சுதந்திரப் பயணத்தின் வழிகாட்டிகள். அவர்களது வாழ்வும் வரலாறும் எமது இலட்சிய உறுதிக்கு உரமேற்றுபவை. அவர்களே எமக்கு ஒளிகாட்டிகள்.

மாவீரர்களுக்கு ஈகச்சுடர் ஏற்றி அவர்களை நினைவுகொள்ளும் இந்தப் புனித நாளில், நாமும் எமது இதயங்களில் இலட்சிய நெருப்பை மூட்டிக்கொள்வோம். எமது தேசத்தின் சுதந்திரத்திற்காக அந்த உன்னத இலட்சியத்தை அடைவதற்காக எத்தகைய இடர்களையும், எத்தகைய துன்பங்களையும், எத்தகைய சவால்களையும் எதிர்கொள்ளத் தயாராக இருப்போமென நாம் எமக்குள் வீரசபதம் செய்துகொள்வோம்.

எனது அன்பான மக்களே..

எமது விடுதலைப் போராட்ட வரலாற்றில் இன்று நாமொரு முக்கிய திருப்புமுனையை அடைந்திருக்கிறோம். எமது படையணிகள் ஒப்பற்ற இராணுவ சாதனைகளை நிலைநாட்டி எமது தேசத்தின் கலாச்சாரத் தலைநகரான யாழ்ப்பாணத்தின் வாசற்படியை அண்மித்து நிற்கின்றன.

**யாழ்ப்பாணத்தின் கழுத்தைத் திருகியபடி குடாநாட்டை வன்னி மாநிலத்துடன் துண்டித்து வைத்திருந்த ஆனையிறவுப் பெருந்தளம் புலிப்படை வீரர்களால் மீட்கப்பட்டமை இவ்வாண்டு நாம் ஈட்டிய மாபெரும் இராணுவ வெற்றியாகும். தகர்க்க முடியாத இரும்புக் கோட்டையாக இருபதினாயிரம் இராணுவத்தினருடன் தொடர்வலய முகாம்களால் சூழப்பட்டு பரந்தனில் இருந்து பளை வரையும் கரையோரத் தளங்களோடும் 80 சதுர மைல் நிலப்பரப்பைக் கொண்ட ஆனையிறவுப் பெருந்தளம் எம்மால் வெற்றிகொள்ளப்பட்ட நிகழ்வானது உலகப் போரியல் வரலாற்றில் பதியப்பட்ட மகத்தான இராணுவ சாதனையாகும்.** இப்புகழீட்டிய வரலாற்றுச் சமரில் புலிகள் வரித்த நுட்பமான போர் வியூகங்களும், திகைப்பூட்டும் தரை இறக்கங்களும், வீரம்செறிந்த தாக்குதல்களும் - தந்திரோபாயங்களும் போரியற்கலையில் எமது விடுதலை இயக்கத்தின் அபாரமான வளர்ச்சியையும், முதிர்ச்சியையும் உலகத்திற்கு எடுத்துக்காட்டியது. வெளிநாட்டில் பயிற்சி பெற்று உள் நாட்டில் களமாடி முதிர்ச்சி பெற்ற சிங்களத்தின் சிறப்புப் படையணிகள் இச்சமரில் சிதைக்கப்பட்டன. இந் நிகழ்வானது சிங்களத்திற்கு இராணுவ பொருளாதார ரீதியில் முண்டுகொடுத்து நிற்கும் உலக வல்லரசுகளை திகைப்பில் ஆழ்த்தியது.

ஆனையிறவு பெருந்தளத்தை வெற்றிகொண்டு தென்மராட்சியிலும் வடமராட்சி கிழக்கிலும் பெருமளவு நிலங்களை மீட்டெடுத்த அதேவேகத்தோடு கிழக்கு அரியாலை வழியாக எமது படையணி ஒன்று யாழ்ப்பாணத்தின் நகராட்சி எல்லைக்குள் பிரவேசித்தது. அதேசமயம் எமது மற்றைய படையணிகள் தனங்கிளப்பு வழியாக நாவற்குழி, கைதடி, மட்டுவில் பிரதேசங்களைத் தமது கட்டுப்பாட்டின்கீழ் கொண்டுவந்தன. யாழ்ப்பாண நகரம் அரைப்பிறை வியூகத்தில் சுற்றிவளைக்கப்பட்டது. இதனையடுத்து, ஒரேயொரு ஆகாய விநியோக மார்க்கமாக விளங்கிய பலாலிப் பெரும்தளம் எமது பீரங்கித் தாக்குதலுக்கு இலக்காகியது. மின்னல் வேகத்தில் நிகழ்ந்த இத்திடீர்த் திருப்பங்களின் விளைவாக, *சந்திரிகா அரசு என்றுமில்லாத இராணுவ நெருக்கடியை சந்தித்தது. சந்திரிகா அம்மையார் நிலை குலைந்து போனார். ஆயினும் இந்த சூழ்நிலையைப் பயன்படுத்தி சர்வதேச உலகத்தின் உதவி பெற்று நெருக்கடியை சமாளிக்கத் திட்டமிட்டார். யாழ்ப்பாணம் புலிகளிடம் வீழ்ந்தால் அங்குள்ள முப்பதினாயிரம் சிங்களப் படையினருக்கு உயிராபத்து ஏற்படும் என உலகெங்கும் அபாயச் சங்கை ஊதினார். இந்த அபாய அறிவிப்பைக் கேட்டதுமே அனைத்துலக நாடுகளும் அம்மையாருக்கு உதவிசெய்ய முன்வந்தன.*

இந்தியக் கடற்படையின் உதவியுடன் சிங்கள இராணுவத்தினரை பாதுகாப்பாக மீட்டெடுக்க இந்தியா முன்வந்தது. இஸ்ரேல், பாகிஸ்தான், சீனா, ரஷ்யா போன்ற நாடுகள் அவசர ஆயுத உதவி வழங்க முன்வந்தன. முழு உலகமுமே அம்மையாரின் பின்னால் அணிதிரண்டது. மிகவும் சக்திவாய்ந்த நவீனரக அழிவு ஆயுதங்கள் யாழ்ப்பாணத்தில் குவிக்கப்பட்டன. இஸ்ரேலும், ரஷ்யாவும் நவீன ரக போர் விமானங்களையும் உலங்கு வானூர்திகளையும் அனுப்பி வைத்தன. அவசர அவசரமாக ஆயுத ரீதியில் சிங்கள இரா

(☞ 2ம் பக்கம்)

**அம்புவில் கைதாங்கிய வேடன்**
**வெறிபிடித்தலைகிற மண்ணில்**
**உயிர்ப்பறவையின் துடித்தழல்**
**பற்றிய பாட்டே கேட்டது.**

**ஆதிக்க வேட்டைப் பேய்களின்**
**தாய் மண்ணள்ளிப் போகிற**
**வேட்டை தொடரும்**
**கால இருளில்...**
**வேடுவர் மாறினர்,**
**வேடுவர்களின் காட்சிகள் மாறின**
**வேடுவர்களின் கை வண்ணங்கள் மாறின,**
**வேடுவர்களின் வடிவங்களும் மாறின.**

**வேர்களை நோக்கி**
**வீச்சரிவாள் பாய்ச்சுகையிலும்**
**விழிநீர் ஆறாய்**
**ஓடிச் சொரிகையிலும்**
**அடங்கியிருத்தலே தர்மம் என்றும்**
**அகிம்சை வழியே தேறும் என்றும்**
**அவைகள் நம்பின.**

**வேடன் விரித்த வலையுள்**
**வேடனே கிடந்து துடிக்க**
**மண்ணை உரசி**
**விடுதலைப் பறவை**
**வந்து பிறந்தது.**

**வரலாற்றை மாற்றியமைக்கும்**
**வல்லமை பிறந்தநாளில்**
**சுதந்திரப் பறவையின்**
**போரணி கிளம்பிற்று.**
**வாழ் வெளியெங்கும் சுடர் பரப்பிய**
**சுதந்திர நெருப்பின் பிறந்தநாளிலே**
**விடுதலைப் பெரு வேள்வி**
**மண்ணகம் எங்கும் நிகழ்ந்திற்று.**

**நிலவின் ஒளிக்கயிறு பற்றி ஆடும்**
**விண்ணூஞ்சலின் கீழ்**
**கரியவலைக் கயிறு**
**அறுத்தெமைக்**
**கட்டவிழ்த்து விட்டன வாழி.**
**சுதந்திரக் காட்டில்**
**உலவ வைத்தன வாழி - எனப்**
**பண்ணெடுத்தன பறவைகள்,**
**பாரெல்லாம் கொட்டி கும்மியும் இட்டன.**
**கவலையில் தோய் நிலை**
**மாற்றினன் வாழ்க வாழ்க வென்றே...**

**- சுபாஸ்**

(1ம் பக்கத் தொடர்ச்சி)



*ணுவ இயந்திரம் வலுப்படுத்தப்பட்டது. அபாயச் சங்கை ஊதி உலகத்தின் உதவியைப் பெற்று இராணுவத்தைப் பலப்படுத்தி யாழ்ப்பாணத்தில் போரைத் தொடரும் சந்திரிகாவின் தந்திரோபாயம் வெற்றிபெற்றது. யாழ்ப்பாணச் சமரில் ஒருதலைப்பட்சமாக உலக நாடுகள் குறுக்கிட்டு சிங்களத்திற்கு உதவிகளை வழங்கியதால் எமது போர்த் திட்டங்களை தாமதிக்க வேண்டிய நிர்ப்பந்தம் எமக்கு ஏற்பட்டது.*

1995ல் யாழ்ப்பாண நகரை சிங்கள ஆயுதப்படைகள் ஆக்கிரமித்த போதும் அதன் விளைவாக ஐந்து இலட்சம் மக்கள் இடம்பெயர்ந்த மாபெரும் மனித அவலம் ஏற்பட்டபோதும், உலகம் கண்களை மூடிக்கொண்டு மௌனம் சாதித்தது. ஆனால் இப்போது சிங்கள இராணுவ ஆக்கிரமிப்பு படிப்படியாக உடைக்கப்பட்டு மீண்டும் யாழ்ப்பாணம் விடுதலைப் புலிகளின் ஆட்சிக்குள் வரும் புறநிலைகள் தோன்றிய போது உலக நாடுகள் பதட்டமடைந்து சிங்கள அடக்குமுறை ஆட்சியாளருக்கு உதவிகளைச் செய்வது எமக்கு ஒருபுறத்தில் ஏமாற்றத்தையும் மறுபுறத்தில் கவலையையும் கொடுக்கிறது.

**யாழ்ப்பாணம் சிங்கள தேசத்திற்கு உரித்தானது அல்ல. யாழ்ப்பாணம் யாழ்ப்பாண மக்களுக்கே உரித்தானது. இறையாண்மை என்பது ஒரு அரசின் தெய்வீக சொத்துரிமையல்ல. இறையாண்மையானது மக்களிடம் இருந்தே பிறக்கிறது. அது மக்களுக்கே சொந்தமானது. யாழ்ப்பாணத்தின் இறையாண்மை யாழ்ப்பாண மக்களுக்கே உரித்தானது. இராணுவ ஆக்கிரமிப்பு மூலம் தமிழரின் வரலாற்று மண்ணில் சிங்களத்தின் இறையாண்மையை திணித்துவிட முடியாது. தமிழரின் விடுதலைப்படை என்ற ரீதியில் நாம் எமது மண்ணில் அந்நிய ஆக்கிரமிப்புக்கு இடமளிக்கப்போவதில்லை.**

**எத்தனை சவால்களுக்கு முகம்கொடுத்தாலும் எத்தனை இடையூறுகளை எதிர்கொண்டாலும்; எத்தகைய சக்திகள் எதிர்த்து நின்றாலும் எமது விடுதலை இயக்கம் யாழ்ப்பாணத்தை மீட்டெடுத்தே தீரும்.**

எல்லாச் சமர்களுக்கும் தாய்ச்சமராக விளங்கிய ஆனையிறவுச் சமரிலும் மற்றும் வடமராட்சி, தென்மராட்சி, யாழ்ப்பாண நகராட்சிப் பகுதிகளில் நிகழ்ந்த சமர்களிலும் களமாடி சாதனைபடைத்த சகல போராளிகளுக்கும், படை நகர்த்திய தளபதிகளுக்கும் எனது பாராட்டுக்கள். எல்லைப்படையாக அணிதிரண்ட எமது மக்கள் இந்தச் சமர்களில் நேரடியாக பங்குகொண்டு போராடியது எமது விடுதலைப் போராட்டத்திற்கு புதிய தெம்பையும் பலத்தையும் அளித்தது. குடும்பப்பொறுப்புக்களைச் சுமக்கும் இவர்கள் தேசப்பற்றால் ஈர்க்கப்பட்டு ஆயுதப் பயிற்சி எடுத்து பெரும் நிலமீட்புச் சமர்களில் பங்குகொள்வது எமது தேசத்திற்கு பெருமை சேர்க்கிறது. எமது விடுதலைப் போராட்டத்தில் பரந்துபட்ட பொதுமக்கள் இணைந்துகொள்ளும் பொழுதுதான் அது மக்கள் போராட்டம் என்ற உயர்நிலை அரசியல் பரிமாணம் பெறுகிறது. எமது ஆயுதப் போராட்டத்தில் மக்களின் பங்களிப்பு மேலும் மேலும் பெருகவேண்டும் அதுதான் எமது போராட்டத்தில் பாரிய திருப்புமுனைகளை ஏற்படுத்தும். அதுதான் எமது மண்ணில் எதிரியின் ஆக்கிரமிப்பிற்கு முடிவுகட்டி எமது விடுதலை இலட்சியத்தை வெகுவிரைவில் நிறைவுபெறச் செய்யும்.

எனது அன்பான மக்களே,

மீண்டும் ஆறாண்டுகாலம் சந்திரிகாவின் ஆட்சி தொடரப்போகின்றது. இந்த ஆறாண்டு காலமும் இத் தீவில் அமைதி நிலவுமா அல்லது போரும் வன்முறையும் தலைவிரித்தாடுமா என்பது சந்திரிகா கடைப்பிடிக்கப்போகும் கொள்கையிலும் அணுகுமுறையிலும்தான் தங்கியிருக்கிறது.

இந்த அரசானது, தென்னிலங்கை இனவாத சக்திகளின் ஆதரவோடுதான் ஆட்சிபீடம் ஏறியிருக்கிறது. புலிகளுக்கு எதிராக போர்முரசு கொட்டித்தான் தேர்தலை சந்தித்திருக்கிறது. மிகவும் மோசமான தேர்தல் மோசடிகள், வன்முறைகள் வாயிலாகவே வெற்றிகளையும் பெற்றிருக்கிறது. இனவாதக் கடும்போக்காளர்களே இந்த அரசின் முக்கிய பொறுப்புக்களை வகிக்கிறார்கள். இவர்களில் பலர் அமைச்சர்களாகவும் பதவியேற்றிருக்கிறார்கள். ஆயுத வன்முறையை பாவித்து மிகவும் கேவலமான தேர்தல் மோசடிகளைச் செய்து சனநாயகத்தை கேலிக்கூத்தாக்கிய தமிழ்த் துரோகிகளும் இந்த ஆட்சிபீடத்திற்கு முண்டு கொடுத்து நிற்கிறார்கள். இப்படியாக இனவாதிகளையும் தமிழினத் துரோகிகளையும் நிர்வாக உயர்பீடங்களில் அமர்த்தி அவர்களது தயவில் தங்கிநிற்கும் சந்திரிகா அரசு, தமிழ் மக்களின் தேசியப் பிரச்சனையை தீர்க்க துணிவான முடிவுகளை எடுக்குமா என்பது சந்தேகமே.

போர் பற்றியும் சமாதானம் பற்றியும், இனப்பிரச்சினையை தீர்ப்பது பற்றியும், இந்த அரசிடம் ஒரு தெளிவான பார்வையும், திடமான அணுகுமுறையும் இருக்கவில்லை. ஒன்றுக்கொன்று முரண்பட்ட கருத்துக்களே முன்வைக்கப்படுகின்றன. *பல்வேறு கருத்தோட்டங்களை கொண்டவர்களும் கடும் போக்காளரும் ஆட்சியதிகாரத்தில் அமர்ந்திருப்பதால் இந்த அரசானது பல நாக்குகளால் பேசுகிறது. மிகவும் குழப்பகரமாகப் பேசுகிறது. புலிகளுடன் பேசத்தயார் என ஒரு குரலும், புலிகளை பூண்டோடு அழிப்போம் என இன்னொரு குரலும், புலிகள் சரணடையும்வரை போர் ஓயாது என மற்றொரு குரலுமாக ஜனாதிபதி, பிரதம மந்திரி, இராணுவத் தளபதி ஆகிய உயர் அதிகார பீடங்களில் இருந்தே இத்தகைய முரணான குரல்கள் எழுப்பப்படுகின்றன. இந்த வித்தியாசமான குரல்கள் ஒவ்வொன்றும் வித்தியாசமான பார்வையாளர்களை திருப்திப்படுத்தும் நோக்குடனேயே எழுப்பப்படுகின்றன. சந்திரிகாவும், கதிர்காமரும் வெளிநாடுகளுக்கு ஏமாற்று வித்தைகாட்ட பிரதம மந்திரியும், இராணுவத் தளபதியும் உள்நாட்டு இனவாத சக்திகளுக்கு தீனிபோட்டு வருகின்றனர்.*

மேற்குலக நாடுகள் சமாதானத்தை விரும்புகின்றன. சமாதான வழியில் அரசியற் தீர்வு காணப்படுவதை விரும்புகின்றன. போர் மூலமாக தமிழரின் இனப்பிரச்சனைக்கு தீர்வுகாண முடியாது என்பதை வலியுறுத்துகின்றன. எனவேதான், மேற்குலக நாடுகளை திருப்திப்படுத்தும் வகையில் நுட்பமான பிரச்சார அறிக்கைகளை சந்திரிகா வெளியிட்டு வருகிறார். சமாதானம் என்றும், பேச்சுவார்த்தை என்றும், அதிகாரப் பரவலாக்கம் என்றும், அரசியலமைப்பு என்றும் வார்த்தைப் பிரயோகங்களை கையாண்ட மேற்குலகின் கண்களுக்கு மண்தூவி வருகின்றார்.

தமிழ் மக்களையும் விடுதலைப் புலிகளையும் பொறுத்தவரை சந்திரிகா ஒரு சமாதானப் பிரியை அல்ல. இராணுவத் தீர்வில் நம்பிக்கை கொண்ட கடும் போக்காளராகவே அவரை நாமும் எமது மக்களும் கருதுகிறோம். அவரது ஆறாண்டுகால அரசியல் வரலாறும், தமிழ் மக்களை தொடர்ந்தும் இராணுவ பொருளாதார கொடுமைகளுக்கு ஆளாக்கிவரும் அவரது அணுகுமுறையும் சமீபத்திய அவரது போர்த் தயாரிப்பு நடவடிக்கைகளுமே எம்மையும் எமது மக்களையும் இத்தகைய நிலைப்பாட்டிற்கு தள்ளியது. இராணுவச் செலவீனத்திற்கு ஒதுக்கப்படும் பெரும்தொகை நிதி, பாரிய அளவிலான ஆயுதக் கொள்வனவு இடைவிடாது படைக்கு ஆட்சேர்ப்பு, விலகிய இராணுவத்தினரை விரட்டிப் பிடித்தல், இப்படியாக இராணுவ இயந்திரத்தைப் பலப்படுத்தி போருக்கு தயார் படுத்தும் நடவடிக்கைகளைப் பார்க்கும் பொழுது சந்திரிகா ஒரு இராணுவவாதக் கடும் போக்காளர் என்பது புலனாகும்.

இம் மாதம் ஒன்பதாம் திகதி புதிய பாராளுமன்றத்தை திறந்து வைத்து பேசிய சந்திரிகா, தமிழரின் இனப்பிரச்சினை குறித்து வெளியிட்ட கொள்கைப் பிரகடனத்தை நாம் ஆராய்ந்து பார்த்தால் சந்திரிகாவின் குழப்பகரமான பார்வையும் அணுகுமுறையும் தெளிவாகும். இந்த அறிக்கையில் தமிழரின் இனப்பிரச்சனையின் தோற்றம் பற்றி விளக்கமுனையும் சந்திரிகா, கடந்த 50 ஆண்டுகாலமாக தமிழருக்கு அநீதி இழைக்கப்பட்டு வந்திருக்கிறது என்பதை ஒத்துக்கொள்கிறார். ஆயினும் தமிழர் என்று குறிப்பிடாமல் 'சிறுபான்மை சமூகங்களுக்கு' அநீதி இழைக்கப்பட்டதாக பொதுப்படையாகக் கூறுகிறார். 'இந்நாட்டின் அரசியல், சமூக, பொருளாதார அதிகாரக் கட்டமைப்பில் பங்குகொள்வதற்கு சிறுபான்மை சமூகத்தினருக்கு நியாயமான சந்தர்ப்பங்கள் வழங்கப்படவில்லை. அதுதான் இனப்பிரச்சினையின் தோற்றப்பாட்டிற்கு உண்மையான காரணம்' என்று சந்திரிகா விளக்கம் அளிக்கிறார். இதில் வேடிக்கை என்னவென்றால் தமிழ் மக்களுக்கு எதற்காக அநீதி இழைக்கப்பட்டது? யாரால் இழைக்கப்பட்டது? எப்படி, எந்த வடிவங்களில் இழைக்கப்பட்டது? என்ற கேள்விகளுக்கு சந்திரிகா பதில் தரவில்லை. மாறாக தமிழர்களுக்கு எதிராக நிகழ்ந்த அநீதிகள் அனைத்திற்கும் அந்நிய காலனித்துவம் மீது பழியைச் சுமத்திவிடுகிறார். சிறீலங்காவின் அரசியல் அமைப்புச் சட்டங்கள் காலனித்துவ அதிகார கட்டமைப்பில் இருந்து உருவாக்கம் கொண்டவை என்றும், இவை எமது சமூகத்தில் நிகழும் புறநிலைகளுக்கு ஏற்றதாக அமையவில்லை என்றும் சிறுபான்மை சமூகங்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகளுக்கு இந்த அரசியலமைப்புச் சட்டங்களே காரணமாக இருப்பதாகவும் சந்திரிகா கூறுகிறார். சந்திரிகா அளிக்கும் இவ் விளக்கத்தில் தமிழருக்கு எதிரான சிங்கள- பௌத்த பேரினவாதத்தின் கொடூரமான ஒடுக்குமுறை வரலாறு மிகவும் சாணக்கியமான முறையில் மூடிமறைக்கப்படுகிறது. அத்தோடு இந்த இன ஒடுக்குமுறை வரலாற்றில் சந்திரிகாவின் பெற்றோரது பங்கும் இருட்டடிப்புச் செய்யப்படுகிறது. தமிழருக்கு எதிராக இழைக்கப்பட்ட கொடுமைகளுக்கு அரசியலமைபில் குறைகாண்பதும், அந்த அரசியல் அமைப்பை அந்நிய காலனித்துவத்தோடு தொடர்பு படுத்துவதும் முழுப்பூசணிக்காயை சோற்றில் மறைக்க முயலும் கேலிக்கூத்தான விடயம்.

அந்நிய காலனித்துவ தலையீடு காரணமாகவே தமிழீழ மக்கள் தமது வரலாற்று தாயகம் மீதான இறையாண்மையை இழந்தார்கள் என்பது வரலாற்று உண்மை. ஆனால், தமிழின் மீதான திட்டமிட்ட ஒடுக்குமுறையானது இலங்கைத்தீவு ஆங்கிலக் காலனித்துவத்தில் இருந்து சுதந்திரம் அடைந்த பின்னரே ஆரம்பமாகிறது. இந்த ஒடுக்குமுறைக்கு காரணகர்த்தாவாக விளங்குவது சிங்கள பௌத்த இனவாதமாகும். பௌத்த மதத்தில் வேர்பாய்ச்சி, சிங்கள சமூகக் கட்டமைப்பில் விருட்சமாக வளர்ந்திருக்கும் இப் பேரினவாத சித்தாந்தம், சிங்கள அரசியல் உலகையும் ஆழமாக ஊடுருவி நிற்கிறது. சிங்கள அரசியல் வாதிகளால், படைக்கப்பட்ட அரசியல் அமைப்புச் சட்டங்களும் இந்த பேரினவாத சித்தாந்தத்தின் ஒரு வடிவம். ஆகவே தமிழருக்கு கொடுமை இழைத்துவருவது சிங்கள பௌத்த இனவாதமே தவிர சந்திரிகா கூறுவது போல ஆங்கில காலனித்துவ கருத்துலகம் அல்ல.

சிங்கள இனவாத ஒடுக்குமுறைக்கு எதிராகத் தமிழர்கள் நிகழ்த்திய அரசியல் போராட்டங்கள் அமைதி வழியில் இருந்து ஆயுதப் போராக விரிவுபெற்று இறுதியில் முழு அளவிலான போர்வடிவம் பெற்றிருக்கிறது. கடந்த இருபது ஆண்டுகளுக்கு மேலாக தமிழர் படையான விடுதலைப் புலிகளுக்கும் சிங்கள அரசுக்கும் மத்தியில் இப்போர் நிகழ்ந்து வருகிறது. தன்னாட்சி உரிமையுடைய மக்கள் சமூகம் என்ற ரீதியில் இன அழிப்பை நோக்காகக் கொண்ட அரச அடக்குமுறையில் இருந்து விடுதலை பெற ஆயுதம் ஏந்திப்போராடும் உரிமை எமக்கு உண்டு. சர்வதேச மனித உரிமைச் சட்டங்களுக்கு இசைவான இந்த உரிமையின் அடிப்படையில்தான் தமிழீழப்போர் நடைபெற்று வருகிறது. இதுதான் உண்மை நிலை. ஆனால், சிங்கள அரசு இந்தப் போர் பற்றிய உண்மை நிலையையும் அதன் வரலாற்று பின்னணியையும் உலகிற்கு இருட்டடிப்புச் செய்து வருகிறது. அதுமட்டுமன்றி தமிழரின் தேசவிடுதலைப் போரை 'பயங்கரவாதம்' எனத் திரிபுபடுத்தி, இழிவுபடுத்தியும் வருகிறது.

தனது கொள்கைப்பிரகடன அறிக்கையில் விடுதலைப் புலிகளுக்கும் அரசுக்கும் மத்தியிலான போர் பற்றி சந்திரிகா குறிப்பிடும்போது, 'இனப்பிரச்சினையின் ஒரு விளைவுதான் இந்தப்போர்' என்கிறார். ஆயினும் அதே அறிக்கையில் இப்போரை 'ஆயுதப் பயங்கரவாதம்' என்றும் குறிப்பிடுகிறார். தமிழீழப் போரை இனப்பிரச்சனையின் வெளிப்பாடு என்று கூறும் அதே நாக்குத்தான் அதனை தமிழரின் ஆயுதப் பயங்கரவாதம் என்றும் வர்ணிக்கிறது. இனப்பிரச்சனையை சமாதான வழியில் தீர்த்து வைப்போம் என்று கூறும் சந்திரிகா பயங்கரவாதத்தை போர் மூலம் ஒழிப்போம் என்றும் முழங்குகிறார். இப்படியாக சந்திரிகா அரசு தமிழரின் போர்பற்றிய உண்மை நிலையைத் திரித்து, மறுத்து பயங்கரவாதம் எனப் பொய்சொல்லி, சிங்கள மக்களையும் உலகத்தையும் ஏமாற்றி வருகிறது.

தமிழீழப் போரானது ஒடுக்கப்படும் தமிழ் மக்களின் விடுதலைப் போர் என்ற யதார்த்த அரசியல் உண்மையை சிங்கள அதிகார வர்க்கம் ஏற்றுக்கொள்ள மறுக்கிறது. இந்த மறுதலிப்புத்தான் தமிழரின் இனப்பிரச்சினையை சிக்கலாக்கி வருகிறது. இதுதான் போரை தீவிரப்படுத்தி வருவதற்கும் காரணமாக இருக்கிறது. இதுதான் இனப்பிரச்சினைக்கு சமாதான வழியில் தீர்வு காண்பதற்கு பெரும் முட்டுக்கட்டையாகவும் இருந்து வருகிறது.

**சமாதான வழியில் தமிழரின் தேசிய இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பதற்கு எமது விடுதலை இயக்கம் தயாராக இருக்கிறது. நாம் சமாதான வழிமுறைகளுக்கு எதிரானவர்கள் அல்லர். அதேவேளை, நாம் சமாதானப் பேச்சுக்களில் பங்குபற்றத் தயங்கவும் இல்லை. சமாதான வழிமூலம் கிட்டப்படும் தீர்வானது நியாயமானதாக, நீதியானதாக, சமத்துவமானதாக தமிழரின் அரசியல் அபிலாசைகளை நிறைவு செய்வதாக அமையவேண்டும் என்பதே எமது விருப்பம். நோர்வே நாட்டு சமாதானக் குழுவினரை அண்மையில் வன்னியில் நான் சந்தித்தபோது எமது இயக்கத்தின் இந்த நிலைப்பாட்டை தெளிவாக, அழுத்தம் திருத்தமாக எடுத்து விளக்கினேன்.**

*சமாதானப் பேச்சுவார்த்தைகளுக்கு நாம் நிபந்தனைகள் எதனையும் விதிக்கவில்லை. ஆயினும் பேச்சுவார்த்தைக்கு உகந்ததான நல்லெண்ண புறநிலையும், இயல்புநிலையும் உருவாக்கப்பட வேண்டியதன் அவசியத்தையே நாம் வலியுறுத்தி வருகிறோம்.*

இருபது ஆண்டுகளுக்கு மேலாக பரஸ்பரம் பகைமையுடனும், சந்தேகத்துடனும் ஒரு கொடிய போரில் ஈடுபட்டுவரும் இருதரப்பினரும் சண்டையை தொடர்ந்தபடி திடீரென சமாதானப் பேச்சில் இறங்குவது நடைமுறைச் சாத்தியமானதல்ல. இதனால்த்தான் போர் நெருக்கடியை படிப்படியாகத் தளர்த்தி போர் ஓய்ந்த சமாதான சூழ்நிலையில், நல்லெண்ணப் புறநிலையில் பேச்சுக்கள் நடைபெறுவதை நாம் விரும்புகிறோம்.

இயல்புநிலை என்னும் பொழுது தமிழ் மக்கள் மீது சுமத்தப்பட்ட பொருளாதாரச் சுமைகள், தடைகள் நீக்கி எமது மக்களின் வாழ்க்கை நிலை இயல்பான இருப்பிற்கு திரும்ப வேண்டும் என்பதையே நாம் கருதுகிறோம். ஒரு உறுதியான தளத்தில் உகந்த புறநிலையில், நல்லெண்ண சூழ்நிலையில் பேச்சுக்கள் நிகழும்பொழுதுதான் அவை ஆக்கபூர்வமானதாக அமையும். ஆகவேதான் பேச்சுக்கான நல்லெண்ண புறநிலையின் அவசியத்தை

(☞ 19ம் பக்கம்)

ANGLO ASIAN
MINI MART
513 High Road
Wembley,
Middx
Hao 4 ag
Tel: 0181-900 2451
தரமான இலங்கை Groceries
கடலுணவு வகைகள், மரக்கறி
வகைகள் அனைத்தையும்
பெற்றுக்கொள்ள நாடவேண்டிய இடம்.
Pub.

Euro 1.55 France: 10FFrs. Germany: 2.50DM Swiss: 2.50SFrs. GB: 90P

ஈழமுரசு
பிரித்தானியா
Eelamurasu Weekly

முரசு: 6 | 30 நவம்பர் – 06 டிசம்பர் 2000 | முழக்கம்: 307

FORWARD
CONSULTANTS
CONSULTING FOR PEOPLE
WE PROVIDE !!!!
*** ANY PURPOSE LOAN ***
*** BUSINESS LOAN ***
*** RESIDENTIAL MORTGAGES ***
CALL US ON 020 8900 9052
1 LANCELOT PARADE, LANCELOT
ROAD, WEMBLEY, MIDDX HAO 2 AJ, UK
info@forwardconsultants. co.uk
www.forwardconsultants.co.uk
Pub.

# நிபந்தனையற்ற பேச்சுக்குத் தயார்

# புலிகளின் தலைவர் அறிவிப்பு

(27.11.00)

தமிழீழமும், சர்வதேச சமூகமும் எதிர்பார்த்துக் காத்திருந்த இவ் வருடத்திற்கான மாவீரர் நாள், உரை தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே. பிரபாகரன் அவர்களால் இன்று ஆற்றப்பட்டுள்ளது. நோர்வேயின் விசேட பிரதிநிதி எரிக் சொல்ஹைய்ம் வன்னிக்குச் சென்று தலைவர் பிரபாகரன் அவர்களுடன் பேச்சுக்களை நடாத்தியதும், அதன் பின்னர் சிறீலங்கா ஜனாதிபதி சந்திரிகா தனது பாராளுமன்ற ஆரம்ப வைபவத்தில் பேரினவாதத் தொனியுடன் உரையாற்றியதையும் அடுத்து, சமாதானப் பேச்சுக்கள் குறித்த விடுதலைப் புலிகளின் நிலைப்பாட்டை அறிவதற்காக சர்வதேச சமூகம் தலைவரின் மாவீரர் உரையை எதிர்பார்த்திருந்தது.

இன்று விடுதலைப் புலிகளின் தலைவர் ஆற்றிய உரையில், நிபந்தனையற்ற பேச்சுக்களுக்கு விடுதலைப் புலிகள் தயார் எனவும் ஆனால், பேச்சுவார்த்தைக்கு உகந்ததான நல்லெண்ணச் சூழ்நிலையையும் இயல்பு நிலையும் உருவாக்கப்பட வேண்டியது அவசியம் எனவும் குறிப்பிட்டுள்ளார். யுத்தத்தைத் தொடர்ந்தபடி திடீரென சமாதானப் பேச்சில் இறங்குவது நடைமுறைச் சாத்தியமானதல்ல, போர் நெருக்கடியை படிப்படியாகத் தளர்த்தி போர் ஓய்ந்த சமாதான சூழ்நிலையில், நல்லெண்ண புறநிலையில் பேச்சுக்கள் நடைபெறு

(☞ 4ம் பக்கம்)

## தமிழீழம் எங்கும் ஈகைச்சுடர் ஒளிர்ந்தது

# கரும்புலிகளுடன் இணைந்து தேசியத் தலைவர் சுடரேற்றினார்

(27.11.00)

தமிழீழ தேசப் புதல்வர்கள் நினைவு எழுச்சி நாளான மாவீரர் நாளில், இன்று தமிழீழ நேரப்படி மாலை 6.07 மணிக்கு பிரதான தேசியச்சுடர் ஏற்றி தேசப் புதல்வர்களுக்கு தமிழீழத் தேசியத் தலைவர் பிரபாகரன் அவர்கள் வணக்கம் செலுத்தியுள்ளார். பிரத்தியேகமாக அமைக்கப்பட்ட கரும்புலிகள் நினைவாலயத்தில் 158 கடல் - தரை கரும்புலிகளுடன் இணைந்து பிரதான தேசியச் சுடரை ஏற்றிய தலைவர் அக் கரும்புலிகளுடன் இணைந்து மாவீரர்களுக்கு வணக்கம் செலுத்தினார்.

பிரதான சுடர் ஏற்றப்பட்டதைத் தொடர்ந்து முதல் மாவீரர் லெப். சங்கரின் உருவப் படத்திற்கு மாலை அணிவித்த தலைவர் மாவீரர்களுக்கான வணக்கத்தை செலுத்தினார். முன்னதாக மாவீரர் நாள் உரை தலைவரால் ஆற்றப்பட்டதையடுத்தே சுடர் ஏற்றும் நிகழ்வு இடம்பெற்றது. தலைவர் அவர்களால் பிரதான தேசியச்சுடர் ஏற்றியதையடுத்து தமிழீழத்தின் பல பகுதிகளிலும் உள்ள மாவீரர் துயிலும் இல்லங்களில் மூத்த தளபதிகள் தலைமையில் பிரதான சுடர்கள் ஏற்றப்பட்டு மாவீரர்களுக்கான வணக்கம் செலுத்தப்பட்டது.

(☞ 4ம் பக்கம்)

# புலியெனக் கையொப்பமிட்டு மீனவர்களின் உடலைப் பெறுமாறு வற்புறுத்திய படையினர்

(27.11.00)

திருமலை நிலாவெளி கோபாலபுரம் பகுதியில் கடந்த புதனன்று சுட்டுக் கொல்லப்பட்ட மீனவர்களின் நால்வர்களின் உடலை விடுதலைப் புலிகள் எனக் கூறிய படையினர் அவர்களது உறவினர்களிடம் புலிகள் என்று கையொப்பம் இட்டாலே உடலைத் தருவோம் என வற்புறுத்தியுள்ளனர். திருமலை வைத்தியசாலையில் வைக்கப்பட்டிருந்த உடல்களை பொறுப்பெடுக்கச் சென்ற உறவினர்களிடம், புலிகள் என கையொப்பம் இட்டுத் தந்தாலே உடலை ஒப்படைப்போம் எனக் கடற்படையினர் உறவினர்களிடம் வற்புறுத்தியுள்ளனர். அவர்கள் புலிகள் அல்ல மீன்பிடித் தொழில் செய்பவர்கள் என உறவினர்கள் எவ்வளவோ எடுத்துக் கூறியும் படையினர் கேட்காததால், இறுதியில் உறவினர்கள் உடல்களைப் பெற முடியாமலே திரும்பிச் சென்றுள்ளனர்.

(☞ 4ம் பக்கம்)

# எல்லைப்படை பெண் வீரர் வீரச்சாவு

(27.11.00)

கிளாலியில் சிறீலங்காப் படையினருடன் ஏற்பட்ட மோதல் ஒன்றில் எல்லைப்படை பெண் வீரர் ஒருவர் வீரச்சாவைத் தழுவிக்கொண்டுள்ளார். கடந்த 20ம் திகதி திங்களன்று நடைபெற்ற மோதலிலேயே சிவராசா தெய்வானை என்ற கிளிநொச்சி குமாரபுரத்தைச் சேர்ந்த திருமணமாகிய எல்லைப்படை வீரர் வீரச்சாவைத் தழுவிக்கொண்டார். இவரது இறுதி நிகழ்வுகள் விசுவமடுவில் கடந்த வியாழனன்று நடைபெற்றபோது ஆயிரக்கணக்கான மக்கள் கலந்து கொண்டு தமது இறுதி வணக்கத்தை தெரிவித்துள்ளனர்.

# ஐரோப்பாவில் மாவீரர் நாள் எழுச்சி நிகழ்வுகள்



டென்மார்க்கில்...



ஜேர்மனியில்...



சுவிசில்...

தமிழினி
பல்பொருள் அங்காடி
TAMILINI Cash and Carry
195-197 The Broadway, Southall
Middx Ub1 1LZ
Tel: 0208-606 9900 Fax: 0181-813 8269

மாவீரர் தினத்தை (கார்த்திகை 27) முன்னிட்டு
02.12.2000 அன்று லண்டனில் நடைபெறும் மாவீரர்
எழுச்சி நிகழ்வுகளை சிறப்பிக்கும் முகமாகவும்,
மாவீரர்களை கௌரவிக்கும் முகமாகவும்
எமது நிறுவனம் மூடப்பட்டிருக்கும்

# ஈழமுரசு

Eelamurasu Weekly

**"EELAMURASU" JOURNAL TAMOUL HEBDOMADAIRE**

**Siege Social**
18 à 26, Rue Perdonnet,
75010 Paris, France.

**RCS PARIS**
B 399 673 110 (95B01491)

**Directeur de la publication:**
P. Velupillai

**Redacteur:** P. Sivaguru

**Impression:**
IMPRIMERIE MEAULLE
27 BERNAY, FRANCE.

நிர்வாகி: ப. வேலுப்பிள்ளை
நிறுவக ஆசிரியர்:
அமரர் க. கஜேந்திரன்
ஆசிரியர்: பி.சிவகுரு

தபால் தொடர்புகளுக்கு:
EELAMURASU
22, Rue Perdonnet,
75010 Paris, France
E.Mail-eelamurasu@noos.fr
Web side: www.eelamurasu.com

விளம்பர விநியோக தொடர்புகட்கு:

பிரான்ஸ்:
TeL: 01 40 37 63 63
Fax: 01 40 37 64 64

ஜேர்மனி: தபாற்தொடர்பு
EELA MURASU
Postfach 40 04 17, 40244 Langenfeld
Tel/Fax: 02102158108 / 0210228672
தர்சனன்: 01732620605

டென்மார்க்: அ.ஜெயராகவன்
Sprotoflen - 53 - ST - TH
5800 Nyborg, Denmark.
Tel: 24422634 - Fax: 65302588

சுவிஸ்: தபாற்தொடர்பு
EELA MURASU
Postfach 238, 4313 Möhlin, Swiss.
Natel: 079 635 02 16

பிரித்தானியா:
தபாற்தொடர்பு:
EELAMURASU
5, Saxony Parade,
Hayes, UB3 2TQ.
Fax/Tel: 0208-56 16 877
ஜெயந்தன்: - Tel: 07956908145
கண்ணன் - Tel: 07801383857
பாஸ்கரன் - Tel: 07811040188

இத்தாலி:
மக்கள்கடை
VIA DANTE - 218A, PALERMO
Tel: 091-6824056

நோர்வே:
JAFFNA FOOD - Tel: 22425527

நெதர்லாந்து: த.லிங்கரட்ணம்
Tel: 076 5425804

அவுஸ்திரேலியா:
'EELAMURASU'
P.O Box S-109, Homebush South
N.S.W 2140, Australia.
Tel: (02) 9649 5795
Fax: (02) 9649 5164
Mobil: 0403095073
E-Mail:tccsydney@one.net.au

கனடா:
Shoppers World Postal Outlet
3003 Danforth Ave., P.O.Box 93618
Toronto, ON., M4C 5R4
Tel: (416) 686-3041
Fax: (416) 686-3041



குறிப்பு:
இவ் இதழில் பிரசுரிக்கப்படும் விளம்பரங்களுக்கு அந்தந்த விளம்பரதாரர்களே பொறுப்பு.


(3ம் பக்கத் தொடர்ச்சி)

## நிபந்தனையற்ற...

வதையே நாம் விரும்புகிறோம். தமிழ் மக்கள் மீது சுமத்தப் பட்ட பொருளாதாரச் சுமைகள், தடைகள் நீங்கி மக்களின் வாழ்க்கை நிலை இயல்பான இருப்பிற்கு திரும்பவேண்டும் என்பதையே இந்தச் சூழ்நிலைகளாக நாம் கருதுகிறோம் எனவும் விடுதலைப் புலிகளின் தலைவர் தெரிவித்துள்ளார்.

புலிகளின் இராணுவ நடவடிக்கைகள் பற்றியும் தமது உரையில் குறிப்பிட்ட விடுதலைப் புலிகளின் தலைவர், யாழ்ப்பாணம் சிங்கள தேசத்திற்கு உரியதல்ல. அது யாழ் மக்களுக்கே உரித்தானது. இராணுவ ஆக்கிரமிப்பு மூலம் தமிழரின் வரலாற்று மண்ணில் சிங்களத்தின் இறையாண்மையை திணித்துவிட முடியாது. தமிழர்களின் விடுதலைப்படை என்ற ரீதியில் எமது மண்ணில் அந்நிய ஆக்கிரமிப்பிற்கு இடமளிக்கப் போவதில்லை எனவும் எத்தனை சவால்களுக்கும் முகம் கொடுத்தாலும், எத்தனை இடையூறுகளை எதிர்கொண்டாலும், எத்தகைய சக்திகள் எதிர்த்து நின்றாலும் புலிகள் யாழ்ப்பாணத்தை மீட்டெடுத்தே தீருவார்கள் எனவும் இவ் உரையில் விடுதலைப் புலிகளின் தலைவர் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளார்.

காலத்திற்கு கா்லம் சிங்கள பேரினவாத அரசுகள் தமிழ் மக்களுக்கு இழைத்த துரோகங்கள், கொடுமைகள் ஆகியவை குறித்தும் சமாதானப் பேச்சு என்ற பதத்தால் சிங்கள அரசுகள் தமிழ் மக்களை ஏமாற்றியது குறித்தும் இவ்வுரையில் விளக்கிக் கூறிய விடுதலைப் புலிகளின் தலைவர், போர் பற்றியும் சமாதானம் பற்றியும் இனப்பிரச்சனையை தீர்ப்பது பற்றியும் சந்திரிகா அரசிடம் ஒரு தெளிவான பார்வையோ திடமான அணுகுமுறையோ இருக்கவில்லை எனவும் குற்றம் சாட்டியுள்ளார்.

உரையின் இறுதிப் பகுதியில், தமிழர் பிரச்சனைகளின் அடிப்படைகளை உணர்ந்து சமாதான வழியில் தமிழர்களுக்கு நீதி வழங்க சந்திரிகா அரசு முன்வருமா என சந்தேகத்தை எழுப்பிய அவர், எமது தேசியப் பிரச்சனை தற்பொழுது உலகநாடுகளின் கவனத்தையும் ஆர்வத்தையும் ஈர்த்து வருவதால் உலக மனச்சாட்சியின் பார்வை எம் பக்கம் திரும்பியிருப்பது நல்லதொரு அறிகுறியாகவே எமக்கு தெரிகிறது எனவும் குறிப்பிட்டுள்ளதுடன், சிங்கள தேசம் இனவாதப் பிடியில் இருந்து விடுபடாமல் தமிழ் மக்களுக்கு எதிரான அடக்குமுறையை தொடருமானால் நாம் பிரிந்து சென்று தமிழீழத் தனியரசை அமைப்பதைத்தவிர எமக்கு வேறு வழியில்லை எனவும் தெளிவுபடுத்தியுள்ளார்.

(3ம் பக்கத் தொடர்ச்சி)

## புலியெனக்...

பின்னர், இலங்கை தமிழ் காங்கிரஸ் பாராளுமன்ற உறுப்பினர் விநாயகமூர்த்தி சிறீலங்கா கடற்படை அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டதையடுத்தே உடல்கள் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. சடலங்களை ஒப்படைத்த படையினர் அவற்றை உடனடியாக அடக்கம் செய்யுமாறும் எச்சரித்துள்ளனர்.

இதேவேளை, சுட்டுக்கொல்லப்பட்டவர்களது வீடுகளுக்குச் சென்ற கடற்படை உயர் அதிகாரி, தவறுதலாக நடந்த துப்பாக்கிச் சூட்டில் இவர்கள் கொல்லப்பட்டதாகவும், இது தவறுதலாக நடைபெற்ற சம்பவம் எனவும் தெரிவித்துவிட்டு சென்றதாக உறவினர்கள் தெரிவித்ததாக செய்திகள் வெளியாகியுள்ளன. நான்கு மீனவர்களின் உடல்களிலும் பெருமளவான துப்பாக்கிச் சூட்டுக்காயங்கள் காணப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

(3ம் பக்கத் தொடர்ச்சி)

## தமிழீழம் எங்கும்...

மாவீரர்களின் பெற்றோர்களும் பொது மக்களும் தமது தேசப்புதல்வர்களுக்கான வணக்கத்தினை பெருமளவு திரண்டு வந்து செலுத்தியதாக தமிழீழத்தில் இருந்து எமக்கு கிடைத்த செய்திகள் தெரிவிக்கின்றன.

மாவீரர் துயிலும் இல்லங்களில் சுடரேற்றிய தளபதிகளின் விபரம் வருமாறு,

துணுக்காய் ஆலங்குளம் மாவீரர் துயிலும் இல்லத்தில் தளபதி நளன், வன்னி விளாங்குளம் மாவீரர் துயிலும் இல்லத்தில் கேணல் கிட்டு பீரங்கிப் படையணித் தளபதி கேணல் பானு, மன்னார் ஆட்காட்டிவெளி மாவீரர் துயிலும் இல்லத்தில் தளபதி கேணல் ஜெயம், மன்னார் பெரியபண்டிவிரிச்சான் மாவீரர் துயிலும் இல்லத்தில் தளபதி சுடரரசன், முள்ளியவளை மாவீரர் துயிலும் இல்லத்தில் மூத்த தளபதி பொட்டம்மான், கிளிநொச்சி மாவீரர் துயிலும் இல்லத்தில் தளபதி கேணல் தீபன், முழங்காவில் மாவீரர் துயிலும் இல்லத்தில் கடற்புலிகளின் தளபதிகளில் ஒருவரான அச்சுதன், விசுவமடு மாவீரர் துயிலும் இல்லத்தில் தளபதி கேணல் கருணா ஆகியோர் ஏற்றிவைத்தனர்.

தென் தமிழீழத்தின் மாவீரர் துயிலும் இல்லங்களிலும் விடுதலைப் புலிகளின் மூத்த உறுப்பினர்கள் சுடரேற்றி மாவீரர்களுக்கான வணக்கத்தை செலுத்தியுள்ளனர். மாவீரர் துயிலும் இல்லங்களில் நடைபெற்ற எழுச்சி நிகழ்வுகளுக்கு மாவீரர்களின் உறவினர்கள் இசையணி வகுப்பு மரியாதையுடன் அழைத்துச் செல்லப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.


## 1 வது பிறந்த நாள் வாழ்த்து



### செல்வன் கோணேஸ்வரன் திலீபன்

தமிழீழம் யாழ்ப்பாணத்தை சேர்ந்த கோணேஸ்வரன் புவீந்திரா தேவி தம்பதிகளின் சீமந்த புத்திரன் திலீபன் தனது முதலாவது பிறந்த தினத்தை 27.11.2000 திங்கட்கிழமை உற்றார் உறவினர் நண்பர்களுடன் பிரான்சில் இருக்கும் தனது இல்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடி மகிழ்கின்றார்.

அவரை அவரது அன்பு அப்பா, அம்மா அக்கா, தமிழகத்தில் வசிக்கும் அப்பப்பா, அப்பம்மா, பிரான்சில் வசிக்கும் அம்மம்மா, தமிழகத்தில் வசிக்கும் மாமாமார், மாமிமார், மச்சாள்மார், மச்சான், குட்டி சித்தப்பா, சித்தி, அண்ணாமார், இந்தியாவில் வசிக்கும் பெரியப்பா, கனடாவில் வசிக்கும் மாமாமார், மாமிமார், மச்சாள்மார், மச்சான், வவுனியாவில் வசிக்கும் பெரியம்மா, பெரியப்பா, அண்ணாமார், அக்கா, கனடாவில் வசிக்கும் பெரியம்மா, பெரியப்பா, சுவிசில் வசிக்கும் சித்திமார், சித்தப்பாமார், அக்காமார், ஜேர்மனியில் வசிக்கும் சித்தி, சித்தப்பா, அண்ணா, தம்பி, ஜேர்மனியில் வசிக்கும் மாமா, மாமி, பிரான்சில் வசிக்கும் மாமா மற்றும் பிரான்சில் வசிக்கும் சித்தப்பாமார், சித்திமார், அக்கா, அண்ணா ஆகியோர் பல்கலையும் பெற்று, சீரும் சிறப்புடன் பல்லாண்டு காலம் வாழ்க வாழ்கவென மனதார வாழ்த்துகின்றார்கள்.

*தகவல்: கோணேஸ்வரன் தம்பதிகள்*
*Tél: 0146639771*

Pub.Fr

## Restaurant விற்பனைக்கு

சகல வசதிகளுடன் கூடிய 39M² கொண்ட நல்ல நிலையில் உள்ள Restaurant விற்பனைக்கு உண்டு. Restaurant க்கு முன்பாக École commerce மற்றும் காரியாலயங்கள் உண்டு.

விலை: 398 000Frs. வாடகை: 6 500Frs. cc

தொடர்புகட்கு: EXPRESS
103, BLD. BESSIERS, 75017 PARIS.
TÉL: 01 42 29 54 00
06 16 03 90 01

Pub Fr

## நித்தி வாகன சேவை

உங்களின் வீட்டுத் தளபாடங்களை பெரிய 20M³ வாகனத்தில் பாதுகாப்பாக ஒரே தரத்தில் ஏற்றி இறக்கவும் மற்றும் லூர்த், ஐரோப்பிய நாடுகளுக்குமான வாகன தேவைகளுக்கும் தொடர்பு கொள்ளுங்கள்.



**நித்தி:**
0148050214 / 0613342518
0607348051 / 0148385825

Pub Fr

# ERRANCES TRAVELS

**Tel: 01 42 09 70 00**
Fax: 01 42 09 53 39
55, Rue Louis Blanc,
75010 Paris.
M°: La Chapelle *ou* Louis Blanc

*à partir de*

| | | |
|---|---|---|
| Bombay | - | 3,900Frs. |
| Delhi | - | 3,900Frs. |
| Bangkok | - | 3,400Frs. |
| Colombo | - | 3,900Frs. |
| Singapour | - | 3,980Frs. |
| Madras | - | 4,300Frs. |
| Londres | - | 790Frs. |
| New york | - | 2,300Frs. |
| Montreal | - | 2,800Frs. |
| Oslo | - | 2,010Frs. |
| Toronto | - | 2,800Frs. |
| Nepal | - | 4,820Frs. |

மற்றைய நாடுகளுக்கும் எமது சேவை விஸ்தரிக்கப்பட்டுள்ளது

Li: 075 95 01 37.

(ADV)

உ
சிவமயம்

பாரிஸ் லா கூர்னெவ் அருள்மிகு ஸ்ரீ சொர்ணாம்பிகாதேவி சமேத

## ஸ்ரீ சொர்ணலிங்கேஸ்வர சுவாமி தேவஸ்தான மகாகும்பாபிஷேக விஞ்ஞாபனம்

# சிவன் கோயில்

**11.12.2000**
**திங்கட்கிழமை**

காலை 10 மணி 48 நிமிடம் தொடக்கம், 11 மணி 15 நிமிடத்திற்குள் வரும் சுப முகூர்த்தத்தில் எம் பெருமானுக்கும் ஏனைய பரிவார மூர்த்திகளுக்கும் குடமுழுக்கு நிகழ திருவருள் பாலித்துள்ளது.

**07.12.2000**
**வியாழக்கிழமை**

தொடக்கம் கிரியைகள் யாவும் ஆரம்பித்து, 09.12.2000 சனிக்கிழமை எண்ணெய்க்காப்பு வைபவமும் நிகழ்த்தப்பெறும்.
*[காலை 8 மணியிலிருந்து இரவு 8 மணி வரை எண்ணெய்க்காப்பு சாத்தவும், பாலபிஷேகம் செய்யவும் சந்தர்ப்பம் தரப்படும்]*



**உங்களுக்குத் தேவையான அர்ச்சனைப் பொருட்கள் மற்றும் வீட்டுப் பாவனைப் பொருட்களைப் பெற்றுக்கொள்ள வர்த்தக நிலையமொன்றும் இவ்விடத்திலேயே அமைந்துள்ளது.**

*இவ் ஆலயம் இதுவரை மக்கள் பங்களிப்பின்றி தனியொருவரால் நிர்மாணிக்கப் பட்டுள்ளது என்பதைத் தாழ்மையுடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.*
*இப்படிக்கு நிர்வாகி*

இவ் ஆலயத்தின் உருவாக்கத்திற்கு ஊதியத்துடனாக இருந்தபோதிலும் உளப்பூர்வமாக உதவியவர்களுக்கு எனது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**பாரிசில் உள்ள ஆலயங்களில், இவ்வாலயத்தின் சிறப்பம்சமாக ராஜகோபுர வேலைகள் நிர்மாணிக்கப்பட்டுவருவது குறிப்பிடத்தக்கது.**

ஆலயம் அமைந்துள்ள முகவரி:

**159, Ave. Paul Vaillant Courtier, 93120 La Courneuve.**
**Tél: 01 48 36 53 79 Fax: 01 48 36 41 29**

(La Courneuve மெற்றோவிலிருந்து Le bourget நோக்கி வரும் பிரதான வீதியில் சகல பேருந்துகளிலும் 1வது தரிப்பிடம்) மெற்றோவிலிருந்து நடைபாதை தூரம் 05 நிமிடங்கள்.

**N° de bus 152, 607 - Tram: 01 - Auto Route: A86 (Sortie: La Courneuve வலது பக்கம்)**

அடியார்கள் யாவரும் கலந்து சிறப்பித்து, எம்பெருமானின் இஷ்ட சித்திகளைப் பெற்றுய்யுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றார்கள்.

சுபம்

Pub. Fr.

# மாவீரர் நாள் சிறப்பு வெளியீடுகளாக...




எங்கள் மண்ணின் இதயமெல்லாம் பூத்த மகிழ்வின் இசைக்கீதங்களாக...

**ஆனையிறவு** (ஒலித்தட்டு)

களத்தில் நிற்கும் நெஞ்சங்களின் உணர்வுகளை, கவிஞர் புதுவை இரத்தினதுரையின் வரிகளில் இசைமாருதம் முரளியின் இசையில்...

**ஊர்க்குயில்** (ஒலித்தட்டு)

தேசியத் தலைவன் வளர்ப்பில் மலர்ந்திடும் காந்தரூபன் அறிவுச்சோலை மழலைகள் இதழ் விரிக்கும் முதல் இசை வேள்வி...

**தமிழீழ மொட்டுக்கள்** (ஒலித்தட்டு)

ஒலித்தட்டில் வருகின்றது மட்டு.அம்பாறை சிறப்புப் படையணியின் முழுநீள ஒளிநாடாத் திரைப்படமான...

**உறங்காத கண்மணிகள்** (Video CD)

**மீள் வெளியீடுகளாக...**

**எங்கள் தேசம்** (ஒலித்தட்டு)

**கரும்புலிகள்** (ஒலித்தட்டு)




**தமிழ்த்தாய் நாட்காட்டி**

**மாத நாட்காட்டி**

**சூரியப் புதல்வர்கள்**

**நெருப்பு மனிதர்கள்**(பாகம்-1)

அனைத்துலகச் செயலகம் - தமிழீழ விடுதலைப் புலிகள்



# உங்கள் தலைமுடி உதிர்கின்றதா? கவலை வேண்டாம்



## இதோ ஜேர்மனியின் புதிய கண்டுபிடிப்பு

**தலைமுடி உதிர்வு, கணைவெடிப்பு, இளநரை, மற்றும் முடிவளர்ச்சி நிறுத்தம் போன்றவற்றால் விரக்தியடைந்து போயுள்ளவர்களுக்கு ஓர் நற்செய்தி!**

இந்தப் பிரச்சினைகள் வயதானவர்களுக்கும் ஏற்படலாம். இள வயதினருக்கும் ஏற்படலாம். ஆனால் இக் குறைபாடுகளை Naturina® வை தொடர்ந்து உபயோகிப்பதன் மூலம் தடுத்து நிறுத்தலாம்.

**இத் தயாரிப்பு நீண்டகாலமாக ஆய்வுகளில் ஈடுபட்டுவந்த ஜேர்மனி முன்னணி நிறுவனத்தின் கண்டுபிடிப்பு.**

**Naturina® இயற்கையான மருத்துவத்தின் கலவைகளை அடிப்படையாகக் கொண்ட ஓர் உயிர்ப்புக் கலவையாகும்.**

இத் தயாரிப்பு எந்தவித பக்க விளைவுகளையும் ஏற்படுத்தாது.

எமது புதிய தயாரிப்பைப் பயன்படுத்துவதன் மூலம் சர்மம் பளபளப்புத் தன்மையையும், ஆரோக்கியமான தோலினையும், பலமான நகங்களையும் பெற்றுக்கொள்ளலாம்.

எமது Naturina® தயாரிப்புக்களான கூட்டுக்குளிகைகள், ஷம்பு, கூந்தல் தைலம் (Capsules, Shampoo, Hair tonic) ஆகியவற்றை ஏக காலத்தில் 3 மாதங்களுக்குத் தொடர்ச்சியாக பயன்படுத்தினால் பயன் நிச்சயம்.

**இன்றே பாவியுங்கள் Naturina® உங்களை நிச்சயம் திருப்திப்படுத்தும்!**

நீங்கள் சுவிசிலிருந்து வாங்கவிரும்பின் **Postfinance, A/ C No. 40-176111-3** என்ற வங்கிக் கணக்கு இலக்கத்திற்கும், பிரித்தானியாவிலிருந்து வாங்க விரும்பின் **Barclays Bank, Sort Code 20-40-71, A/C No. 80327069** என்ற வங்கிக்கணக்கு இலக்கத்திற்கும் உரிய பணத்தைச் செலுத்தி, பணம் செலுத்தியதற்கான அத்தாட்சியைத் தபால்மூலமோ அல்லது தொலைநகல் மூலமோ எமக்கு அனுப்பி உறுதிப்படுத்திக்கொள்ளுங்கள்.




ஆசிய வர்த்தக நிலையங்களில் Naturina® வை பெற்றுக்கொள்ளலாம்.

மேலதிக விபரங்களுக்கு:

## Intercare Handels GmbH

**Nassauer str 33-37, 59065 Hamm-Germany**

**Tel: 0049 2381 915910 / Fax: 0049 2381 91591-21**

**Internet: www.naturina.de**

Pub.Ger.

ஈழமுரசு
Eelamurasu Weekly
"உண்மையின் முன்னால் நடுநிலைமை என்பது இல்லை"

# இலட்சியத்தின் நியாயம்

'இறையாண்மையானது மக்களிடமிருந்தே பிறக்கின்றது. அது மக்களுக்கே சொந்தமானது. யாழ்ப்பாணத்தில் இறையாண்மை யாழ்ப்பாண மக்களுக்கே உரித்தானது. இராணுவ ஆக்கிரமிப்பு மூலம் தமிழரின் வரலாற்று மண்ணில் சிங்களத்தின் இறையாண்மையை திணித்துவிட முடியாது. தமிழரின் விடுதலைப்படை என்ற ரீதியில் நாம் எமது மண்ணில் அந்நிய ஆக்கிரமிப்பிற்கு இடமளிக்கப்போவதில்லை.'

வரலாற்றுப் பேருண்மை பொதிந்திருக்கும் இந்த வார்த்தைகள் இவ்வருட மாவீரர் நாளை முன்னிட்டு, தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் அவர்கள் ஆற்றிய உரையில் இடம்பெற்றுள்ளன. சமாதானப் பேச்சுவார்த்தை பற்றிய விடுதலைப் புலிகளின் நிலைப்பாடு, அணுகுமுறை என்னவாக இருக்குமென வினாக்கள் எழுந்த நிலையில், இந்த உரை வெளிவந்துள்ளது. எமது தேசத்தின் இறையாண்மை எமது மக்களிடமிருந்தே பிறக்கின்றது என்பதை அழுத்தம் திருத்தமாகத் தெரிவித்த தமிழீழ தேசியத் தலைவர், சமாதானப் பேச்சுக்கள் பற்றிய விடுதலைப் புலிகளின் நிலைப்பாட்டினையும் தெளிவுபடுத்தியுள்ளார். சண்டையை தொடர்ந்த படி திடீரென சமாதானப் பேச்சில் இறங்குவது நடைமுறைச் சாத்தியமானதல்ல. போர் நெருக்கடிகள் படிப்படியாக தளர்வடைந்து, போர் ஓய்ந்த சமாதானச் சூழ்நிலையில் நல்லெண்ணப் புறநிலையில் பேச்சுக்கள் நடைபெறுவதையே தமிழ் தேசியம் விரும்புகின்றதென்பதையும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். ஆனால், தமிழ்த் தேசியம் விரும்பும் இந்தச் சூழ்நிலையை சிங்கள தேசம் ஏற்படுத்துமா? என்பதுதான் கேள்விக்குறியான விடயம்.

தமிழ் மக்களின் பிரச்சினைக்கு சமாதான வழியில் நிரந்தரமான அரசியல் தீர்வு காணப்படவேண்டுமென விரும்பும் சர்வதேச சமூகத்திற்கு தலைவரின் இந்த உரை ஒரு தெளிவு நிலையை வழங்கியுள்ளது. தமிழ்த் தேசியத்திற்கு ஆண்டாண்டு காலமாக சிங்களப் பேரினவாதத்தால் இழைக்கப்பட்ட கொடூரங்கள் தொடர் சங்கிலி போன்றது. இந்தக் கொடூரங்களிலிருந்து எமது தேசியமும், தாயகமும் காப்பாற்றப்படுவதற்காகவே போர்ச் சூழ்நிலையொன்று எழுந்தது என்பதை யாராலும் மறுக்கவும் முடியாது. இவ்வளவு கொடூரங்களை சிங்களப் பேரினவாதம் கட்டவிழ்த்துவிட்டபோதிலும், இன்றும் தமிழ்த் தேசியத்தின் பிரச்சினையின் அடிப்படையினை தமிழ் மக்களது அரசியல் அபிலாசைகளை சிங்கள தேசம் ஒருதுளியளவும் ஏற்றுக்கொள்ள மறுப்பதுடன், மீண்டும் மீண்டும் போர் வெறிக் கொக்கரிப்புக்களையே அது வெளிப்படுத்துகின்றது. இந் நிலையில்தான், சர்வதேச சமூகம், இப்பிரச்சினை சமாதான வழிகளில் தீர்க்கப்படவேண்டுமென விருப்பம் கொண்டிருக்கின்றது. எனினும், இதே சர்வதேச சமூகம்தான் சிங்கள பேரினவாத அரசிற்கு கொடும் போரிற்கான நிதியுதவியினையும் வழங்கிவருகின்றதென்பதும் கசப்பான உண்மையாதலால், உண்மையான சமாதானம் மலரவேண்டுமானால் சர்வதேச சமூகம் சிங்கள தேசத்திற்கு வழங்கும் இவ்விதமான உதவிகள் குறித்தும் ஒரு கணம் சிந்தித்துக்கொள்ளவேண்டும்.

இன்றுகூட, பாரிஸ் உதவி வழங்கும் நாடுகளின் கூட்டத்தொடரில் நிதியுதவியினை கறந்துகொள்ளவதற்காக சந்திரிகா புதிய முலாம் பூசப்பட்ட சமாதானத் தோற்றத்தை தனக்குச் சூடிப் பார்க்க முனைவதுடன், தமிழ் மக்களின் பிரச்சினையை தான் தீர்த்துக்கொள்ள செயற்பாடுகளை மேற்கொள்ளுவதாகவும் காட்டிக்கொள்ள பிரயத்தனப்படுகின்றார். இத்தகையான சூழ்நிலையில் தான், தேசியத் தலைவரின் உரை எமது இலட்சியத்திற்கு நியாயம்கோரி உலகப் பரப்பில் மீண்டுமொருமுறை மிதந்துள்ளது எமது வரலாற்றில் இன்னொரு முக்கியமான நிகழ்வாகும்.

## பார்வை

### தேசியத் தலைவரின் உரை:

# தமிழர் இறைமையை பாதுகாத்து விடுக்கப்பட்ட பிரகடனம்!

தமிழீழ மக்களினாலும், உலக நாடுகளினாலும், சிறீலங்காவினாலும் பரபரப்பாக எதிர்பார்க்கப்பட்ட தேசிய தலைவரின் மாவீரர்நாள் உரை மிகவும் உறுதியான கொள்கை விளக்க ஆவணமாக அமைந்துள்ளது. இலங்கைத் தீவின் இரு தேசங்களினதும் அரசியல் - இராணுவ - இராஜதந்திர விடயங்களில் தாக்கம் செய்யும் வல்லமை பொருந்திய ஒரு நிலையிலிருந்தவாறு தமிழீழத் தேசிய தலைவர் ஆற்றிய உரை ஒரு நுட்பமான ஆவணமாகவும் வெளிவந்துள்ளது.

**உலகின் கரிசனையை உள்வாங்கிய அதேவேளை சிங்களத்தின் இரட்டை வேட இராஜதந்திரத்திற்கு மரணஅடி கொடுக்கும் இராஜதந்திர பணியையும், அரசியல் பணியையும் தனது 26 நிமிட உரையின் மூலம் பிரபாகரன் புரிந்துள்ளார்.**

தனது உரையில் சில விடயங்களில் தலைவர் கூடியளவு அழுத்தம் கொடுத்திருந்தார்.

**அ.** இறைமை பற்றிய சர்வதேச விவாதங்களுக்குப் பதிலளித்தார். யாழ்.குடாவை விடுவிக்க புலிகள் முற்பட்ட போது சிங்கள அரசால் சரளமாகப் பாவிக்கப்பட்ட வார்த்தை இது. தமிழீழ மக்களுக்கு தமிழீழத்தின் மீது உள்ள இறைமையை யாழ். மீது, யாழ். மக்களுக்குள்ள இறைமை பற்றிய மறுக்க முடியாத விவாதத்திற்குள் இறங்கியதன் மூலம் தலைவர் பதிலளித்தார்.

**ஆ.** சந்திரிகாவின் தலைமையில் திட்டமிட்ட முறையில் பலகுரலில் பேசும் அரசியல் கபடத்தனத்தை தெளிவாக வரையறை செய்தார். சிங்களப் பேரினவாதமே தமிழர்கள் மீதான இனப்படுகொலைகளுக்கு காரணம் என்ற உண்மையை மீள கோடிட்டுக் காட்டினார்.

**இ.** மேற்குலக நாடுகளின் கரிசனையையும் - அதற்கு எமது சாதகமான பதிலையும் வழங்கிய அதே வேளை சிறீலங்காவின் வெறும் வாக்குறுதிகளுக்கு நாம் ஏமாற மாட்டோம் என்பதை தலைவர் தெளிவாக வலியுறுத்திக் கூறினார்.

**அன்னிய காலனித்துவ ஆட்சிதான் தமிழர்கள் மீதான அடக்குமுறைக்குக் காரணம் என தத்துவம் பேச முயன்ற சந்திரிகாவுக்கும், அவர் போன்றவர்களுக்கும் தெளிவாக உறைக்கும் ஒரு வரலாற்று உண்மையை சுட்டிக்காட்டினார். தமிழர்கள் தமது இறைமையை அன்னிய காலனித்துவத்தால் இழந்தனர் என்ற மறுக்க முடியாத உண்மையை பிரபாகரன் சுட்டிக்காட்டினார்.**

தலைவரின் உரை சிங்கள பேரினவாதத்திற்கு ஆதரவளிக்கும் உலக நாடுகள் சிலவற்றை பெயரிட்டுக் குற்றம் சாட்டியது. அதே போன்று சிங்கள நாட்டின் பொருளாதாரத்திற்கு பலவழிகளிலும் உதவும் நாடுகளுக்குள்ள பொறுப்பைச் சுட்டிக்காட்டினார். அவர்கள் கடிவாளத்தை கைகளில் வைத்திருக்கின்றார்கள் என கூறியதன் மூலம் தமிழர்களின் நியாயமான ஆட்சேபத்தை சிறீலங்காவுக்கு நிதி உதவும் நாடுகளுக்கு தெரிவித்துள்ளார். மேற்குலக நாடுகள் தமது நிலைப்பாட்டில் அண்மைக்காலமாக வெளிக்காட்டும் கரிசனையை பிரபாகரன் கோடிட்டுக் காட்டி அங்கீகரித்ததன் மூலம் புலிகளின் இராஜதந்திர முதிர்ச்சியை வெளிக்காட்டினார். அதே போன்று உலக சமூகத்தின் சில நியாயமற்ற நடவடிக்கைகள் பற்றிய கவலையையும் வெளிக்காட்டினார்.

**இவ்வுரையில் தமிழர்களுக்கு உள்ள இறைமை சார்ந்த உரிமையை யாழ். குடாவை மீட்டேயாவோம் என்ற தனது பிரகடனம் மூலம் தலைவர் பிரபாகரன் வலுவாகப் பாதுகாத்தார். அனைத்து சர்வதேச கரிசனைகளுக்கும் மதிப்புக் கொடுத்த தலைவர், சிங்கள ஆக்கிரமிப்பை இல்லாதொழிக்கும் தமிழர்களது உரிமையை சந்தேகத்திகே இடமற்றவகையில் பாதுகாத்தார். அவரது தலைமைத்துவத்தின் தகுதி அங்கு தென்பட்டது. விட்டுக் கொடுப்பது எது – விட்டுக் கொடுக்கக் கூடாதது எது என்ற பிரிப்பை ஒரு தீட்சண்யமான கோடு மூலம் பிரபாகரன் பிரித்துக் காட்டினார்.**

உலகமே எதிர்பார்த்த மாவீரர். நாள் 2000 உரை மற்றுமொரு அரசியல் - இராஜதந்திர பரிணாமத்தை விடுதலைப் போருக்கு ஏற்படுத்தியது.

சிறீலங்கா - தமிழீழம் - உலகசமூகம் என்பனவற்றிற்கு இடையேயான உறவுகளில் முக்கியமான தாக்கத்தை செலுத்தும் என்ற எதிர்பார்ப்பை ஏற்படுத்திய மாவீரர் நாள் உரை தமிழர்களது எதிர்பார்ப்பை தெளிவாக முன்வைத்துள்ளது. வரலாற்றை வெறுமனே பின்தொடராது அதனை இயக்கும் தலைமையை பிரபாகரன் இங்கு மீண்டும் எடுத்துள்ளார். சந்திரிகா விரும்பியோ - விரும்பாமலோ இதன் பாதையில் பயணிக்கவே வேண்டும்.




**- ராஜா**

# சிறீலங்காவின் அராஜகத்திற்கெதிராக யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் ஆர்ப்பாட்டம்

யாழ். குடாவில் கடந்த சில வாரங்களாக இடம்பெற்றுவரும் மர்மக் கொலைகள், செய்தியாளர் நிமலராஜனின் படுகொலை, பிந்துனுவெவ படுகொலைகள் மற்றும் குடாநாட்டில் மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் மீது சிறீலங்கா இராணுவம் அராஜக நடவடிக்கைகள் மேற்கொள்வதை கண்டித்து, கடந்த 22ம் திகதி காலை யாழ். பல்கலைக் கழக மாணவர்கள் ஆயிரக்கணக்கானோர் ஆர்ப்பாட்டப் பேரணியொன்றை நடாத்தியுள்ளனர். கொட்டும் மழைக்கு மத்தியிலும் இவ் ஆர்ப்பாட்டப் பேரணி நடைபெற்றுள்ளது. பல்கலைக் கழக வளாகத்தில் கூடிய 4ஆயிரத்திற்கு மேற்பட்ட மாணவ மாணவிகள் பதாகைகள் மற்றும் சுலோக அட்டைகளை ஏந்தியவாறும், கோசங்களை எழுப்பியவாறும் பலாலி வீதியூடாகப் புறப்பட்டு பழம் வீதியூடாக வந்தனர். இவ்வேளை, அரசடி வீதியில் வைத்து சிறீலங்கா இராணுவத்தினர் பேரணியை தடுத்து நிறுத்த முனைந்தனர். எனினும் மாணவர்கள் இத்தடையையும் பொருட்படுத்தாமல் அதனை மீறி தொடர்ந்தும் பேரணியாகச் சென்றனர். வைமன் வீதி, றக்கா வீதி வழியாக இப்பேரணி யாழ். செயலகத்தை சென்றடைந்தது. அங்கு சந்திரிகா, டக்ளஸ் ஆகியோரது புகைப்படங்களைத் தாங்கிய சுலோக அட்டைகள் செயலகம் முன்பால் குவிக்கப்பட்டு தீ வைத்துக் கொழுத்தப்பட்டன. பின்னர் செயலகத்தினுள் பிரவேசித்த மாணவர்கள் அங்கு கோசங்களை கோசித்ததுடன், வெளிநாட்டு தூதுவர்களுக்கு அனுப்புவதற்கென முறையீட்டு மனுவொன்றினையும் செயலகத்தில் கையளித்தனர். இதனையடுத்து, செயலக வளவைவிட்டு பேரணி பல்கலைக்கழகம் நோக்கித் திரும்பியது. திருப்பும் வழியில் றக்கா வீதியிலுள்ள சர்வதேச செஞ்சிலுவைச் சங்க அலுவலகத்திற்கு முன்பாக தரித்து நின்று கோசங்களை எழுப்பியதுடன், அவ்விடத்திற்கு வந்த சர்வதேச செஞ்சிலுவைச் சங்க அதிகாரிகளுக்கு குடாநாட்டின் மோசமான நிலை குறித்தும், தமிழ் குழுக்களின் அடாவடித்தனங்கள் குறித்தும் விளக்கிக் கூறப்பட்டது. சிறீலங்கா அரசுடன் சேர்ந்து இயங்கும் தமிழ் குழுக்கள், குடாநாட்டை விட்டு வெளியேற வேண்டுமெனவும், இக்குழுக்களும், படையினரும் அப்பாவி மக்களுக்கு எதிராக மேற்கொள்ளப்படும் அராஜக நடவடிக்கைகள் நிறுத்தப்பட வேண்டுமெனவும் அவ்வதிகாரிகளிடம் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

## வெள்ளத்தில் சிக்கிய 235 பேர் செஞ்சிலுவைச் சங்கத்தால் படகுகள் மூலம் மீட்பு

கடந்த வாரம் தென் தமிழீழத்தில் பொழிந்த பெரும் மழையால் அங்கு பெரும் இன்னல்கள் தோன்றியமை அறிந்ததே. கடும் மழை காரணமாக மட்டக்களப்பின் இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதியான தரவைக் குளத்தில் உள்ள அணைக்கட்டு உடைப்பெடுத்ததால், தாராவெளி, பிரம்படித் தீவு, முருக்கன் தீவு ஆகிய கிராமங்கள் வெள்ளத்தில் மூழ்கின. இவ் வெள்ளத்தில் பல பொதுமக்களும் சிக்கிக் கொண்டனர். இவர்களில் சுமார் 235 பேரை சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் ஒருங்கிணைப்புடன் இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கம் படகுகள் மூலம் காப்பாற்றியுள்ளது. இவ்வாறு மீட்கப்பட்டவர்களில் பெரும்பாலானோர் பெண்களும், குழந்தைகளுமாவர். இதேவேளை, இவ் வெள்ள அனர்த்தத்தால் 1 இலட்சம் குடும்பங்களுக்கு அதிகமானோர் மிகக் கடுமையான பாதிப்புக்குள்ளான நிலையில் சுமார் 80,000 குடும்பங்கள் தொடர்புகள் ஏற்படுத்த முடியாமல் துண்டிக்கப்பட்டுள்ளனர். கடந்த வாரத்தின் முற்பகுதியில் மழை வீழ்ச்சி ஓரளவு குறைந்தபோதும், வீதிகள் வெள்ளத்தில் மூழ்கியிருந்ததால் பாதிக்கப்பட்டோரது விபரங்களைச் சேகரிக்கமுடியாத அவல நிலையும் தொடர்கின்றது.

இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிகளைச் சேர்ந்த மக்களே வெள்ளத்தில் அதிகளவு பாதிக்கப்பட்டபோதிலும், அவர்களுக்கான நிவாரண உதவிகளை வழங்க முன்வந்த அரசசார்பற்ற தொண்டர் நிறுவனங்களுக்குகூட சிறீலங்கா இராணுவம் கடுமையான விதிகளை அமுற்படுத்துவதால், அவர்களது உதவிகளும் மக்களுக்கு கிடைப்பது தாமதம் ஏற்பட்டு வருகின்றது.

## பிரிட்டிஸ் கவுன்சில் முன்பாகவும் சிஹல உறுமய ஆர்ப்பாட்டம்

பிரித்தானிய வெளிவிவகார்ப் பிரதியமைச்சர் பீற்றர் கெய்னின் கொழும்பு விஜயத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்து, சிறீலங்காவின் இனவாதக் கட்சியான சிஹல உறுமய கடந்த 22ம் திகதி பிற்பகல் 3.00 மணியளவில் பிரிட்டிஸ் கவுன்சிலின் முன்பாக ஆர்ப்பாட்டமொன்றை நடாத்தியுள்ளது. சிஹல உறுமயவின் பாராளுமன்ற உறுப்பினர் தலைமையில் நடைபெற்ற இவ் ஆர்ப்பாட்டத்தில் பிரித்தானிய அமைச்சரை அவதூறுபடுத்தியும், சமாதான முயற்சிகளுக்கு எதிராகவும் கோசங்களை எழுப்பினர். பிரிட்டிஸ் கவுன்சிலில் பீற்றர் கெய்ன் உரையாற்றவிருந்த சற்று நேரத்திற்கு முன்னரே இவ் ஆர்ப்பாட்டம் நடாத்தப்பட்டுள்ளது. இதேவேளை, பிரிட்டிஸ் கவுன்சிலில் உரையாற்றிய அமைச்சர் பீற்றர் கெய்ன் தனது உரையில், கொழும்பு விஜயத்தின் போது இவ்வாறான ஆர்ப்பாட்டங்களை தான் எதிர்பார்த்ததாகவும் குறிப்பிட்டுள்ளார்.

## நிவாரணமாக புழுக்களும் வண்டுகளும்

யாழ். மாவட்டத்தில் வழங்கப்படும் நிவாரண அரிசியில் மிக அதிகளவான புழுக்களும், வண்டுகளும் காணப்பட்டதாக யாழ். குடாச் செய்திகள் தெரிவிக்கின்றன. சிறீலங்காவின் ஏனைய பகுதிகளில் சமுர்த்தி நிவாரணத்திற்கு அரிசி 1 கிலோ — 18.50 சதமாக பெறுமதியிடப்பட்டு வழங்கப்படுகின்றபோதிலும், யாழ். குடா நாட்டிற்கு மட்டும் அரிசி 1 கிலோவின் விலை 31.50 சதமாக கணக்கிடப்பட்டு வழங்கப்படுகின்றது. அந்தளவு பெரும் விலையாக இருந்தபோதிலும், வழங்கப்படும் அரிசியோ புழுக்களும், வண்டுகளும் நிறைந்ததாகவே காணப்படுகின்றது.

## கொழும்பு துறைமுகப் பாதுகாப்பு அதிகரிப்பு

எந்த நேரத்திலும் கொழும்புத் துறைமுகம் விடுதலைப் புலிகளின் தாக்குதலுக்கு இலக்காகக் கூடுமென சிறீலங்கா பாதுகாப்புப் பிரிவினருக்கு தகவல் கிடைத்ததை அடுத்து துறைமுகப் பகுதியில் கடுமையான பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. தற்பொழுது துறைமுகத்திற்கு வேலைக்கு வரும் உத்தியோகத்தர்களும், ஊழியர்களும் மிகக் கடுமையான சோதனைக்கு உட்படுத்தப்படுவதுடன், வாகனங்களும் கடுமையான சோதனைக்கு உட்படுத்தப்பட்டுவருகின்றன.

இவ்வளவு காலமும் கொழும்புத் துறைமுகத்திற்கு வெளியே நிறுத்தி வைக்கப்படும் கப்பல்கள் தற்பொழுது பானந்துறை கடற்பகுதியில் தரித்து நிற்குமாறு அனுப்பப்படுகின்றன.

## புலிகளின் குரலுக்கு அகவை பத்து

தமிழீழத்தின் தேசிய வானொலிச் சேவையான 'புலிகளின் குரல்' தனது பத்தாவது அகவையை கடந்த வாரம் எட்டியுள்ளது. இதுதொடர்பாக தமிழீழத் தேசியத் தலைவர் வே. பிரபாகரன் அவர்கள் விசேட செய்தியொன்றினை வெளியிட்டுள்ளார்.

அரசு ஆயுதப் போரை மட்டுமல்ல, கருத்துப் போரையும் நடாத்தி வருகின்றது. உண்மைகளை மூடி மறைத்து, பொய்புரட்டுக்களை நுட்பமாகப் புனைந்து சாணக்கியமாக நடாத்தப்படும் இந்தக் கருத்துப்போரின் முக்கியமான குறிக்கோள் எமது விடுதலைப் போராட்டத்திற்கு களங்கம் கற்பிப்பதாகும். ஒரு இனத்தின் தேசவிடுதலைப் போர் என்ற பரிமாணத்தில் எமது உரிமைப் போராட்டம் முழு உலகின் கவனத்தையும் ஈர்த்து வருகின்றது. இப்படியாக எமது இயக்கமும், விடுதலைப் போராட்டமும் சர்வதேச ரீதியாக அடைந்துவரும் பெயரையும், புகழையும் சகிக்கமுடியாத பேரினவாத அரசு, எமக்கு அவப்பெயரை ஏற்படுத்தும் வகையில் ஒரு விசமத்தனமான பிரச்சாரப் போரை நடாத்திவருகின்றது.

வீரஞ்செறிந்த எமது விடுதலைப் புலி அணியை குழந்தை இராணுவம் எனக் கொச்சைப்படுத்தியும், எமது யுத்த நடவடிக்கையை பயங்கரவாதம் எனச் சித்தரித்தும் எமது இயக்கத்திற்கு ஊறுதேட முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. சர்வதேச ரீதியாக எமக்குத் திரண்டுவரும் ஆதரவையும், அனுதாபத்தையும் தடுத்து நிறுத்தி உலக அரசுகளை எமக்கெதிராக திருப்பிவிட முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. பொய்யான ப்ரப்புரைகளை விசாரணைகள் இன்றி விளங்கிக்கொண்ட ஒருசில நாடுகள், எமது இயக்கத்திற்குப் பயங்கரவாதம் என்று முத்திரை குத்தி தடைசெய்தும் உள்ளன. இது எமக்கு ஏமாற்றமும் கவலையும் தருகின்றது. இவ்வாறான கருத்துப்போரை முறியடிப்பது நாம் எதிர்கொண்டுள்ள முக்கிய சவாலாகும்.

புலிகளின் குரல் ஆற்றிவரும் பணி அற்புதமானது. எமது இயக்கத்தின் முக்கிய மக்கள் தொடர்புச் சாதனமாக இது விளங்குவது பாராட்டத்தக்கது. தேசியத் தலைவரின் இச்செய்தி புலிகளின் குரல் வானொலியில் கடந்த 21ம் திகதி காலை ஒலிபரப்பானது.

## யுத்தத்திற்காக 800 கோடி ரூபா கடன்

நாட்டின் யுத்தச் செலவிற்காகச் சிறீலங்கா அரசு பிரித்தானியாவிலுள்ள தனியார் வங்கிகளின் கூட்டு அமைப்பிடமிருந்து 800 கோடி ரூபாவை கடனாகப் பெற்றுள்ளதாக சிறீலங்காவின் மத்திய வங்கி ஆளுநர் தெரிவித்துள்ளார். அரசு எதிர்பார்த்தளவு வருமானம் கிடைக்காததாலும், வரவு செலவுத்திட்டத்தில் 9 சதவீதம் துண்டு விழுந்ததாலும் இந்தக் கடனுதவி பெறப்பட்டதாகவும், இது 3—5 வருட காலத்தில் வட்டியுடன் திரும்பச் செலுத்தப்படவேண்டியதெனவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

உங்கள் வீடுகள், வர்த்தக நிலையங்களில் சகல விதமான திருத்த வேலைகளுக்கும் காத்திருக்கின்றார்கள்

VICTOR Sarl

கட்டட, மின்சார, தண்ணீர், கழிப்பறை திருத்த வேலைகளை மிகக் குறைந்த கட்டணத்துடன்
திறமையான தொழிலாளர்களைக்கொண்டு அமைத்துக்கொள்ள

VICTOR SARL - 25bis, Rue des Chaufourniers, 75019 Paris. Tel: 01 42 06 59 19 Fax: 01 42 06 61 19

# உரையில் பொதிந்த தெளிவான பாதையும் சிங்களத்தின் முரண்பாடுகளும்

தமிழீழ தேசமும், சர்வதேசமும் எதிர்பார்த்திருந்த தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் அவர்களின் மாவீரர் தினச் செய்தி வெளியாகிவிட்டது. சிங்கள தேசத்திற்கும், சர்வதேச சமூகத்திற்கும் காத்திரமான பல செய்திகளை தாங்கியவாறு இந்த உரை வெளிவந்துள்ளது. சிறீலங்காவின் பேரினவாதத்தின் முகத்திரையை மீண்டுமொருமுறை தெட்டத்தெளிவாக அம்பலப்படுத்தியுள்ள இவ்வுரை, தமிழீழ மக்களின் தேசியப் பிரச்சினை சமாதான வழியில் தீர்க்கப்பட வேண்டுமென்ற சர்வதேச சமூகத்தின் அவாவிற்கும் சாதகமான அறிகுறிகளை காட்டியுள்ளது.

வழமையாக வெளியாகும் மாவீரர் தின உரைகளைவிட, சர்வதேச சமூகம் இவ்வருட மாவீரர் தின உரையை உன்னிப்பாக எதிர்பார்த்திருந்ததுடன், இவ்வுரையில் தலைவர் பிரபாகரன் அவர்கள் என்னென்ன விடயங்கள் குறிப்பிடப்போகின்றாரென்ற ஆவலிலும் இருந்தன.

முன்னைய மாவீரர் தின உரைகளைவிட, இவ்வருட மாவீரர் தின உரையை சர்வதேச சமூகம் எதிர்பார்த்தமைக்கு காரணம் இல்லாமலில்லை. இம்மாத முற்பகுதியில் நோர்வேயின் விசேட தூதுவர் எரிக்சொல்ஹெய்ம் அவர்கள் வன்னிக்குச் சென்று, விடுதலைப் புலிகளின் தலைவரை நேரில் சந்தித்து பேச்சுக்களை நடாத்தியதும், வன்னிப் பயணத்தை முடித்த பின்னர் அவர் கொழும்பில் சிறீலங்கா ஜனாதிபதி சந்திரிகாவை சந்தித்து, வன்னிப் பேச்சுக்களின் விபரங்களை தெரிவித்ததும், உள்நாட்டிலும், சர்வதேச ரீதியாகவும் ஒருவித எதிர்பார்ப்பினை தோற்றுவித்தது.

நோர்வே நாட்டின் அனுசரணையுடன் விடுதலைப் புலிகளும், சிறீலங்கா அரசும் பேச்சுக்களில் ஈடுபடுமா? சந்திரிகாவின் தலைமையிலான பொதுஜன ஐக்கிய முன்னணியின் இரண்டாவது ஆட்சிக்காலத்தில் சமாதானம் தோற்றுவிக்கப்படுமா? ஆகிய இரு கேள்விகளும் இந்த எதிர்பார்ப்பில் அடங்கியிருந்தன. சில செய்தி ஊடகங்களும் எரிக் சொல்ஹெய்மின் வன்னி விஜயத்திற்குப் பின்னர் பலவிதமான ஊகங்களுடனும் செய்திகளை வெளியிட்டன. இவ்வருட முடிவுக்குள் சிறீலங்கா அரசும், விடுதலைப் புலிகளும் பேச்சுக்களை ஆரம்பிப்பார்கள் எனவும், முதல் கட்டப்பேச்சுக்கள் நோர்வேயின் தலைநகர் ஒஸ்லோவில் இடம்பெறுமெனவும், இவ் ஊகங்களில் குறிப்பிடப்பட்டன.

இதற்கிடையே சிறீலங்காவில் ஒரு அரசியல் நிகழ்வு நடந்தது. அந்நாட்டின் 11வது பாராளுமன்றத்திற்கான வைபவ ரீதியான ஆரம்ப வைபவமே அந்த நிகழ்வாகும். 11வது பாராளுமன்றத்தை ஆரம்பித்து வைத்து, நீண்டதொரு கொள்கை விளக்கவுரையினை சந்திரிகா நிகழ்த்தினார். இவ்வுரையானது சிறீலங்காவின் பௌத்த பேரினவாதத்தையும், யுத்தத்தையும் மேம்படுத்தியே சந்திரிகாவினால் நிகழ்த்தப்பட்டது. எனினும், தனது அரசியல் நயவஞ்சகத்தையும் சந்திரிகா இவ்வுரையில் காட்டத் தவறவில்லை. சர்வதேச நாடுகள் எதிர்பார்க்கும் சமாதானத்திற்குரிய செயற்திட்டம் விடுதலைப் புலிகள் தரப்பிலேயே இருக்கின்றதென்ற ஒரு தோற்றத்தை சந்திரிகா சர்வதேச சமூகத்தின் முன்

> பல்வேறு கருத் தோட்டங்களைக் கொண்டவர்களும், கடும்போக்காளரும் ஆட்சியதிகாரத்தில் அமர்ந்திருப்பதால், இந்த அரசானது பல நாக்குகளால் பேசுகின்றது. மிகவும் குழப்பகரமாகப் பேசுகின்றது.

னால் வைக்க, மாவீரர் நாள் உரை பற்றிய எதிர்பார்ப்பும், அதில் தலைவர் பிரபாகரன் சந்திரிகாவிற்கு என்ன பதிலைத் தரப்போகின்றாரென்பதும் உலகம் எதிர்பார்க்கத்தொடங்கியது.

அவர்கள் எதிர்பார்த்தபடி மாவீரர்நாள் உரையும் வந்தது. அவ்வுரையில், சிறீலங்காவின் நாசகாரச் செயற்திட்டங்கள் பற்றி தெளிவாக அம்பலப்படுத்தப்பட்டுள்ளது.

'போர் பற்றியும், சமாதானம் பற்றியும், இனப்பிரச்சினையை தீர்ப்பது பற்றியும், இந்த அரசிடம் ஒரு தெளிவான பாதையும், திடமான அணுகுமுறையும் இருக்கவில்லை. ஒன்றுக்கொன்று முரண்பட்ட கருத்துக்களே வைக்கப்படுகின்றன. பல்வேறு கருத்தோட்டங்களைக் கொண்டவர்களும், கடும்போக்காளரும் ஆட்சியதிகாரத்தில் அமர்ந்திருப்பதால், இந்த அரசானது பல நாக்குகளால் பேசுகின்றது. மிகவும் குழப்பகரமாகப் பேசுகின்றது. புலிகளுடன் பேசத் தயாரென

**பேம்பி**

ஒரு குரலும், புலிகளைப் பூண்டோடு அழிப்போமென இன்னொரு குரலும், புலிகள் சரணடையும்வரை போர் ஓயாதென மற்றொரு குரலுமாக ஜனாதிபதி, பிரதமமந்திரி, இராணுவத் தளபதி ஆகிய உயரதிகாரப் பீடங்களிலிருந்தே இத்தகைய முரணான குரல்கள் எழுப்பப்படுகின்றன....' என அவ்வுரை தொடர்ந்து செல்கின்றது.

சிறீலங்கா தேசத்தின் இன்றைய நிலையை நாலைந்து வரிகளில், மிகத் தெளிவாக சர்வதேச சமூகத்தின் முன்னால் தலைவர் பிரபாகரன் அவர்கள் வெளிப்படுத்தியுள்ளார். அதாவது, சந்திரிகாவின் பாராளுமன்ற உரைக்கு காத்திரமான பதில் தமிழீழ தேசத்திலிருந்து தலைவரின் உரையூடாக வெளிப்படுத்தப்பட்டிருக்கின்றது. தமிழ் மக்களின் விடுதலைப் போரின் உண்மை நிலையை திரித்து, அதனைப் பயங்கரவாதமென உலகத்தின் முன்னாலும், சிங்கள மக்களின் முன்னாலும் நிறுத்தப்பாடுபடும் சந்திரிகாவின் நிலைப்பாட்டினை இவ்வுரை மிகத் தெளிவாக வெளிக்காட்டியுள்ளதுடன். கடந்த சிலவாரங்களாகவே அடிபடும் சமாதானப் பேச்சுக்கள் பற்றிய ஊகங்களுக்கும், எதிர்பார்ப்புக்களுக்கும் இந்தவுரை பதிலளித்துள்ளது.

சமாதானப் பேச்சுவார்த்தைகள் என்பது தமிழ் மக்களுக்கொரு புதிதான விடயமல்ல. தமிழ்த் தேசியம் பலதடவைகள் சிங்கள தேசத்துடன் பேச்சுக்களை நடாத்தியுள்ளன. ஆயினும், தமிழ் மக்களது அரசியல் அபிலாசைகளையும் சிங்கள தேசம் ஒருபோதும் ஏற்றுக்கொள்ளாததால், இந்தப் பேச்சுக்கள் தோல்வியில் முடிவடைந்த வரலாற்றுப் பின்னணியையும் தலைவர் அவர்கள் விளக்கியுள்ளார்.

இன்று சர்வதேச சமூகம் சமாதானம் மலரவேண்டுமென்பதில் ஆவலாக இருக்கின்றனர். சரி அவர்களது நோக்கம் நல்லதுதான். ஆனால், இங்கொரு கேள்வி எழுகின்றது. தமிழ்த் தேசியம் எத்தகைய தீர்வை விரும்புகின்றது? அதனது அடிப்படை அபிலாசைகள் என்ன? இவ்விரண்டையும், மேற்படி சமாதானத்தை விரும்பும் சக்திகள் உணர்ந்துகொண்டிருக்கின்றார்களா? என்பதே அக்கேள்வியாகும்.

உலகம் சமாதானத்தை விருப்புகின்றது என்பதற்காக தமிழ் மக்களின் இந்த நோக்கங்களை புறந்தள்ளிவிட்டு, யாருமே சமாதானத்தைக் காணமுடியாது. ஆனால், தமிழ்த் தேசியத்தின் அடிப்படைப் பிரச்சினைகளை உணர்ந்து; அதற்கு நீதிவழங்க சிங்கள தேசம் முன்வருமா? என்பதுதான் இப்பொழுது தொக்கி நிற்கும் கேள்வி.

இது ஒருபுறமிருக்க சிறீலங்காவில் கடந்த சில நர்ட்களின் அரசியல் நிகழ்வுகளில் மாற்றங்கள் காணப்படுகின்றன. பிரித்தானியாவின் வெளியுறவு இணைய மைச்சர் பீற்றர் கெய்னின் கொழும்பு விஜயம், நோர்வேயின் விசேட தூதுவர் எரிக் சொல்ஹெய்மின் இந்தியாவிற்கான திடீர்விஜயம், சந்திரிகாவின் ஐரோப்பிய விஜயம் ஆகியன அவற்றுள் முக்கியமானவை.

சிறீலங்காவிற்கு வருடாவருடம் நிதிவழங்கும் நாடுகளின் கூட்டத்தொடர் டிசெம்பர் மாத முற்பகுதியில் பிரான்ஸ் தலைநகர் பாரிசில் ஆரம்பிக்கவிருப்பதால், அதற்கு முன்னோடியாகவே சந்திரிகாவின் இவ்விஜயம் இடம்பெற்றிருப்பதாக நம்பப்படுகின்றது. வழமைபோலவே இந்த நிதிவழங்கும் நாடுகளின் கூட்டத் தொடரிலும் தன்னையொரு சமாதானப் புறாவாக சித்தரிக்கமுயலும் சந்திரிகாவிற்கும், அதனை மீண்டுமொருமுறை நம்பத்தயாராகவிருக்கும் சர்வதேச சமூகத்திற்கும் தமிழீழ தேசத்திலிருந்தே தலைவரின் மாவீரர் தின உரையூடாக காத்திரமான செய்திகள் வழங்கப்பட்டுள்ளனவென்பது மறுக்க முடியாத உண்மையாகும்.

## கார்ள்ஸ் இன்ரபேத்தும் கொழும்பு வருகிறார்

தெற்காசிய விவகாரங்களுக்கான அமெரிக்க உதவிச் செயலாளர் கார்ள்ஸ் இன்ரபேத் தனது தெற்காசிய நாடுகளின் விஜயத்தின் ஒருபகுதியாக இவ் வார முற்பகுதியில் கொழும்பு வருவாரென அறிவிக்கப்பட்டுள்ளது. இவருடன் கிழக்கு தெற்காசிய விவகாரங்களுக்கான பணிப்பாளரும், வருகை தருகின்றனர். கொழும்பில் தங்கியிருக்கும் போது, உயர் அரச அதிகாரிகளையும், அரசியல் கட்சித் தலைவர்களையும், அரசசார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகளையும் சந்தித்து பேச்சுக்களை நடாத்தவுள்ளனர்.

தமது கொழும்பு விஜயத்தினை முடித்துக்கொள்ளும் இக்குழு இந்தியா, நேபாளம், பூட்டான் ஆகிய நாடுகளுக்கும் விஜயத்தை மேற்கொள்ளவுள்ளது. கர்ர்ள்ஸ் இன்ரபேத் கொழும்பிற்கு மேற்கொள்ளும் நான்காவது விஜயம் இதுவென்பதும் குறிப்பிடத்தக்கது.

## வவுனியாவில் கடத்தல் - கொழும்பில் விடுதலை

வவுனியா—கொரவப் பொத்தானை வீதி வெளிக்குளப் பகுதியிலுள்ள தனது வீட்டிலிருந்து கடத்தப்பட்ட இரும்புக் கடை வர்த்தகரான கந்தசாமி கருணாகரன் (33) என்பவர் கொழும்புப் புறநகர் பகுதியொன்றில் வைத்து விடுவிக்கப்பட்டுள்ளார். இவரை யார் கடத்தினார்கள், எவ்வாறு இவர் கொழும்பிற்கு கொண்டுசெல்லப்பட்டாரென்பது குறித்து தமக்கு மர்மமாக இருப்பதாக இவரது குடும்பத்தினர் தெரிவித்துள்ளனர். கொழும்பிலிருந்து தொலைபேசியில் தனது வீட்டாருடன் உரையாடிய இவர், தான் கண்கள் கட்டப்பட்ட நிலையிலேயே கடத்திச் செல்லப்பட்டதாகவும், எங்கு கொண்டுசெல்லப்பட்டது என்பது பற்றி தனக்கு தெரியாதெனவும் குறிப்பிட்டுள்ளார்.

## நிலாவெளியில் கடற்படையால் நான்கு தமிழர்கள் சுட்டுப்படுகொலை

திருமலை நகரிலிருந்து வட்க்கேயுள்ள நிலாவெளி கோபாலபுரம் பகுதியில் சிறீலங்காக் கடற்படை நடத்திய வெறியாட்டத்தில் நான்கு அப்பாவிப் பொது மக்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். இந் நால்வரும் துப்பாக்கித் தாக்குதலினாலேயே பலியாகியுள்ளனர். பலியானவர்களில் ஒருவர் பாடசாலை மாணவராவார். இச்சம்பவத்தில் மேலும் இரு சிறுவர்கள் காயமடைந்து திருமலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கோபால்புரம் பகுதியின் பாதுகாப்பினை சிறீலங்காக் கடற்படையினர் பொறுப்பெடுத்ததன் பின்னர் இப் படுகொலைகள் நடைபெற்றுள்ளன. இப்பகுதியிலுள்ள ஏரியொன்றிற்கு மீன் பிடிப்பதற்காக இவர்கள் சென்ற போதே கடற் படையினரால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளனர்.

## வீரச்சாவை தழுவிய போராளிகள்

(26.11.00)

கடந்த 19.11.2000 அன்று அரியாலை பகுதியில் சிறீலங்கா இராணுவத்துடன் ஏற்பட்ட மோதலின் போது வீரவேங்கை ஆழியரசி (இராசகுலசிங்கம் விஜிதா- யாழ்.), கடந்த 17.11.2000 அன்று அம்பாறை மருதமுனை பகுதியில் சிறீலங்கா விசேட அதிரடிப்படையினருடன் ஏற்பட்ட மோதலின் போது கப்டன் குலராஜன் (விநாயகம் தேவதாசன் - மட்டு.) ஆகிய போராளிகள் வீரச்சாவைத் தழுவிக்கொண்டனர். கடந்த 16.11.2000 அன்று அம்பாறை ஒலுவில் பகுதியில் சிறீலங்கா விசேட அதிரடிப் படையினருடன் ஏற்பட்ட மோதலின் போது மேஜர் நவகீதன் (நடராசா தங்கத்துரை - மட்டு.) என்ற போராளி வீரச்சாவைத் தழுவிக்கொண்டார்.

இதேவேளை, கடந்த ,15.11.2000 அன்று மணலாறு பகுதியில் எதிர்பாராமல் ஏற்பட்ட வெடிவிபத்தொன்றில் 10 போராளிகள் வீரச்சாவைத் தழுவிக் கொண்டனர். லெப். தவநிதி (நந்தினி சுந்தரம் - மட்டு.), கப்டன் தர்மினி (ஜெயக்குமாரி எட்வேட்), கப்டன் மைவிழி (நேசமலர் மயில்வாகனம்), வீரவேங்கை செந்தாளினி (ஜெயமதி கிருஷ்ணபிள்ளை), வீரவேங்கை துவாரகா அல்லது ஒளிவிழி (ரஞ்சினி வெள்ளைகுட்டி), வீரவேங்கை உதயநிலா (ரஞ்சினி தெய்வநாயகம்), 2ம் லெப். லக்சிகா (சுசிமாலா சண்முகம்), 2ம் லெப். வையந்தி (சாரதா குலசேகரம்பிள்ளை), கப்டன் நிரூபா (குமாரி தம்பிரட்ணம்), வீரவேங்கை குருசாமி (மங்கயற்கரசி செல்வராசா)

## பள்ளிமுனையில் கடற்புலிகள் தாக்குதல்

(26.11.00)

மன்னார் கடற்பரப்பில் கடந்த 20ம் திகதி கடற்புலிகளிகள் சிறீலங்கா கடற்படையினர் மீது தாக்குதல் ஒன்றை நடாத்தியுள்ளனர். மன்னார் பள்ளிமுனைக் கடற்பரப்பில் காலை 8 மணி முதல் சுமார் 45 நிமிடங்களாக உக்கிரமான சமர் இடம்பெற்றுள்ளது. இதன்போது சிறீலங்கா கடற்படையினரின் இரு படகுகள் சேதமடைந்துள்ளன. இக் கடற்சமரில் எல்லைப்படையைச் சேர்ந்த 2ம் லெப். ஜெகன் (வரப்பிரகாசம் அன்ரன் சபாசனம் - யாழ்.) என்பவர் வீரச்சாவடைந்துள்ளார்.

# 51 கைதிகள் விடுதலையாகும் வரை போராடுவோம்

**– பழ.நெடுமாறன் –**

வீரப்பனுக்கு உதவியதாகக் கூறி தடாச் சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டு, கர்நாடக சிறைகளில் வாடும் 51 தமிழர்களையும் விடுதலை செய்யும் வரை போராடுவோம் என தமிழர் தேசிய இயக்கத் தலைவர் பழ.நெடுமாறன் தெரிவித்துள்ளார். வீரப்பனிடம் இருந்து கன்னட நடிகர் ராஜ்குமாரை மீட்டு வந்தமைக்காக மக்கள் உரிமைக் கூட்டமைப்புச் சார்பில் சென்னையில் நடைபெற்ற பாராட்டு விழாவில் பேசிய போதே இதனைத் தெரிவித்துள்ளார். அவர் அங்கு மேலும் பேசுகையில்,



தமிழர் நலன் கருதி மீண்டும் காட்டுக்குச் சென்று ராஜ்குமாரை மீட்டு வந்தோம். ஆனால், இதற்கு விடுதலைப் புலிகளின் வேண்டுகோளால் தான் நான் போனேன் என்று சித்தரித்தனர்.

விடுதலைப் புலிகளுக்கும், இந்தப் பிரச்சினைக்கும் என்ன சம்பந்தம்? இந்திய அரசியல் விவகாரத்தில் புலிகள் ஒரு போதும் தலையிட்டது இல்லை. இங்குள்ள அனைத்து அரசியல் கட்சிகளின் ஆதரவு தங்களுக்கு வேண்டும் என்று கருதுகிறவர்கள். ஆனால் இங்குள்ள ஒருசில அரசியல் தலைவர்கள் ஏதோ நினைத்துக்கொண்டு தவறான பிரச்சாரம் செய்து கொண்டிருக்கிறார்கள். இந்தப் பிரச்சினையில் புலிகளின் ஆதரவாளன் என்று என்னை விமர்சனம் செய்தார்கள். இதை நான் பெருமையாகவே நினைக்கிறேன்.

வீரப்பன் 1300 யானைகளை கொன்றான். பலகோடி ரூபாய் சந்தன மரம் திருடினான் என்று சொல்கிறார்கள். இது குற்றச்சாட்டுதான். நீதிமன்றத்தில் நிரூபிக்கப்படவில்லை. இருந்தாலும் இதை வீரப்பன் ஒருவனால் மட்டும் செய்யமுடியுமா? இது அரசியல் வாதிகள், வனத்துறை அதிகாரிகள் மற்றும் பலர் பின்னணியில் தான் நடந்துள்ளது. இந்த விஷயத்தை விமர்சனம் செய்யும் அரசியல் கட்சியை சேர்ந்தவர்களுக்குகூட இதில் தொடர்பு உள்ளது. யார், யார் என்று எங்களுக்குத் தெரியும். சதாசிவம் கமிஷன் முன்பு இதை அம்பலப்படுத்துவோம். மேலும் நடவடிக்கை எடுக்கக் கூறி வற்புறுத்துவோம் எனத் தனது உரையில் மேலும் தெரிவித்திருந்தார்.

நிகழ்ச்சியில் பேசிய பெரியார் திராவிடர் கழகப் பொதுச்செயலர் ராசேந்திரம் 'வீரப்பனிடமிருந்து ராஜ்குமாரை மீட்க முடியாவிட்டால், ஆட்சியிலிருந்து விலகவேண்டும் என்று உச்ச நீதிமன்றம் கூறியுள்ளது. இதே, காஞ்சி சங்கராச்சாரியார் கடத்தப்பட்டிருந்தால் தடா கைதிகளை விடுவிக்கமாட்டேன் என்று உச்ச நீதிமன்றம் தீர்ப்புக் கூறுமா? என்றார். தூதுக்குழுவினரை பாராட்டி தமிழர் தேசிய பொதுச் செயலாளர் பெ. மணியரசன், தமிழர் இயக்கத் தலைவர் சுபவீரபாண்டியனும், தமிழர் தேசிய இயக்கப் பொதுச் செயலர் பரந்தாமன், தமிழ்ச் சிந்தனையாளர் பேரவைத் தலைவர் சந்திரேசன் ஆகியோர் உரையாற்றினர்.

முன்னதாக தமிழர் நிதியாக பழ.நெடுமாறனிடம் ரூபாய் 10 ஆயிரம் மக்கள் உரிமைக் கூட்டமைப்பின் சார்பில் வழங்கப்பட்டது. நிகழ்ச்சியில் பங்கேற்க நக்கீரன் ஆசிரியர் கோபால் மறுத்துவிட்டார். ராஜ்குமாரை இறுதியாக அழைத்துவந்த குழுவில் தான் இடம்பெறாத நிலையில் பாராட்டு விழாவில் பங்கேற்பது முறையல்ல என்ற காரணத்தினாலேயே கலந்துகொள்ளவில்லையென செய்திகள் தெரிவிக்கின்றன.

ஆறே மாதங்களில் கணினியை சரளமாக கையாள
Senith Computer Institute
★ சுவிற்சர்லாந்தில் கணினி கல்விநிலையமாக பதிவு செய்யப்பட்டுள்ளது.
★ கணினி அறிமுக வகுப்புக்கள் கட்டணமின்றி அமர்வுகளுடன் ஆரம்பமாகி 8 மாதகாலம் தொடர்ந்து நடைபெறும்.
★ மத்தியதர, உயர்தர [9–16 வயது] வகுப்புக்கள்
தொடர்புகளுக்கு:
Senith Computer Institute
Militar str-84, 8004 Zurich.
Tel: 01/242 73 60
Fax: 01/242 73 58
e-mail:senith@bluewin.ch

## வீரப்பனுடன் பேசியவர் கட்சியில் இருந்து வெளியேற்றம்

வீரப்பனுடன் பேச்சு நடாத்தச் சென்ற திராவிடக் கழகத்தைச் சேர்ந்த கொளத்தூர் மணி அக் கட்சியில் இருந்து வெளியேறியுள்ளார். கட்சியின் கட்டுப்பாட்டை மீறி வீரப்பனைச் சந்திக்கச் சென்றமையை அடுத்து இவரைக் கட்சியில் இருந்து நீக்கும் நடவடிக்கைகள் இடம்பெற்றன. இதனையடுத்து தானாகவே அக்கட்சியை விட்டு விலகுவதாகக் கடிதம் அனுப்பியதை அடுத்து, அவரது கடிதத்தை ஏற்றுக்கொண்டு கட்சியில் இருந்து விலக்கி உள்ளனர்.

## அப்துல் கலாமுக்கு அறிவியல் டாக்டர் விருது

இந்திய அணுசக்தி விஞ்ஞானியான அப்துல் கலாமுக்கு மதுரை காமராஜர் பல்கலைக் கழக சிறப்பு அறிவியல் டாக்டர் பட்டம் வழங்கியுள்ளது. கடந்த புதனன்று பல்கலைக் கழகத்தில் நடைபெற்ற 34வது பட்டமளிப்பு விழாவில் இவ் விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டுள்ளார். இவ் விருதினை தமிழக ஆளுநர் வழங்கியுள்ளார்.




# பேராசிரியர் சிவத்தம்பிக்கு வி.க.விருது

2000ம் ஆண்டுக்கான தமிழக அரசின் வி.க.விருது பேராசிரியர் கா. சிவத்தம்பிக்கு வழங்கப்பட்டுள்ளது. இதேவேளை, பாரதியார் விருது கவிஞர் வாலிக்கும், தந்தை பெரியார் விருது திருச்சி செல்வேந்திரனுக்கும், சம்பேக்கர் விருது முன்னாள் அமைச்சர் ராஜாங்கத்துக்கும், பாரதிதாசன் விருது பாவலர் மணிவேலனுக்கும் வழங்கப்பட்டுள்ளது. எதிர்வரும் டிசெம்பர் 24ம் திகதி தந்தை பெரியார் நினைவு நாளன்று சென்னையில் நடைபெறும் விழாவில் இவர்களுக்கான விருதுகள் வழங்கப்படவுள்ளன. விருதுக்கு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளவர்களில் கா.சிவத்தம்பி இலங்கையை சொந்த இடமாகக் கொண்டவர் என்பது குறிப்பிடத்தக்கது.

# தேசியத் தலைவருக்கு வாழ்த்து சென்னையில் சுவரொட்டிகள்

தமிழீழத் தேசியத் தலைவர் வே. பிரபாகரன் அவர்களின் பிறந்த நாளுக்கு வாழ்த்துத் தெரி




விக்கும் சுவரொட்டிகள் சென்னையில் ஒட்டப்பட்டுள்ளன.

'வீரம் அனைத்தும் தனதே உரித்தாக்கிய உலக மாவீரன் வாழியவே' என்ற முழக்கத்துடன், சென்னையின் பலபகுதிகளிலும் ஒட்டப்பட்டுள்ளன. தமிழ் இளைஞர் பேரவை என்ற பெயரில் இப்பிறந்தநாள் வாழ்த்துச் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன.

# படகு விபத்தில் 17 பேர் பலி

மேற்கு வங்கத்தில் படகு விபத்தொன்றில் சிக்கி 17 பேர் உயிரிழந்துள்ளனர். வடக்கு தினாஜ்பூர் மாவட்டத்தில் மகாநந்தா நதியிலேயே இவ்விபத்து நடந்துள்ளது. உயிரிழந்தவர்களில் 11 குழந்தைகள் அடங்கியிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. அதிக எண்ணிக்கையில் பயணிகள் ஏற்றப்பட்டதனாலேயே இவ்விபத்து ஏற்பட்டதாகவும் ஒன்பதுபேர் உயிர் தப்பியதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, ஜம்மு தோடா மாவட்டத்தில் உள்ள பேருந்து நிலையத்தில் வைத்துக் கடத்திச் செல்லப்பட்ட ஐவர் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. தாக்குதல் நிறுத்தம் அறிவிக்கப்பட்ட நேரத்திலேயே இச்சம்பவம் இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

Book a Flight
கொழும்பு, சென்னை சென்றுவர இந்திய விசா வசதிகளுடன் மிகக் குறைந்த விலையில் விமானச் சீட்டுக்கள்!
Siva Travel
Worldwide Travel Service
பிரயாண காப்புறுதி! தமிழ் நாட்டு சுற்றுலா ஒழுங்குகள், மற்றும் விசா ஒழுங்குகளும் செய்து தரப்படும்
மிகக் குறைந்த விலையில் விமானச் சீட்டுக்கள்
Tel: 031 318 44 60
Natel 079 622 46 61
Fax: 031 318 44 61
Eamil: info@sivatravel.ch
SIVA TRAVEL AND FINANCE (PVT) LTD
Spitalgasse- Passage 16,
3011 BERN
Pub

T.M. SIVA
★ ஆயுட்காப்புறுதியுடன் இணைந்த சேமிப்புத் திட்டங்கள்
★ பங்குச் சந்தையில் முதலீடு
★ வாகனங்களுக்கான காப்புறுதிகள்
★ வங்கிக் கடன்கள்
மற்றும் சகல காப்புறுதிகளுக்கும்
T.M. SIVA
Case Postale
1032 Romanel
SWITZERLAND
Mobile: 079.637.81.11
Tel&Fax: 021.648.69.11
E.Mail:
sawmia@hotmail.com

உழவர் தினத்திற்குப் பதிலாய்
புதிய தொலைக்காட்சி உதிக்கும் தினத்தை
பொங்கல் என - இனி நாம்
பெயரிட்டு அழைத்தால் என்ன?



ttn

ttn

பொங்கல் நாள் முதல் ஐ.பி.சீ. – ரீ.ஆர்.ரீ. இணைந்த

தமிழ்த் தொலைக்காட்சி இணையம்

Tamil Television Network

அதுவரை புதிய பல தொடர்புகளுடன் ரீ.ஆர்.ரீ. தமிழ் ஒளியூடாக உங்களுடன்....

இவ் வாரம் தமது பிறந்த தினத்தைக் கொண்டாடும் செல்வன் சர்வேஸ்வரன் ஜெயவர்மன், செல்வி ஆரணி ஆனந்தராசா, செல்வன் ஸ்ரீகாந்தன் ஜெனனன், செல்வி வைதேகி தம்பிராஜா ஆகியோரை பல்கலையும் கற்றுச் சிறப்புடன் வாழ்கவென குட்டி மாமாவும் மற்றும் சிறுவர் முற்ற சகோதர சகோதரிகளும் வாழ்த்துகிறோம்.

## உங்கள் கைவண்ணம்



### உதயகுமார் ரனுசன்

**இடம்:** ஜேர்மனி
**வயது:** 05 (17.12.1995)
**பொழுதுபோக்கு:** விளையாடுதல், தொலைக்காட்சி பார்த்தல்
**உறுப்பினர் எண்:** G:126



### கெங்காதரன் சாரங்கன்

**இடம்:** ஜேர்மனி
**வயது:** 05 (02.03.1995)
**பாடசாலை:** தமிழாலயம்
**பொழுதுபோக்கு:** படம் வரைதல், தொலைக்காட்சி பார்த்தல், விளையாடுதல்
**உறுப்பினர் எண்:** G128








### ஸ்ரீ.லக்ஷிகா

**இடம்:** ஒஸ்லோ-நோர்வே
**வயது:** 09 (28.09.1991)
**பாடசாலை:** அன்னை பூபதி கலைக்கூடம்
**உறுப்பினர் எண்:** N112

### மாவீரர் நாள்

மாவீரர் நாள் கார்த்திகை 27ம் திகதி ஆகும். அன்று எம் தாய் நாட்டிற்காக தம் இன்னுயிரை அர்ப்பணித்த எம் தேசத்தின் புதல்வர்களை நாம் நினைவு கூர்ந்து தொடர்ந்தும் உறுதியுடன் போராடவும் பங்களிப்புச் செய்யவும் உறுதி எடுத்துக்கொள்ளும் ஓர் தியாகத் திருநாள் ஆகும். எமது தாயக விடுதலைப் போரின் முதல் வித்தாகிய மாவீரன் லெப்.சங்கரின் நினைவு நாள் ஆகிய கார்த்திகை 27ம் திகதி கொண்டாடப்படுவது மாவீரர் நாள் ஆகும். ஆயினும் 25ம் திகதியில் இருந்து 27ம் திகதி வரை மாவீரர் வாரமாக கொண்டாப்படுகின்றது.







## கதை முற்றம்

திகில் நிறைந்த கடற் பயணம் 16

# றொபின்சன் குருசோ

இருவரும் எனது முதலாவது வீட்டிற்குச் சென்றதும், வெள்ளிக்கிழமைக்கு ஒரு காற்சட்டையும், கோட்டும், ஒரு தொப்பியினையும் கொடுத்தேன். அவனுக்கு அந்த ஆடைகள் வினோதமாகவும், விருப்பமாகவும் இருந்தன. பின்பு அவன் நித்திரை செய்வதற்காக சிறிய கூடாரத்தையும் அமைத்துக் கொடுத்தேன். நான் தனியாகவே நித்திரை செய்வேன். எப்போதும் எனது துப்பாக்கியை என்கூடவே வைத்திருப்பேன். காரணம் வெள்ளிக்கிழமையும், மனிதரைப் புசிக்கும் இனத்தைச் சேர்ந்தவன் என்பதை நான் பின்னரே புரிந்துகொண்டேன். எனது துப்பாக்கிக்கு வெள்ளிக்கிழமைக்கு சரியான பயம். சில வேளைகளில் எனது துப்பாக்கியுடன் அவன் கதைப்பான். தன்னை கொலை செய்துவிட வேண்டாம் எனக் கெஞ்சுவான்.



வெள்ளிக்கிழமை விரைவிலேயே ஆங்கிலத்தைக் கற்றுக் கொண்டான். என்னுடன் தோட்டத்தில் வேலை செய்யவும், எனது ஆடுகளை பராமரிக்கவும் கற்றுக் கொண்டான். நான் எனது நாட்டைப் பற்றியும், எனது பிரயாணத்தைப் பற்றியும் அவனுக்குச் சொல்வேன், அவனும் தனது நாட்டைப் பற்றிச் சொல்வான். நாம் இருவரும் மூன்று வருடங்கள் ஒன்றாக வாழ்ந்தோம். ஒருநாள் இருவரும் ஒரு சிறிய மலையின் மேல் நின்றுகொண்டிருந்தோம். திடீரென வெள்ளிக்கிழமை மேலும் கீழுமாக துள்ள ஆரம்பித்துவிட்டான். என்ன நடந்தது என வினாவினேன்? தொலைவிலே தனது தீவு தெரிவதாகச் சொன்னான். ஆம் வடமேற்குத் திசையில் ஒரு தீவு கண்களில் தென்பட்டது. பின்னர் தான் நான் அறிந்துகொண்டேன். அத்தீவு திரினிடா தீவு எனவும், நான் வசித்த தீவு தென் அமெரிக்காவின் வடக்கே உள்ள ஒறினோகோ ஆற்றில் வாய்புறத்தில் இருந்த தீவிலேயே நான் வாழ்ந்தேன் எனவும் அறிந்தேன். தீவில் இருந்து தப்பிச்செல்ல வேண்டும் என்ற எண்ணம் எனக்கு மீண்டும் தோன்றியது. வெள்ளிக்கிழமைக்கும் தனது தீவிற்குப் போக வேண்டுமென்ற ஆர்வம் ஏற்பட்டது. நான் வெள்ளிக்கிழமையின் தீவிற்குச் சென்றால் வெள்ளிக்கிழமை தொடர்ந்தும் எனது நண்பனாக இருப்பானா? அல்லது அவனுடைய மக்கள் என்னை கொலை செய்து புசிப்பார்களா? என்று பல கேள்விகள் எண்ணங்கள் தோன்றி மறைந்தது. நான் ஏற்கனவே தயாரித்த எனது பெரிய படகை வெள்ளிக்கிழமைக்குக் காட்டினேன். அது மிகவும் பழையதாகிப்போய் இருந்தது. அத்துடன் சிறிய துவாரங்களும் படகில் காணப்பட்டது. இப்படகில் உனது தீவிற்கு போகமுடியுமா என வெள்ளிக்கிழமையிடம் வினாவினேன். அவன் ஆம் என உறுதியாகக் கூறினான். இப்படகில் எம்முடன் இன்னும் உணவுப் பொருட்களையும் ஏற்றிச் செல்லலாம் எனவும் கூறினான்.

எனக்கு என்னவோ அவனுடன் சேர்ந்து அவனுடைய தீவிற்குப் போக பயமாக இருந்தது. நான் அவனைப்பார்த்து 'நாம் இதைப்போன்று இன்னுமொரு படகை தயாரிப்போம் நீ அதில் வீட்டிற்குப் போ' என்றேன். அவன் அதை விரும்பவில்லை. 'நீங்கள் ஏன் என் மேல் கோபமாக இருக்கிறீர்கள், நான் உங்களுக்குப் பிடிக்காதது ஏதாவது செய்துவிட்டேனா? ஏன் என்னை வீட்டிற்கு அனுப்புகிறீர்கள்? என வெள்ளிக்கிழமை மிகுந்த துக்கத்துடன் கேட்டான். இல்லை நீ உனது வீட்டிற்குப்போக விரும்புவதாக நான் நினைத்தேன். அதனால்தான் நான் அவ்வாறு கூறினேன் எனப் பதிலளித்தேன். ஆம் நான் வீட்டுக்குப் போக விரும்புகிறேன் எனினும், உங்களை விட்டுப்போக மாட்டேன். என்னை கொலை செய்ய விரும்பினால் கொலை செய்யுங்கள் ஆனால் என்னை தனியே அனுப்பவேண்டாம் என்றான்.

நானும் அதற்குச் சம்மதிக்கவே இன்னும் பெரிய படகை தயாரிக்கத் திட்டமிட்டோம். வெள்ளிக்கிழமையிடம் படகிற்கான மரத்தையும், படகை வடிவமைக்கும் பொறுப்பையும் ஒப்படைத்தேன். என்னை விட அவனுக்கே இத்துறையில் அனுபவம் அதிகம். இருவார கடின உழைப்பின் பின் ஒரு அழகிய படகைப் பெற்று எமது நீண்ட தூரப் பயணத்திற்குத் தயாரானோம்.

*பயணம் தொடரும்...*



### யோ.ரதீனா

**இடம்:** சுவிஸ்
**வயது:** 13 (17.12.1987)
**பாடசாலை:** துர்கா தமிழ் வித்தியாலயம்
**உறுப்பினர் இல:** S101

### மாவீரர்

*தமிழீழ மண்ணின் மைந்தர் இவர்கள் பாரடா*
*மாவீரரான கதையைக் கொஞ்சம் கேளடா*
*வளர்ந்து வரும் பரம்பரைக்கு கொஞ்சம் கூறடா*
*அவர்கள் வந்த பாதையில் நீயும் வந்து சேரடா*

*தம்பி பிரபா சேனையில் தளபதியாய் வந்தவர்*
*தமிழீழ எல்லையிலே காவலுக்காய் நின்றவர்*
*திடமுடன் சிங்களத்தை எதிர்த்து நின்று*
*தமிழினத்தைக் காத்தவர்*
*தீக்குண்டு உடம்பில் ஏற்றி*
*செந்தமிழுக்காய் செந்தணலாய்ப் போனவர்*

*துன்பமுற்ற எம்மினத்தின் துயரம் துடைக்க -*
*காற்றிலே*
*தூசுதூசாய்ப் போனவர்*
*தென்றலென தவழ்ந்து வந்து -எம் நெஞ்சில்*
*தேனை அள்ளி வார்த்தவர்*

*எத்தனையோ இன்னல்களை இன்பமாக*
*ஏற்றுக் கொண்டவர்*
*எம் இதயமுள்ளவரைக்கும் - இவர்கள்*
*தமிழீழ நாட்டின் மன்னவர்*

*மண்டியிட மாட்டோம் நாம் மறத்தமிழர்*
*மாற்றான் வந்தாள விடமாட்டோம்*
*நம் மண்ணை என்று*
*தமிழீழ மண்ணுக்காய் மண்ணாகிப்போன*
*இவர்கள் மாவீரர்! மாவீரர்!*

## கண்டு பிடியுங்கள்

கீழே இடதுபக்கம் உள்ள சொற்களுக்குப் பொருத்தமான சொல் வலது பக்கம் உள்ளது. ஆனால், குழம்பியுள்ளது. குழப்பத்தை நீக்குங்கள் பார்க்கலாம். முடியாவிட்டால் அடுத்தவாரம் விடையை சரிபார்த்துக்கொள்ளுங்கள்.

| | |
|---|---|
| 1. மாவீரர் நாள் | அறிவுச்சோலை |
| 2. திலீபன் | தமிழீழத் தலைநகர் |
| 3. பனைமரம் | மிகப்பெரிய இடப்பெயர்வு |
| 4. பூநகரி | சங்கர் |
| 5. அன்னை பூபதி | கற்பகதரு |
| 6. திருமலை | குட்டிக் கண்ணன் |
| 7. சூரியக்கதிர் | தமிழ் |
| 8. காந்தரூபன் | மாமாங்கம் |
| 9. ஆண்டாண்டு காலமதாய்... | தவளைப் பாய்ச்சல் |
| 10. தாய்மொழி | அமைதிப்படை |

# கரும்புலிகள்

கண்ணிமைக்கும் நேரத்தில்
காற்றாகிப்போகும்
காவிய நாயகர்கள்
கரும்புலிகள்

தீப்பந்தாகக் கனன்றபடி
விண்ணோக்கிச் செல்லும் எங்கள்
தேசத்தின் காப்பரண்கள்

மனித நேயங்கள்
மதிக்கப்படாத போது
மனிதக் குண்டுகளாய்
மாறிக் கொள்பவர்கள்

மாற்றானின் மடியருகில் சென்று
கூற்றுவனை முதுகில் தட்டி
குசலம் விசாரிப்பவர்கள்

எங்கள் அடையாளங்களை
நிலை நிறுத்துவதற்காக
தங்கள் அடையாளங்களை
விலையாய்க் கொடுப்பவர்கள்

எங்கள் மண்ணில்
வர்ணங்கள் பூப்பதற்காக
தங்கள் வாழ்வை
மர்மங்களால் நிறைத்துக் கொள்பவர்கள்

முகம் தெரியாமலே
மறைந்துபோன இவர்கள்
சில சமயங்களில்
சுவரொட்டிகளிலும் கூடத்
தலை காட்டுவதில்லை

ஊருலகம் அறிந்திடாத
மண்ணின் மைந்தர்கள் – இவர்கள்
ஓரிரண்டு பேருக்குள்ளே
உறங்கும் உண்மைகள்

- தீட்சண்யன்

# தனிமனித சரித்திரங்கள்...

அடுத்த நேரச் சாப்பாட்டுக்கே வழியற்ற ஒரு ஓலைக்குடிசையில் இருந்து இயக்கத்திற்கு வந்தவன் அவன். இப்போது ஒரு கரும்புலி நடவடிக்கைக்காகப் போயிருந்தான்.

எதிரியின் இதயத்தில் தான் அவனுடைய இலக்கு. எனவே, அந்தச் சூழலோடு ஒன்றிப்போய்... அதற்கே உரியவனாகத் தன்னை அவன் இனங்காட்டிக்கொள்ள வேண்டியிருந்தது. அத்தகைய தோற்றப்பாட்டை கொடுத்தாலே தனது நோக்கத்தை அவன் வெற்றிகரமாக நிறைவேற்ற முடியும். அந்தத் தள நிலைமையோடு அவன் சந்தேகமறச் சங்கமிக்க, பணத்தைப் புரளவிட வேண்டியிருந்தது.

அந்த ஏழை வீரனது கையினால் செலவு செய்யப்பட்ட பணத்தின் தொகை பெரியது. அதன் நோக்கத்தைப் போலவே...

ஒவ்வொரு சதத்திற்கும் கணக்கு காட்டவேண்டிய இயக்கத்தில், இலட்சக்கணக்கான ரூபாய்களுக்கு கணக்கற்ற செலவு அது. அந்தப்பணி அப்படியானது...



அதனால் தான் காட்டப்படாத கணக்குகள் பற்றி கேட்கப்படாமலேயே, கேட்கப்படுகின்ற பணம் அவனுக்கு கொடுக்கப்பட்டது. வந்துபோகும் நேரங்களில், அங்க கொடுத்தன்... இங்க கொடுத்தன்... என்று அவன் வாயால் சொல்வது மட்டுமே அந்த இலட்சக் கணக்கான ரூபாய்களுக்குக் கணக்கு. நம்பிக்கை மட்டுமே நம்பிக்கையாயிருந்தது.

எல்லா ஏற்பாடுகளும் நிறைவாகிய பின், தாயகத்தில் இருந்து அவன் இறுதிப் பயணம் புறப்படத் தயாராகிவிட்ட ஒரு அதிகாலையில்... அம்மாவிடம் போனான். சொரிந்து கொண்டிருக்கும் திண்ணையில் ஓரமாக உட்காந்திருந்தாள் அம்மா. சோர்ந்து போயிருந்தாள். காலைத் தேனிருக்கு என்ன செய்யலாம் என்று தான் யோசித்துக் கொண்டிருப்பாளாக்கும்...?

பிள்ளையைக் கண்டதும் பூரித்துப் போனாள். துடித்துப் பதைத்து எழுந்தோடி வந்து, இரு கைகளாலும் கன்னங்களைத் தடவி அழைத்துப் போனாள். எல்லாப் பக்கத்தாலும் பிய்ந்து போயிருந்த ஒரு பனையோலைப் பாயில் நித்திரை கலையாமல் சுருண்டு கிடந்தாள் ஆசைத் தங்கச்சி. பார்க்கவே தெரிந்தது நிச்சயமாக அவள் இரவு சாப்பிடவேயில்லை என்பது.

அருகில் போயிருந்து தலையை வருடிவிட்டபோது நெஞ்சுக்குள் என்னவோ செய்தது.

எப்போதாவது வருகிற பிள்ளை, எவ்வளவு காலத்திற்கு பிறகு இப்போது வந்திருக்கிறான்... ஏதாவது செய்து குடுப்பமென்றால் கூட... அம்மா உள்ளுக்குள் குமுறியிருப்பாள்...

கடைசியாக அம்மாவின் கையால் ஒரு சாப்பாடு. அதற்காகத் தானே பிள்ளையும் பாசத்தோடு ஓடிவந்தான். ஆனால், வீட்டிலை எதுவும் இருக்காது என்பதும் அவனுக்குத் தெரியாதா என்ன?

என்றுமில்லதவாறு சட்டைப்பைக்குள் இருந்து கொஞ்சக் காசு எடுத்துக் கொடுத்தான். நல்ல சாப்பாடாகச் செய்யணை... சாப்பிடுவம்...

அம்மாவுக்கு விசித்திரமாக இருந்தது...! ஏனென்றால், அதற்கு முன் ஒருபோதும் மகன் அப்படித் தந்ததில்லை. சமைத்து முடிந்து அம்மா ஊட்டிவிடச் சாப்பிட்டு, அவன் விடைபெறத் தயாரானான்.

கடைசி விடைபெறல்... அம்மாவுக்கு அவன் தந்த முத்தம் அப்படித்தான். வறுமை உந்தித்தள்ளிய போதும், கேட்கக்கூடாது என்பதை உள்ளுணர்வு சொல்லியது... என்றாலும்... தயங்கித் தயங்கி வந்து அந்த ஏழை அம்மா கேட்டாள்...

இன்னொரு ஐநூறு ரூபாய் தந்துவிட்டு போமோனை...

அம்மாவை நினைத்தபோது, விழியோரம் கசிந்த நீரை அவன் மறைத்திருக்கக் கூடும். பரிவோடு கேட்ட அம்மாவுக்கு அவன் சொன்னான்.

'இது நாட்டின்ரை காசம்மா... தரமாட்டன்... கேளாதையணை...'

சொல்லிவிட்டு அவன் போனான். போய்விட்டான்...

அம்மாவுக்கு எதுவுமே தெரியாது... பாவம்...!

# கடலோடு கரைந்த கடற் கரும்புலி

மகனைப் பார்த்து எவ்வளவு காலமாகிவிட்டது ! இப்ப எப்படி இருப்பானோ...? அம்மாவுக்கு ஏக்கம்.

மூன்றாண்டுகளுக்கு முன்பு திரும்பவும் சிங்களவர்கள் தாக்கத் துவங்கியபோது, புலிக்கு... என்று புறப்பட்டுப் போனவன்தான். அதன் பிறகு அவர்கள் ஒருநாள் கூட அவனைக் காணவில்லை.

இடையில் ஒருநாள்...

சண்டை ஒன்றில் மைன்ஸ் வெடித்து பிள்ளைக்கு கால் போய்விட்டதாம் என்ற துயரச் செய்தி அம்மாவுக்கு எட்டியது. அம்மாவின் கண்களில் அருவி... வேதனையால் துடித்துக் கொண்டிருப்பானே...? அம்மா...! என்று அழுவானோ...? அவள் மகனையே நினைத்துக் கொண்டிருப்பாள். கொஞ்ச நாட்களாக அம்மாவின் இரவுகள் தூக்கமற்று நீண்டு கழிந்தன.

காலம் அசைந்தது...

பிள்ளை இப்ப யாழ்ப்பாணத்திலையாம்... கடற்புலியாக கிளாலியிலை நிக்கிறானாம்... சிங்கள நேவியிட்ட இருந்து சனங்களை காப்பாத்துகிற வேலையாம்... அவர்கள் அறிந்தார்கள்.

எவ்வளவு காலமாகிவிட்டது....? எப்படி இருக்கிறானோ...? மகனைப் பார்க்க அம்மா ஆசைப்பட்டாள். பாசமும், ஆவலும் அவளை அவசரப்படுத்தின. சோதனைச் சாவடிகள், இராணுவக் கெடுபிடிகள், கொச்சைத் தமிழில் துளைத்தெடுக்கும் கேள்விகள். கிரானில்(மட்டக்களப்பு) தொடங்கி தாண்டிக்குளத்தில் முடிந்த துயரப் பயணத்தின் இறுதியில் அம்மா யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தாள்.

மட்டக்களப்பு தொடர்பகத்தில் பெயரைப் பதிந்து, பிள்ளைக்கு தகவல்



கடற் கரும்புலி
மேஜர் வரதன்

அனுப்பிவிட்டு ஆவலோடு காத்திருந்தாள். தங்கியிருந்த வீட்டின் வாசலையே பார்த்துக் கொண்டிருக்க, ஒருநாள் கடந்து போனது... ஆனால் மகன் வரவில்லை.

கிளாலியில் நேவிக்கு கரும்புலித் தாக்குதல் நடந்ததாம்.... கனக்க நேவியும் முடிஞ்சுதாம்... என்ற செய்தி மட்டும் வந்தது. எல்லோருக்கும் சோகம் கலந்த மகிழ்ச்சி. அம்மாவுக்கும்தான். மாலையானதும் பரபரப்பாகப் பேசப்பட்ட அந்தச் செய்தியைத் தாங்கி, ஈழநாதம் விசேட பதிப்பு அம்மாவின் கைகளிற்கு வந்தபோது... அந்தப் படங்கள்...! அந்தப்படம்...! அம்மா உற்று உற்றுப் பார்த்தாள்... கண்கள் இருண்டன...! உடல் விறைத்துப் போனது. நம்பவே முடியவில்லை. அம்மாவின் பிள்ளை... வரதன்... அவன்தானா என்று பெயரை மீண்டும் மீண்டும் பார்த்தாள். ஆம்... அது அம்மாவின் பிள்ளையேதான். அள்ளி அணைத்து முத்தமிட ஆசையோடு ஓடோடி வந்தாளே... அந்தப் பிள்ளைதான்... கறியில்லாமல், காசில்லாமல் அடுப்பெரியாத நாட்களில், சோறு காய்ச்சணை கறியோட வாறன் என்று துவக்கெடுத்துப் போவானே... அதே மகன்தான்!

வீதியில் சிங்களப்படை மறித்து, கைக்குண்டை கையில் கொடுத்து வாய்க்குள்ள போடடா... என்றபோது, விருப்பமெண்டா உன்ர வாய்க்குள்ள போடு... என்று துணிவோடு திருப்பிக் கொடுத்துவிட்டு வந்தானே... அதே மகன்தான்...

சோகத்தோடு அணைத்து நிற்கும் தலைவனுக்கருகில் பூரிப்போடு சிரித்து நின்றான் அந்தக் கரும்புலி.

தாங்க முடியாத பெரும் சுமையாய் துயரம் நெஞ்சை அழுத்த அம்மா அழுதாள். கவலையைத் தீர்க்க கண்ணீர் தீரும்வரை அழுதாள்.

# தாய் மடிவிட்டு தாயக விடிவில்

திலகம் என்றுமில்லாதவாறு விடியற்காலையிலேயே எழுந்து குளித்துச் சமைக்கத் தொடங்கிவிட்டாள். 95ம் ஆண்டு யாழ்ப்பாணத்தைவிட்டு மக்கள் இடம்பெயர்ந்தபோது திலகத்தின் குடும்பமும் சூப்பி எறிந்த பனங்கொட்டைபோல ஏதுமற்றவர்களாக வன்னி மண்ணில் வந்து விழுந்தார்கள். எங்குபோவது? என்ன செய்வது? என்று தெரியாது நின்றபோது, அடைக்கலம் கொடுத்த பூமி அல்லவா வன்னி. அம்மண்ணை வணங்கி வாழ்க்கையை அங்கு தொடங்கினார்கள். நாட்டில் ஏற்பட்ட இந்த நிர்க்கதியான நிலை புருசன் இல்லாமல் குடும்பத்தை ஓட்டிய திலகத்தை மற்றவர்களைவிட பெரிதாகப் பாதித்த்து என்பது மறுக்க முடியாத உண்மை. கைம்பெண் ஒருத்தி குடும்பத்தைச் சுமப்பது என்பது அவ்வளவு சுலபமான காரியமா? என்ன?

வித்தியாதரனுக்குப் பிறகு இரண்டு பெண் பிள்ளைகள் என மூன்று பிள்ளைகளுடன் அவர்கள் குடும்பம் சிறப்பாக வாழ்ந்துவந்தது. திலகத்தின் புருசன் திருநாவுக்கரசு வித்தியாதரன் என பெயர்வைத்ததே அவனை கல்விவேள்வியில் சிறந்தவனாக்க வேண்டுமென்ற நோக்கத்தில்தான். நினைப்பதெல்லாம் நடக்கிறதா என்ன? நாம் ஒன்றை நினைக்க தெய்வம் வேறொன்றை அல்லவா நினைக்கிறது. யுத்தத்தின் தீவிரத்தில் அகோர செல் வீச்சுக்கள் மக்களை திணறடித்துக் கொண்டிருந்தவேளை அது, வேலையால் வீடு திரும்பிக்கொண்டிருந்த திருநாவுக்கரசை எங்கிருந்தோ வந்த செல் பதம் பார்க்க ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டவர், வீடு திரும்பாமலேபோன கதை மறக்க நினைத்தாலும் மறக்க முடியாத ஒன்று. அன்று ஆஸ்பத்திரியில் சாகக்கிடந்தபோதும், திருநாவுக்கரசு திலகத்திடம் 'பிள்ளைகளை நல்லாய் படிப்பிச்சுபோடு, எல்லா செல்வமும் அழிஞ்சுபோடும் கல்வி மட்டும் யாராலும் அழிக்கமுடியாது. அதுதான் கடைசி வரைகூட வரும்' என்றது இன்றும் திலகத்தின் காதில் ஒலித்துக்கொண்டுதான் இருக்கிறது. ஆனால் என்ன செய்யமுடியும் உயிரைப் பிடித்து வைத்துக் கொண்டிருப்பதே கஸ்டமாக இருக்கும்போது கல்வியெல்லாம் இரண்டாம் பட்சமாகிவிட்டது எம் இனத்துக்கு என்பது வானுலகில் உறையும் அவருக்கு தெரிகிறதோ என்னமோ!

திருநாவுக்கரசர் அரச உத்தியோகத்தில் இருந்ததால் திலகத்திற்கு பென்சன் கிடைத்தது. அதைவைத்து அந்த நான்கு ஜீவன்களும் தம் வயிற்றைக் கழுவிக்கொண்டனர். யாரிடமும் கடன்படுவது என்பது திலகத்துக்கு பிடிக்காத ஒன்று. எந்தக் காரணத்திற்காகவும் யாரிடமும் கடன் கேட்கமாட்டாள். இது சிலருக்கு அவளை செருக்குப்பிடித்தவள் என்று சொல்லவைத்தது. 'யார் என்ன சொன்னாலும், நாம் செல்வது நேர்வழியாக இருந்தால்சரி' என்பது திலகத்தின் வாதம். கிடைத்த பென்சனும், வளவில் உள்ள தென்னை மரத்துத் தேங்காய் விற்றுவரும் பணமும், கிடுகுவிற்றுவரும் பணமும், முருங்கை மரத்து முருங்கைக்காய் விற்றுவரும் பணமும் ஆடம்பரமில்லாமல் அமைதியாய் குடும்பத்தை ஓட்டப் போதுமானதாக இருந்தது. பிள்ளைகளும் படிப்பில் படுசுட்டிகளாகவே இருந்தார்கள். திலகமும் நம்பினாள் அப்பாவின் ஆசை விரைவில் நிறைவேறுமென்று. ஆனால் தெய்வம் வேறுவிதமாகவல்லவா நினைத்துக்கொண்டது.

திருநாவுக்கரசு இறந்தபோது வித்தியாதரன் வீட்டு முகட்டைப் பார்த்து யோசித்துக்கொண்டு இருந்தான். அவனைப் பார்க்கத் திலகத்திற்குப் பயமாக இருந்தது. பெடியன் யோசித்து ஏதாவது ஆகிவிட்டால் எனப் பயந்தாள். வருவோர் போவோரிடம் வித்தியாதரனுக்கு ஆறுதல் சொல்லுங்கோ என தன் கவலையிலும் கூறிக்கொண்டிருந்தாள். வந்தவர்களும் அவனுக்கு ஆறுதலும், புத்திமதியும் கூறினார்கள். 'நீ ஆம்பிளைப்பிள்ளை குடும்பத்தை நீ தான் பார்த்துக்கொள்ளவேண்டும்' என்று மாறி மாறி சொல்லிக் கொண்டிருந்தார்கள். தலையை ஆட்டி ஓம் என்று மௌனத்தால் விடை பகிர்ந்து கொண்டிருந்தவன் மனத்தில் 'இந்த ஒரு குடும்பம் மட்டுமல்ல பலகுடும்பங்களை வாழவைக்க வேண்டிய பொறுப்பு எனக்கும் இருக்கிறது' என முடிவெடுத்துக் கொண்டான். 95 இல் ஏற்பட்ட இடப்பெயர்வு அவன் எண்ணத்தை, கனவை நிஜமாக்கியது. ஆம் வலிகாமத்தில் இருந்து மக்கள் எல்லாரும் கையில் கிடைத்த பொருட்களுடன் இடம்பெயர்ந்தபோது திலகத்தின் குடும்பமும் மக்களோடு மக்களாகத் தென்மராட்சிக்கு இடம்பெயர்ந்தனர். அங்கு கஸ்ரப்பட்டுக்கொண்டிருந்ததைப் பார்க்கமுடியாத வித்தியாதரன் 'இங்கு இருக்கச் சரிவராது போல கிடக்கிது, வெளிக்கிடுங்கோ உங்களை வன்னியில் கொண்டுபோய் விடுகிறன் என்றான்' திலகத்திற்கு அது அவ்வளவாக விருப்பமில்லை. யாழ்ப்பாணத்திலேயே பிறந்து, வளர்ந்து, வாழ்ந்த சொந்த மண்ணைவிட்டுப் பிரியமனம் இடம் தரமறுத்தது, மகனிடம் எப்படி சொல்லுவது என்று தயங்கித் தயங்கி 'த..ம்...பி வன்னியில் யார் இருக்கினம் அங்கைபோய் இருக்கிறதுக்கு' என்று திகலம் பின்னுக்கு நின்றாள்.

'அம்மா எல்லாரும் தெரிஞ்ச ஆட்கள் இருக்கினம் என்றே போகினம், ஏதோ உயிரை கையிலைபிடிக்கத்தானே ஓடினம். நாங்களும் போவம், ஊரோடை ஒத்ததுதானே, பிறகு ஏதோ கடவுள் விட்டவழி' என்று வித்தியாதரன் ஒரே பிடியாக தாய் சகோதரங்களை வன்னியில் கொண்டுவந்து சேர்த்தான்.

திலகத்துக்கு முதலில் புது இடம் பழக்கப்பட கஸ்டமாகத்தான் இருந்தது. பிறகு தெரிந்த ஆட்கள் எல்லாரையும் பார்க்கப் பார்க்க எல்லாம் பழகிவிட்டது. ஆனால், வித்தியாதரன் போக்கில் தான் மாற்றம் தெரிந்தது. முந்திய மாதிரி அவன் கலகலப்பாக இல்லை. எப்போதும் ஏதோ இழந்துவிட்ட சோகம் அவன் முகத்தில் தெரிந்தது. படிப்புகளும் இல்லாமல் வீட்டில் எப்படித்தான் இருப்பது. வீட்டைவிட்டு வெளியில அடிக்கடி போய் வரத் தொடங்கினான். யார் யாரோ தெரியாத பெடியள் எல்லாம் வந்து போனார்கள். 'என்னடா தெரியாதவன்கள் எல்லாம் வந்து போறான்கள் யாரடா?' என்று திலகம் கேட்கவும், 'என்ன தெரிந்த இடத்திலேயே இருக்கிறம் தெரிந்தவன்கள் வந்துபோக, தெரியாதவைதான் வருவினம் சும்மா இருங்கோ' என்று கோபமாகக் கத்தினான். அவன் இப்படி கத்தி ஒருத்தரும் அறியவில்லை. எல்லாரும் வாய் அடைத்துப்போனார்கள். அதற்குப்பிறகு திகலம் வித்தியாதரனிடம் அதுபற்றிக் கேட்பதில்லை. அடுத்து வந்த நாட்களில் அவன் வீட்டுக்கு வர நேரம் செல்லத் தொடங்கியது. ஏமத்தில் சாமத்தில் வரத்தொடங்கினான். திலகத்தின் அடிமனத்தில் ஒருவித அச்சம் தலைதூக்கியது. ஏதோ நடக்கப்போகிறது என மனம் சொல்லியது. அது நிஜமும் ஆகியது. ஒருநாள் வெளியில் போன வித்தியாதரன் சாமமாகியும் வீடு திரும்பவில்லை. கதிகலங்கிப் போனாள் திலகம். அக்கம்பக்கத்தில் உள்ளவர்களெல்லாம் கூடி தமக்குத் தெரிந்த மாதிரி ஒவ்வொருவரும் ஒவ்வொன்றை கதைக்கத் தொடங்கினார்கள். ஒரு சிலர் 'இதுவேறொன்றும் இல்லை ஆமிக்காரன்கள்தான் பிடித்திருக்கவேண்டும்' என்றதும், 'அது எப்படி ஆமி பிடிக்கமுடியும்' என வேறு சிலர் கேள்வி தொடுத்தனர். பெடியள் சைக்கிளிலை மைல் கணக்கிலை ஓடியிருப்பான்கள், எங்கேனும் பதுங்கி இருந்த இராணுவம் பிடித்திருக்கும் என கதையளந்தார்களே தவிர ஒருத்தரும் ஆறுதலாய் நாலுவார்த்தை கூறுவம் அல்லது தேடிப்பார்ப்பம் என்று எண்ணுவதாக தெரியவில்லை. எங்கு போய் யாரைக் கேட்பது, எப்படி கேட்பது, என்னவென்று கேட்பது, எப்படி விசாரிப்பது எனத் தெரியாமல் திலகமும் திலகத்தின் மகள் மாரும் தவித்துக்கொண்டு இருந்தார்கள். அப்போது ஒரு மோட்டார் சைக்கிள் வந்துநின்றது. அதில் வந்த ஒரு தம்பி 'இங்கு திலகம் என்..கிறது..யா..ர்' என்று மெதுவாகத் தயங்கித் தயங்கி கேட்டார். உடனே திலகம் தனது பிள்ளைக்கு என்னமோ ஏதோ என்று அழத்தொடங்கிவிட்டாள். 'இந்தாங்கோ இந்தக் கடிதத்தை உங்கள் பிள்ளை குடுத்துவிடச் சொன்னவர்' என்று ஒரு கடிதத்தைக் கொடுத்துவிட்டுச் சென்றார். கடிதத்தை வாசிக்க வாசிக்க திலகத்துக்கு தலையைச் சுற்றிக்கொண்டு வந்தது. தலைசுற்றி விழுந்த திலகத்தை மகள் ஓடிவந்து பிடித்துக்கொண்டாள். இரண்டாவது மகள் கடிதத்தை வாசித்துப் பார்த்தாள். அண்ணன் இயக்கத்துக்குப் போய்விட்டான் என்பது ஊர்ஜிதமாகியது.

ஆம் அன்று இயக்கத்துடன் இணைந்தவன் ஐந்து வருடங்களின் பின் இன்றுதான் முதன் முதலாக வீட்டுக்கு வரப்போகிறான். திலகம் சும்மா இருப்பாளா என்ன? தாய் பாசம் என்றால் சும்மாவா?- அருமையாய், பெருமையாய், அன்பாய், ஆசையாய் பெற்றமுதல் பிள்ளை, அதுவும் வீட்டுக்கு



ஒரேயொரு ஆண்வாரிசு ஐந்து வருடங்களின் பின் இன்று வீடு வருகிறான். அதுதான் இன்றைய மும்முரமான சமையலுக்கு காரணம். 'மரக்கறிகளைக் கெதியாய் வெட்டித்தாங்கோ பிள்ளைகள் காலமை எட்டு மணிக்கு முன்னமே சமைச்சுப்போட வேணும், பிறகு தம்பி வந்திருக்கேக்கை சமைத்துக்கொண்டிருந்தால் தம்பியோடும் கதைக்க ஏலாது, உழுந்து ஊறப்போட்ட நான் ஊறிட்டால் கழுவிப்போட்டு அமுதம் அக்காவின்ரை ஆட்டுக்கல்லில் ஒருக்கா ஓடிப்போய் அரைத்துக்கொண்டுவா பிள்ளை வடை என்றால் தம்பிக்கு நல்லவிருப்பம். அடிபட்டு எல்லாரிடமும் பறித்துச் சாப்பிடுவான்... ம்... இப்ப எப்படி இருக்கிறானோ, பாயாசமும் காச்சலாம் அந்த பேணிக்குள்ளை பார்பிள்ளை சவ்வரிசி இருக்கோ எண்டு ' என்று மூச்சுவிடக்கூட முடியாமல் தொடர்ந்து மகள்மாரை துரிதப்படுத்தினாள் திலகம். அம்மாவை பார்க்க மகள் மாருக்கு சிரிப்பாக, அதேநேரம் சந்தோசமாகவும் இருந்தது. 'அண்ணா இயக்கத்திற்கு போனபிறகு அம்மா மற்றவர்களுடன் கதைப்பதுகூட குறைவு, சோர்ந்து சோர்ந்து படுத்துக்கிடந்தவ இன்று படு உசாராக இருப்பதைபார்' என இளையவள் மூத்தவளின் காதை கடித்தாள். மூத்தவள் இளையவளை கோபமாகப் பார்த்தாள். 'உனக்கு அண்ணாவைப் பார்க்க ஆசையில்லையா என்ன? நீதானே அவனோடை அடிக்கடி சண்டை போடுகிறனீ உனக்கெங்கை பாசம் இருக்கப்போகுது' என்று சொன்னதுதான் தாமதம் இளையவள் பொலபொல என கண்ணீர் உதிர்க்கத் தொடங்கிவிட்டாள். மூத்தவளுக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. 'யாரோடை எங்களுக்கு கோவம் அதிகம் வருகிறதோ அவர்களோடைதான் அதிகம் பாசம் நமக்கு இருக்கும், இது எனக்குத் தெரியாதா என்ன? அண்ணா போனதிலிருந்து நீ சந்தோசமாக சிரிச்சது, ஓடி ஆடி திரிஞ்சதை நான் பார்க்கவேயில்லை சும்மா உன்னை சீண்டிப் பார்க்கத்தான் அப்படிச் சொன்னனான். அழாமல் வேலையைப் பார் அம்மா கண்டால் எனக்குத்தான் பேச்சுவிழும். கண்ணைத்துடை' என்று மூத்தவள் கண்ணீரைத் துடைத்துவிட்டாள். 'பிள்ளை உங்கை என்ன செய்யிறியள் உழுந்தை கழுவிப்போட்டு, அமுதம் அக்காவீட்டை போய் அரைத்துக்கொண்டு வாங்கோவன். அதோடை தம்பியோடை வேறை பிள்ளையளும் யாரேனும் வருவினம் தானே எல்லாம் கொஞ்சம் கூடக்கூட செய்யவேணும் என்ன பிள்ளை ' என்றாள் திலகம். 'ஓம் அம்மா வேறை அண்ணைமாரும் வந்தாலும் வருவினம்' என்றபடி மூத்தவள் உழுந்தரைக்கப் போனாள். அப்பொழுது ஒரு ஹெலி விரைவாகப் பறந்து சென்றது. சிறிது நேரத்தால் மீண்டும் இரண்டு ஹெலி பறந்து வட்டம் இட்டு சிறிது நேரம் சுற்றிக்கொண்டு இருந்துவிட்டுத் தூரப் போய் சுட்டுக் கொண்டிருந்தது. அதை தொடர்ந்து கிபீர் விமானம் ஒன்று பேரிரைச்சலுடன் பறந்து சென்றது. சத்தங்களைக் கேட்ட திலகம் வெளியில் ஓடிவந்து மகளிடம் 'என்ன பிள்ளை எங்கையோ பிரைச்சனைபோல கிடக்குது, ஹெலியும் கிபீருமாய் சுத்துது எனக்குப் பயமாய்கிடக்குது' என்று மகளின் கையைப்பிடித்தாள். அவளுக்கும் பயமாக இருந்தாலும் தாய்க்கு காட்டிக்கொள்ளாமல் 'ஓம் அம்மா அது தூர எங்கையோ போல கிடக்குது நீங்கள் பயப்பிடாதையுங்கோ, வாங்கோ உதைபார்த்துக்கொண்டு நிண்டால் இன்டைக்கு சமைச்ச மாதிரித்தான் ' என்று தாயை அழைத்துக்கொண்டு வீட்டுக்குள் வந்தாள் மகள்.

திலகத்திற்கு சமையல் ஓடவில்லை. 'யார் யாருக்கு என்ன நடந்துதோ கடவுளே நல்லூர்க் கந்தா எங்களை எப்பதான் நிம்மதியாய் இருக்கவிடப்போறியோ' என தனக்குள் புலம்பியபடி திலகம் சமையல் வேலையில் மீண்டும் ஈடுபடத் தொடங்கினாள். துவக்குச் சூட்டுச் சத்தங்களும், குண்டுச் சத்தங்களும் மும்மரமாக கேட்டுக் கொண்டிருந்தன. திலகத்தின் அடிநெஞ்சில் ஏதோ ஒரு இனம் தெரியாத பயப்பீதி எழுந்துகொண்டு இருந்தது. மகள்மாரிடம் எப்படிச் சொல்லுவது என்று பயத்தை மனதுக்குள் பூட்டினாள்.

உழுந்தரைக்கப்போன மூத்தவள் அமுதமக்கா வீட்டிலிருந்து வந்தாள். 'அம்மா ஆமிக்கும் இயக்கத்திற்கும் சண்டையாம் அதுதான் ஹெலியும் கிபீருமாய் சுத்துது' என்று கூறிக்கொண்டு வீட்டுக்குள் நுழைந்தாள். 'என்ரை நல்லூர்க் கந்தா! அந்தப் பிள்ளைகளை காப்பாற்றிப்போடு!' என்று கண்ணீர் வடித்தாள் திலகம். சத்தங்கள் எல்லாம் கொஞ்சம் கொஞ்சமா குறையத் தொடங்கியது. இரண்டு மணித்தியாலமாகத் தொடர்ந்து கேட்ட சத்தங்கள் அடங்கி ஒரு மயான அமைதி நிலவிக்கொண்டிருந்தது. வீட்டில் எல்லாரும் ஏதோ யோசித்தவர்களாக

(தொடர்ச்சி 20–ம் பக்கம்)

# தீயில் கலந்த தென்றல் 2

அண்ணை ஒண்டும் யோசிக்காதையுங்கோ நான் எல்லாம் செற்றப்பண்ணி பிடிச்சுத்தருவன். இறுக்கமான கட்டங்களில் ராஜனிடம் இருந்துவரும் இந்த வார்த்தைகளை மூத்த தளபதிகள் எல்லோரும் ஒருங்குசேர நினைவுகூருகின்றனர். நெருக்கடியான எத்தனையோ கட்டங்களில் புத்துணர்ச்சியளித்த அவனது இந்த வார்த்தைகள் நம் எல்லோருக்குள்ளும் இன்னமும் பசுமையாய்...

வன்னிக் களத்தில் உச்சமாய் அமைந்த ஜெயசிக்குறுய் எதிர் நடவடிக்கை காலம். புலிகளை நெருக்கடிக்குள் தள்ள வந்தவர்களை புலிகள் நெருக்கடிக்குள் தள்ளிவிடும் வித்தையை உலகம் வியப்புடன் பார்த்திருந்தது. களத்தில் எதிரி நினைப்பதை அடையமுடியாதபடி நாம் நினைத்தபடி எதிரியை ஆட்டுவித்த நுட்பமான போரரங்கைத் தலைவர் நெறிப்படுத்திக் கொண்டிருந்தார். களத்தில் நின்ற ஒவ்வொரு புலிவீரனது கைகளிலும் அன்று எம் தேசத்தின் வாழ்விருந்தது. எதிரி தான் நினைத்ததை அடைந்துவிடும் எந்தவொரு கட்டமும் போரரங்கில் பாரிய மாற்றங்களை கொண்டுவந்தவிடும். அத்தகைய களத்தில் ராஜன் சந்தித்த சண்டைகள் பல. அதுவும் வன்னித்தளத்தின் கிழக்கையும், மேற்கையும் இணைத்திருந்த ஒரேயொரு போக்குவரத்துப் பாதையாய் இரணைமடுவின் ஊடான பாதைமட்டுமே மாறிவிட்ட சூழலில், அதை இராணுவம் கைப்பற்றுவது சண்டையில் பாரிய திருப்பங்களை ஏற்படுத்தக் கூடிய காரணியாய் இருந்தது.

அப்படியே ஒருநாள் நடந்தது...

எதிரிக்குச் சாதகமாய் மாறியிருந்தது களநிலை. அதையே தலைகீழாய் மாற்றிவிட்ட சண்டையில் ராஜன் என்ற புயல் சுழன்றடித்தவிதம் இப்போதும் அவனை வழிநடத்தியவர்களின் கண்களில் இருக்கிறது.

அன்று 1998 யூன் 04ம் திகதி, கிளிநொச்சி முனையில் எதிரியொரு படையெடுப்பை செய்தான். எமது பாதுகாப்பு நிலைகளில் உடைவை ஏற்படுத்தி பல நூற்றுக்கணக்கில் எமது பகுதிக்குள் நுழைந்துவிட்டான். பல மணித்தியாலங்களாய் சண்டை தொடர்ந்திருந்தது. எனினும் எதிரி தன் வெற்றியிலக்கை [இரணைமடுவை நோக்கியது] ஏறத்தாழ அடைந்துவிடக் கூடியதாகவே களநிலை இருந்தது. எப்படியாயினும் அன்றைய நடவடிக்கையை முறியடிப்பதே எமது இறுதி முடிவு. முன்னணியில் நின்ற அணிகள் கணிசமான இழப்பை சந்தித்தன. இந்நிலையில் இந்த முறியடிப்பை எப்படி செய்து முடிப்பது? பல மைல்களுக்கு அப்பால் நிலைகொண்டிருந்த ரோமியோவின் அணியைத்தான் நான் அழைத்திருந்தேன். எதிரி உறுதியாக நிலையெடுக்கும் முன் ரோமியோவின் அணியை சண்டைமுனைக்கு வேகமாய் நகர்த்துவது கடினமானது. அவனுக்கு நான் கட்டளையிட்டபோது அவனிடமிருந்து நம்பிக்கையும், துடிப்பும் நிறைந்த பதில் என்னுள் பிரகாசித்தது. எவரும் நினைத்துப் பார்க்காத வேகத்தில் பல மைல்கள் ஓட்டத்தில் எதிரியின் எறிகணைகளைக் கடந்து சண்டைமுனையில் தன் அணியுடன் வந்தவுடனேயே அவன் முறியடிப்புச் சமரை தொடங்கவேண்டியிருந்தது. கடைசிவரை இறுக்கமாகவே தொடர்ந்தது சண்டை.

அப்போதும், அண்ணை நான் விடமாட்டேன் பிடிச்சுத்தருவன் என்ற அவனின் நம்பிக்கை தரும் குரலையே நான் கேட்டேன். சோர்ந்து போகாது தன் அணியை வழிநடத்திய ரோமியோவின் விடாமுயற்சி இறுதியில் எதிரியை ஆட்டுவித்தது. அன்றுதான் ரோமியோவிற்குள் இருந்த அத்தனை பெரிய ஆற்றல்களை நான் முழுமையாக இனங்கண்டு கொண்டேன். அன்றைய சண்டையில்



ரோமியோவும் அவனது வீரர்களும் வெளிப்படுத்திய அபாரமான வீரமும், அவர்களின் தீரமிக்க தாக்குதல்களும் என்றைக்குமே எம் வரலாற்றில் நிலைத்திருக்க வேண்டியவை என அன்றைய நினைவுகளை ராஜனின் சாவின்பின் நினைவு கூர்ந்தார் தளபதி கேணல் தீபன்.

> உயிரையே வெறுக்க வைக்கும் அந்தக் கடினமான களங்களில் உயிர்வாழ்ந்து, அந்த உயிரை வைத்தே தம் வாழ்நாளில் இறுதி மணித்துளிகளிலும் உழைத்தார்களே எம் மாவீரர்கள். அவர்களின் உன்னதமான வாழ்வின் அந்த மணித்துளிகளில் தான் அந்த இரகசியத்தை நீங்கள் தேடமுடியும்.

அன்றைய வெற்றியை தமிழினம் பெருமையுடன் கொண்டாடியது. எதிரிக்கோ தன் வெற்றிச் செய்திக்கு பதிலாய் பேரிழப்பின் கணக்குகளை மட்டுந்தான் எஜமானர்களுக்கு அனுப்ப முடிந்தது. இந்த வெற்றியின் பின்னால் எவருக்கும் வெளித்தெரியாது ராஜன் இருந்தான். இவையெல்லாம் ஓயாத அலைகள் -2இன் பின்னால் சாள்ஸ் அன்ரனி சிறப்புப்படையணியின் துணைத்தளபதியாய் அவனை உயர்த்தியது.

வன்னிக் களத்தில் பெரும் புயலின் நடுவே நின்று எம் தமிழீழத் தாயவளின் வாழ்வை அவள் புதல்வர்களால் எப்படிக் காக்க முடிந்தது? நிச்சயமாய் உயிர் அர்ப்பணிப்புக்களால் மட்டுமே என வெறுமனவே எவரும் நினைத்து விடாதீர்கள். உயிரையே வெறுக்க வைக்கும் அந்தக் கடினமான களங்களில் உயிர்வாழ்ந்து, அந்த உயிரை வைத்தே தம் வாழ்நாளில் இறுதி மணித்துளிகளிலும் உழைத்தார்களே எம் மாவீரர்கள். அவர்களின் உன்னதமான வாழ்வின் அந்த மணித்துளிகளில் தான் அந்த இரகசியத்தை நீங்கள் தேடமுடியும். எண்ணிப் பாருங்கள்... இந்தக் களத்தில் ஒரு செக்கன் அணித்தலைவனாய் இருந்து ஒரு படையணியின் துணைத்தளபதி வரை உயர்ந்த ராஜன் ஒரு பொறுப்பாளன் என்ற வகையில் எவ்வளவு சுமைகளை சுமந்திருப்பான். தன் உயிரைவைத்து இரும்பையே உருகவைக்க அவன் உழைத்த உழைப்பின் மணித்துளிகளின் நீட்சி எத்தனை பெரியது. எம் வீரன் எமக்காய் வாழ்ந்த வாழ்வின் கதையைச் சொல் என நீங்கள் உரிமையுடன் கேட்டால் உங்களுக்கு அவனது நீண்ட பக்கங்களை உணர்வு குலையாது பக்குவமாய் சொல்லிவிடத்தான் முடியுமா?

அவை... ஓயாத அலைகள் - 3 இற்கு முற்பட்ட நாட்கள்...

வன்னிக்களத்தில் ஒரு வருடமாய் புலிகளின் மௌனத்தின் இரகசியம் புரியாது எல்லோரும் திணறிக்கொண்டிருந்த காலம். 'முதலில் பாதுகாப்பு போர்முறையில் நிறைய அனுபவங்களை கற்றுக்கொள்ளுங்கள். உங்கள் போர்த்திறனை எதிரிக்கு புரியவையுங்கள், அடுத்த கட்டத்தை நான் பிறகு சொல்கிறேன்' என்று தலைவர் அவர்கள் கூறியபோது, ஒரு இளநிலைத் தளபதியாய் நின்ற ராஜன் தன் ஆளுமையையும், வீரத்தையும் மெருகேற்ற வேண்டியிருந்தது. ஏனைய தளபதிகளுடன் சேர்ந்து தன் வீரர்களின் சண்டைத்திறனை வளர்ப்பதற்காய் அவன் உழைக்கவேண்டி இருந்தது.

ஓயாத அலைகள்-3இன் முழுமைப்படுத்தப்பட்ட அத்தியாயத்தில் ராஜன் தன் அழியாத தடங்களை பதித்தான். அதுதான் அவனைப் போரியலில் மேலும் வளர்த்துவிட்டது. அதுதான் ராஜனை எமது இயக்கத்திற்கும் அப்பால் வெளியே அறிமுகமாக்கியது. அதிலும் சில இறுக்கமான கட்டங்களில் ராஜன் ஆற்றிய பணிகள் அவனை எம் வரலாற்றில் என்றைக்குமே வாழவைக்கும் வலிமை வாய்ந்தவை.

ஒட்டுசுட்டான்!

ஓயாத அலைகள்-3 வாசற்படி அதுதான். எப்போது எம் வாழ்வை சிங்களத்திடம் தொலைத்துவிடப் போகிறோமோ என வன்னி மக்கள் ஐயுறும் அளவிற்கு எதிரி களச்சூழலை மாற்றியிருந்த காலம் அது. எங்கே எம் போராட்டம் மீளமுடியா நெருக்கடிக்குள் போய்விடப் போகின்றதோ என எம் அனுதாபிகள் எல்லாம் ஏங்கிக்கொண்டிருந்தனர். இயக்கம் சும்மா விட்டிட்டு இருக்காது, என்ற எமது மக்களின் பொறுமையின் உச்ச எல்லையது. எல்லாமே அந்த வாசற்படிக்கான முதலுடைப்பின் வெற்றியில்தான் தங்கியிருந்தது. அதற்காய் ஆராய்ந்து, நிதானித்து திட்டமிட்ட தலைவர் பொருத்தமான காலத்தை தெரிவுசெய்து அந்தப் பணிகளை போராளிகளிடம் ஒப்படைத்திருந்தார்.

*(வரலாறு தொடரும்)*



## மாவீரர் நாள்

எங்கள் தமிழினம் வருடா வருடம்
தீக்குளித்[து] எழும் திருநாள்-இது
திங்கள் முகத்தெழில்
திண்தோள் வீரர்கள்
மண்ணில் கண்களை மூடிய நாள்

கண்களில் நீர் கோர்த்து
கல்லறைகள் முன்னே - நாம்
நெய்யில் விளக்கெரித்து நெஞ்சில்
தீ மூட்டி
பொய்யில்லை உங்கள் இலட்சியப்
போரென
மனதில் மைபொறித்து நிரையில்
சேர்ந்திடும் நாள்

சந்தனப் பேழைகளே!
உங்கள் சுந்தர வதனத்தைத் தீ
வந்து சூழுமோ!
சாவின் கணப்பொழுதில் நீங்கள்
வாயில் உச்சரித்த 'தமிழீழம்'
மாறுமோ!

எங்கள் கரங்கள் இனிமேலும் தயங்குமோ!
பொங்கும் உணர்வலைகள் நெஞ்சில் வந்து முட்ட
செந்தணல் மூச்செறிந்து வீரம் கொப்பளிக்க
இந்த 'மாவீரர் நாளில் ' நாம் களம் புகுவோம்

- எஸ்.ரி.பிறேமராஜன், முள்ளியவளை-தமிழீழம்

## ஓ... மாவீரனே !

ஓ... மாவீரனே!
உன்
கழுத்து
நஞ்சுமாலை
தாங்கிய
அன்றே
உன்
தாயகம்
விடுதலை
தாங்கிற்று.
நிமிர்ந்த
போராளி
நீ!
சாவதற்காக
நஞ்சுமாலை
அணிந்தாய்
நீ
என்றார்...
திருத்தினேன் -
வாழ்வதற்காக.

ஓ... மாவீரனே!
உன்னிடம்
ஒரு கேள்வி
நஞ்சினை
உண்டு
நீ
பசி தீர்த்தாய்
அல்லவா ?
அது சரி...
உன் சாவு
அவன்
கல்லறை
ஆனது எப்படி?
எனக்குத் தெரியும்
சாவை
நீ
மிதித்தாய்
சாவு
அவனை
மிதித்தது.
உன்
உயிர் பறிக்க
வந்த
குண்டுகளே
உயிரிழந்து போயின.

ஓ... மாவீரனே !
உன்
ஆற்றல்
பெரிதடா
பெரிது.



கோழைகளெல்லாம்
இன்றுன்னை
மதிப்பிடு
செய்து
கொக்கரிப்பதை
நான்
அறிவேன்.
விடு...
அவர்கள்...
வீட்டில்
வாழும்
பிணங்கள்,
நீ
கல்லறையில்
வாழும்
உயிர்.

ஓ... மாவீரனே!
தற்கொலை என்று
நேற்றுவரை
இருந்த
தமிழ்ச் சொல்லைத்
தற்கொடை
என்று
மாற்றியவன்
நீ.
உன்னை
உன்
மண்ணுக்கு
நீ
கொடுத்தாய்...
ஆனால்...
ஓர் ஐயம் !
உன்னை
உன் தேசம்
பெற்றுக் கொண்டதா?
இழந்ததா?

ஓ... மாவீரனே!
எரிமலையின்
விம்மலோடு
வணங்குகிறேன்...
உன்னை
இந்நாள்
நஞ்சுமாலைக்கு
பூமாலை
சூட்டும்
நாள்.

உணர்ச்சிக் கவிஞர்
காசி ஆனந்தன் (நந்தன்)

## ஆன்மாவிற்கு ஆயுள் தண்டனை

எந்தப் 'பொயின்ரில்' என்ர பிள்ளையோ
கந்தா முருகா காப்பாற்றென்று
சந்ததமும் சன்னதியான் சன்னிதியில் நின்று
பொங்கிவரும் அழுகையுடன் விம்மித் தவிக்கும்
வெள்ளை உள்ளங்கொண்ட என் அம்மாவிற்கும்.

அடிக்கடி இறங்கி ஏறும் இரத்த அழுத்தத்தினால் உடல் ஒடிந்து
ஒட்டிய கன்னங்கள் வழி விழுகின்ற கண்ணாடியை சுட்டுவிரலால்
தள்ளிவிட்டு
நட்டநடு இராத்திரியில் நித்திரையை மறந்து பட்டதுயர்
போதாதென்று - நான்
விட்டுவந்த துயரையும் கூடவே நினைந்து
வெட்டையை வெறித்திருக்கும் எனதருமை அப்பாவிற்கும்.

விரித்து வைத்த புத்தகத்தில் நிலைத்துவிட்ட கண்களினால்
சொரிகின்ற கண்ணீரைத் துடைத்தெறிய மறந்து - அன்று
புத்தக மேசையிலும் நித்திரைப் பாயிலும்
நித்தமும் நாம் புரிந்த வித்தைகளையெல்லாம்
சத்தமின்றி அசைபோடும் எனதருமைச் சகோதரர்களுக்கும்.

வழியிலே வருகின்ற எதிரியைக் குதறிட
விழியிலே நெருப்புடன் விரைந்திட்ட
புலிகளின் குகையிலே புகுந்துவிட்ட - இந்த
பிரபஞ்சத்தின் சூரியன் பிரபாகரன் தங்கை நான்
பிரியமுடன் எழுதிக்கொள்வது.

தேசத்தை யாசித்த காரணத்தால் - உங்கள்
பாசத்தை துறக்கச் சித்தமானேன் - இதுவரை
பூசித்த தமிழ்த்தாயின் திருவடியில்
பேசித்தான் நானும் ஒரு முடிவு கொண்டேன்
தேசியத் தலைவரின் பாதையிலே
வீசிடும் புயலாகப் புறப்பட்டேன்.

கண்ணிலே வழிகின்ற நீரைத் துடைத்திட
பெண்களும் ஆயுதம் ஏந்திப் புறப்பட

வெண்கலிகள் பல வாழ்த்திட - உங்கள்
கண்மணி நான் களமாடப் புறப்பட்டாலும்
உண்மையில் உங்கள் பிரிவு
எந்தன் ஆன்மாவிற்கு விதித்த
ஆயுள் தண்டனை - ஆனாலும் நாளை
விரிகின்ற விடிகாலைப் பொழுதில் - மக்கள்
சொரிகின்ற மலரிடையே
பரிமேலேறி பவனி வருவான் - எங்கள்
கரிகாலன் என்கின்ற காலத்தின் ஓடம்.
எரிகின்ற அக்கினிக்கும் அவனுக்குமிடையே
பிரிவேதும் காணாது தடுமாறும் மக்கள் கூட்டம்.

மணிமகுடம் தாங்கி எம்மன்னன் - யார்க்கும்
பணியாதெம் ஈழமண்ணின் தெருவில் - படை
அணிகளோடு பவனி வரும் வேளை
அணியாகக் கட்டப்பட்ட வீடுகளின் நடுவில்
தனியாக நிமிர்ந்து நிற்கும் என் இல்லத்தின் முற்றத்தில்.

தத்தித் தத்தி வரும் எந்தன் அண்ணன் மகன் - என்
அத்தையும் புலி என்று தோள் நிமிர்த்தி முறுவலிப்பான்.
விக்கி விக்கி மழலை பேசும் என் அக்காமகள் - தன்
சித்தியும் விடுதலைக்காய் வித்தானாள் என விதந்துரைப்பாள் -
அப்போ.
நித்திய விலங்கிடப்பட்ட என் ஆன்மா
சத்தியம் வென்றதென்று கவிபாடும்.
கூத்தாடும் இனி இல்லை உமக்கு
புத்திர சோகம். என்று காற்றோடு வந்து - உங்கள்
காதோடு சொல்லும் விடுதலை கொள்ளும்.



ஆக்கம்: மாவீரர். லெப். துர்க்கா
(வேதநாயகம் துஸ்யந்தினி)

## காலமிது ! கவிகளே வந்திடுவீர்

போர்க்கவிதை பாடிவரும்
ஊர்க்கவிகாள் வாருங்காள் – மாவீரர்களைப்
போற்றுவதற்கு நல்ல தமிழ் தாருங்கள்
வாய்மை என்றும் வெல்லும் என்று
வாழ்ந்த புலிவீரர்களைப் பாடுதற்கு –
ஏடெடுத்து
வந்தெங்கள் ஏழ்மை நிலை தீருங்கள்
(போர்க்கவிதை....)

தாய் நிலம் மீட்பதற்கு – எம்
பிள்ளைகள் உயிர் போனதையா
அவர் சொல்லிச் சென்ற வீரக்கதை – எம்
பள்ளிப் பாடமாக வேண்டும் – அதற்கு
போர்க்கவிதை பாடிவரும் – எம்
ஊர்க்கவிகாள் வாருங்கள் – மாவீரர்களைப்
பாடுதற்கு ஏடெடுத்து வாருங்கள்
(போர்க்கவிதை....)

வன்னி மண்ணைக் காக்க – எங்கள்
செல்வி உயிர் கொடுத்தாள் – அவள்
எழுதிச் சென்ற வீரக்கதை – என்
பேரன் படிக்க வேண்டுமையா – அதற்கு
போர்க்கவிதை பாடிவரும் – எம்
ஊர்க்கவிகாள் வாருங்கள் மாவீரர்களைப்
பாடுதற்கு நல்ல தமிழ்லெடுத்துத் தாருங்கள்.
(போர்க்கவிதை......)

யாழினை மீட்டிட.... வாசல் ஒன்றைத் திறந்திட
ஆனையிறவழித்த எம் மன்னன்
வழிகாட்டலுக்கு
வீரப்பரணி பாடவேண்டுமையா – அதற்கு
போர்க்கவிதை பாடிவரும் – எம்
ஊர்க்கவிகாள் வாருங்கள் – தமிழ்
மன்னன் புகழ் பாடுதற்கு
சங்கத்தமிழ் எடுத்து வாருங்கள்
(போர்க்கவிதை....)

- தேவகுமார் - ஜேர்மனி

## எமை ஈன்ற மண்ணுக்காய்...

எண்ணம் தன்னில் எழுந்து வந்த
வண்ண வண்ண கனவுகளை
வாழ்வின் இனிய சுகங்களை
மண்ணின் விடிவிற்காய்
மண்ணோடு புதைந்தவரே

புயல் புகுந்த இடமெல்லாம்
பகை அழிக்கப் புறப்பட்டு
பலம் கொண்டு போராடி
நிலம் மீட்டு தந்துவிட்டு
நீண்ட தூரம் சென்றவரே

கரும்புலியாய்......
கடற்புலியாய்
சினந்தெழும் சிறுத்தைப் படையாய்
வேவு பார்க்கும் வேங்கையாய்
களமாடி பகைவென்று
கல்லறைக்குள் காவியமானவரே

எம்மினிய தமிழுக்காய்
எமை ஈன்ற மண்ணுக்காய்
தம் இனிய உயிர்களை
தமிழ் ஈழ விடுதலைக்காய்
தானம் செய்துறங்கும்
மாவீர மணிகளே - உங்களின்
கனவான தமிழ் ஈழம்
மலரும் நாள் விரைவில் வரும்.

- திருமதி. ரேணுகா உதயகுமார்
- ஜேர்மனி

## கடற்புலி மேஜர் கலையரசன்

### வேலாயுதம்பிள்ளை பிறேமதாஸ்
(நாயன்மார்க்கட்டு)

**தாய் மண்ணுள்: 28.07.1995**



*சிங்களத்தின் அடக்குமுறைக்கு எதிராக உள்ளத்தே*
*ஊற்றெடுத்த உரிமை வேட்கையால் வேங்கையானவரே!*
*கொட்டும் மழையிலும், கொடும் பனியிலும்*
*நாளை இங்கு இனிய தமிழீழம்*
*காணும் ஆசை இதயத்தை நிறைத்திட*
*கடலிலே காவியம் படைத்திடச் சென்று*
*மணலாறிலே நயவஞ்சகரின்*
*எட்டப்பர் கோலம் - உனை*
*காவு கொண்டதோ..?*
*உனது வீரச்சாகசங்கள் பல*
*தோழர் பகன்றது என்றுமே*
*எம் மனதிலே அலை மோத.....*



- சகோதரர்கள் (பிரான்ஸ்)





## புறப்படுகிறோம்...

யாதுமாய்
ஆகிய எங்கள்
தேசியங்களே!
இதோ
உங்களைப் பூசிப்பதற்காய்
நாங்கள் புறப்பட்டு விட்டோம்.
காற்றோடு கையிணைத்து
எங்கள்
மூச்சோடு சங்கமித்த
நேசர்களே!
கல்லறையெனும் உங்கள்
கருவறையை – நாங்கள்
கோயிலாக்கி குடிபுகுகின்றோம்.

கார்த்திகை என்றால்
எங்கள் கண்களெல்லாம்
பனித்து விடுகிறது.

வெடிகட்டி எதிரியின்
தடம் பற்றி
கணத்தில் வெடித்து விடும்
உங்கள் திடம் கண்டு
கருவறை கடவுளின் திருவுளமாய்
கருப்புடைக்கொடுத்து
மூலதனமாய் உங்களுக்கு
முகவரி தந்தானோ
தலைவன்!!

கடவுளின்
கதைகளிலும் சுயநலம்
தெரிகையில்



ஏதுமாய் நின்று எமக்கு
யாதையும் தந்தீரே
யாது செய்குவோம் உங்கள்
இழப்பினுக்கு!!

தீதறியா எங்கள்
தெய்வப்பிறவிகளே!
இதோ
அணியணியாய் இணைகிறோம்.

அக்கினிக் குஞ்சுகளே
இதோ உங்கள்
சுதந்திர வேட்கையை
சுடராய் ஏற்றுகிறோம்.

மனித நேயத்தின் மகா புனிதர்களே!
இது எமது யுகம் என்ற
எங்கள்
தானைத்தலைவனின்
வேதம் கேட்டு உங்கள்
பாதம் பற்றி எழுகிறோம்.

உறங்கும் கல்லறையோரம் எங்கள்
கண்ணீரின் கடைசி சொட்டை
காணிக்கையாக்கி
விடியலின் வாசலுக்காய் நாங்களும்
வேகம் கொள்கிறோம்.

எங்கள்
தேசமெங்கும் விதையாகிப்போன
வீரவிழுமியங்களே!
உங்கள்
மரணச் சுமைகளை
எங்கள் தோள்களிலும்
சுமக்க முயல்கிறோம்
இந்த கார்த்திகையின்
திரு நாளில்
காவியமாகிய உங்கள்
கல்லறைகளைப் பணிந்து
மௌனமாய் வணங்குகிறோம்.
இதோ
உங்களைப் பூசிப்பதற்காய்
நாங்கள் புறப்பட்டு விட்டோம்...

- பழ.தியான் (றோலா ஜேர்மனி)

## மாவீரர் துயிலும் இல்லம்

**வெறுமே நிணமும் நீரும் கொண்ட ஒரு பிண்டமல்ல**
**வீரமும் விடுதலை வேகமும் கொண்டவன்**
**ஈகமும் மனதில் ஈழமும் கண்டவன்**
**தானைகள் தகர்த்தொரு தடவழி சமைத்தவன்**
**எங்கே போர்க்களம் எங்கே பகைவன் - என**
**வானமும் நடுங்கிட வையகம் நடந்தவன்**
**மார்பிலே குண்டேற்றி மரணத்தை அணைத்தவன்**
**உறங்கிடும் கதைசொல்லும் உண்மையின் தலமிது.**

**கற்களும் முட்களும் காலடி நெருட**
**புற்களும் புழுதியும் பாதம் மறைக்க**
**கைகளில் சுடுபொறி கருத்துடன் ஏந்தி**
**விழிகளில் விடுதலைச் செம்பொறி தாங்கி**
**தலைவனின் காலடித் தடமது தொடர்ந்து - தன்**
**விழுப்புண் வாங்கிய திண்ணுடல் நோக**
**காகமும் கழுகும் உண்டிட என்று**
**எதிரியைக் கிழித்தவன் உறங்கிடும் பூமி**

**மக்கள் வாழ**
**மக்கள் வாழும் மண்ணது மீள**
**கற்கை மறந்தவன்**
**தாயின் தழுவல் பொற்கை மறந்தவன்**
**சொந்த வீட்டுப் படுக்கை மறந்தவன்**
**புதுத் தளிர்க்கை மறந்தவன்**
**பந்தபாசம் எல்லாம் ஒன்றாய்**
**வெந்து மாளும் வேட்கை நிறைந்தவன்**
**மண்ணிலே தவழ்ந்து**
**மண்ணிலே நடந்து**
**மண்ணையே தன் குருதியால் நனைத்து**
**மண்ணுக்காய் உரமாகி**
**கண்ணொத்த விடுதலைக்காய்**
**விண்ணையே அளந்தவன்**
**விழிமூடும் தலமிது**

**மாண்டவர்க்கு மனம் கலங்கி**
**மண்ணிட்ட சமாதியல்ல**
**வாழ்பவர்கள் சென்று நிதம்**
**வழிபடுமோர் சந்நிதி**
**வீழ்ந்தவர்கள் கதைமுடிக்கும்**
**விடுகதையின் முடிவல்ல**
**சேர்ந்து நிதம் களம் புகுவோர்**
**வழிபடுமோர் பொன்னடி**

**மாவீரர் பாதங்களை அடிதொழுவோம் நாங்கள்**
**ஈகச் சுடர்தனில் விழிதெளிவோம் நாங்கள்**
**மானம் பெரியதெனும் படையணியில் செல்வோம்**
**ஈனம் எதனையுமே இடர்கண்டு ஏற்கோம்**
**தானம் தவமிரண்டும்**
**போரினிலே காப்போம்**
**வானம் திரண்டிடினும்**
**வந்தவழி மீளோம்**
**ஈழம் எமதெனவே**
**இருகண்ணில் ஏற்போம்**
**தலைவர் வழிகாட்டும்**
**திசைநோக்கிச் செல்வோம்.**



- எஸ்.ரி.பிறேமராஜன்,
முள்ளியவளை- தமிழீழம்



# நாளைக்கு என்ர பிறந்த நாள் மச்சான்...

1995 இல் பல இன்னல்களை தமிழனுக்கு கொடுத்த ஆண்டது. இந்த ஆண்டிற்கு விடைகொடுத்து புதிய ஆண்டை வரவேற்கும் சமயம் தாக்குதல் தேதி குறிக்கப்பட்டது. புலிகளின் அணிகள் நகர்த்தப்பட்டு கிட்டத்தட்ட இரண்டு நாள். கால் நடையாகப் பயணித்து காடுமேடு, குளம் குட்டை என புலிகளின் உறுதியான கால்கள் தாண்டின. மிகமிக அவதானமான முன்னேற்றம். ஏனெனில் காட்டினுள் வேட்டைக்கு வரும் சிங்களவர்களிற்கு தென்படக்கூடாது, எதுவித தடயங்களும் விடப்படக்கூடாது. இவ்வாறாக மிக்க நிதானமாக முன்னேறிய அணிகள் இலக்கில் இருந்து சில கிலோ மீற்றர் தொலைவில் இருந்த ஆற்றங்கரையோரம் ஒய்வெடுத்துக்கொள்ள, வேவு அணியினர் ஆற்றை கடந்து தமது இறுதி வேவுபார்ப்பதை உறுதி செய்தனர். இந்த ஆற்றைக்கூட நாம் கடக்கும் சமயம், ஒருசிறு தடயம் விடுவோமேயானால் எதிரியின் கையிலுள்ள 'துருசுகள்' திறக்கப்பட்டு நீர்மட்ட அளவு உயர்த்தப்படும். இரவு ஆக ஆக தாக்குதல் இலக்கையும், தாக்குதல் நேரத்தையும் ஒவ்வொரு போராளியும் எதிர்பார்த்திருந்தனர்.

ஒருவாறாக ஆற்றங்கரையை கடந்த அணிகள் இலக்கை எட்டிக் கொள்ள நிலையெடுத்துக்கொள்ள ஒவ்வொருவரும் தமக்கு உரிய பணிகளிற்கு ஏற்ற இடங்களுக்கு அனுப்பப்பட்டுக் கொண்டிருந்தனர்.

அதிலொரு குழுவில் சாந்தன் தனது தடைகளை அகற்றும் பணிக்காக டோபிடோவுடன் இருள் சூழ்ந்த நடு நிசியில் இயங்குகிறான். தூரத்தே சக போராளிகளின் நடமாட்டம். அதில் அவனின் நண்பனும் ஒருவன். அவனை குரல் ஓசையில் இனம்கண்டு, 'டேய் மச்சான் நாளைக்கு என்ர பிறந்தநாள் நாளைக்கு எனக்கு மாவீரன் என்றபட்டம் கிடைக்கவேணும்.' இவன் கூறியபோது, டேய் விசர் கதை கதைக்காதே, இன்னும் நிறைய சாதிக்க கிடக்குது எனக் கூறி அவன் விடைபெற்றுக்கொள்கின்றான்.

புதிய வருடம் பிறக்க மக்கள் வெடி கொளுத்தி மகிழ்ந்திட மதுவெறியில் இராணுவம் தனது துப்பாக்கிகளால் புத்தாண்டை வரவேற்க, வேட்டோசைகளோடு வேட்டோசையாக புலிகளின் இயந்திரத் துப்பாக்கிகள் ஆக்கிரமிப்பாளனை நோக்கி இயங்கியது. நிலைகுலைந்த எதிரி தன் பிரதான முகாம் நோக்கி ஓடினான். புலி அணிகள் முன்னேறி மினி முகாம்களை அழித்தனர்.

இதற்கிடையில் எதிரி மற்றைய முகாம்களில் இருந்தும் தனது உதவிக்கு இராணுவத்தை வரவழைத்தான். எதிரியின் பகுதியில் தொடர்ந்து நிற்பது சாதுரியமன்று. எனவே எதிரிக்கு புத்தாண்டு தினமே ஓர் செய்தியை புலிகள் தெரிவித்தனர். எம்மக்களை எதிரிகளாக்கி, எம் இனத்தின் நிம்மதியை குலைத்த உங்களிற்கு இனி உங்கள் தலைநகரில் கூட நிம்மதியாக உறங்கமுடியாது என்பதே அச்செய்தி.

அதேசமயம் இராணுவ விசேட கொமாண்டோக்கள் காட்டை சல்லடை போட்டனர். புலிகள் தமது பாதுகாப்பான பகுதியில் காயப்பட்ட போராளிகளிற்கு சிகிச்சை கொடுத்து கொண்டிருந்தனர். சாந்தனும் ஓர் 'ஸ்ரெச்சரில்' கிடந்தான். சிகிச்சை செய்ய விரைந்த மருத்துவக் குழு போராளிகளுக்கு அவன் வேலையை வைக்கவில்லை. தமிழீழத் தாயின் விடுதலைக்காக நிரந்தரமாக தூங்கி விட்டான். அவனின் இழப்பு எம்மை மட்டுமல்ல, வான தேவதையை கூட உருகச் செய்தது. வானதேவதை மழையாகி தன் அஞ்சலியை சொரிந்தாள்.

– *சூரியன்*

## தளம் நோக்கி போனவர்கள்

தமிழீழம் காப்பதற்காய்
தம்முயிரை ஈந்தவர்கள்....
தளராத துணிவோடு
தளம் நோக்கிப்
போனவரே.....
தடைகளை துச்சமென
தவிடுபொடி ஆக்கியே
தரணியெங்கும்
நடைபோட்டு
தமிழ் மானம் காத்தவரே...

தந்தை தாய் உறவுகளை
தம் உடன்பிறந்த
பாசங்களை
தமிழீழ விடியலுக்காய்
தம் கனவுகளை தியாகம்
செய்து

தளராத துணிவோடு
தளம் நோக்கிப்
போனவரே.....

தற்கொடை தியாகங்களாய்
தளத்தில் வீரச் சாவுகளாய்
தகர்த்தெறியும் கடற்புலியாய்
தன்னிகரில்லா
சிறுத்தைகளாய்....
தளராத துணிவோடு
தளம் நோக்கிப் போனவரே
தரணியெல்லாம்
வியந்துநிற்க....
தமிழினம் உள்ள வரை
உங்கள் நினைவிருக்கும்.



*- ஈழமதி சுதா (பிரான்ஸ்)*

# ஒரே கருப்பையில் உறைந்த உயிர்ப்பூக்கள்...

சிறீலங்கா அரச பயங்கரவாதத்தில் தமிழீழ மக்கள் அடிபட்டுக்கொண்டிருக்க பாலசபாபதியாக அன்னை மடியில் முத்தாகச் சிரித்தவன், வாழும் வயதிலேயே மண்ணுக்கு வித்தாவான் என்று அவன் உறவுகள் நினைத்திருக்கவில்லை. ஆனாலும், தமிழன்னை நினைத்திருப்பாள்.

15 வயதான பின்னும் கூட தன் கட்டிலைவிட்டு வந்து, அம்மாவுடன் ஒட்டிக்கொண்டு படுத்திருப்பான்.

அக்காமார் என்ன கேட்டாலும் முகம் கோணாமல் அத்தனையும் ஓடி ஓடிச் செய்து கொடுப்பான்.

அக்காமாருக்கு மட்டுமா? ஆத்தியடியில் வயதான கிழவிகளுக்கெல்லாம் இவன் மகன் போல. உதவி செய்வதென்பது இவனோடு பிறந்த குணம்.

அண்ணன் 'மொறிஸ்' களத்தில் நிற்கும் போதே 'ஹாட்லி' யின் கல்வியைக் கைவிட்டு, 1987ல் வேங்கையாய் புறப்பட்டான் நாட்டைக் காக்க என்று.

இந்திய ஆக்கிரமிப்பு அரக்கத்தனமாய் நடக்க ஈழத்து உயிர் மூச்சை இதயத்தில் சுமந்து கொண்டு அண்ணனும் தம்பியும் களம் காத்தனர். தம்பி மயூரன் தலைவர் பிரபாகரனின் அன்புக்குப் பாத்திரமானவனாய் காட்டிலே உயிர் வாழ்ந்தான்.




இந்திய ஆக்கிரமிப்பை உடைத்தெறியப் போராடிய அண்ணன் மொறிஸ் தமிழீழ மண்ணை உயிர்ப் பூவாக முத்தமிட்டான்.

ஆனாலும் தம்பி மயூரன் கலங்கவில்லை. மன்னார், மண்கிண்டி என வீரக் கதை படித்து எதிரியின் கூட்டைச் சிதறடித்தான் மயூரன். 'யாழ்தேவி' நடவடிக்கையில் போராளிக் குழுவோடு நின்று பொருத்தமாய் போர் தொடுத்தான்.

இதய பூமி- 1இல் இறுக்கமாய் கால்பதித்து, வெற்றியோடு திரும்பினான். திரும்பும் வழியில் வற்றாப்பளையில் வாழும் அண்ணன் தீட்சண்யனை (பிறேமராஜனை) காண ஆசை கொண்டு ஒருக்கால் சென்றான்.

அந்தக் கணங்களை, ஒருகாலை இழந்த அவன் அண்ணன் தீட்சண்யன் இப்படிச் சொல்கிறார்.

**கடைசிக் கணத்தில் உன் களத்துப்புலிகளுடன்**
**ஒருக்கால் வந்தாய்**
**நாம் கண்மூடி விழிக்கமுன் கனவாய் சென்றாய்**
**தடியோடு நான் நடந்து கதவோரம் வந்துநிற்க**
**கையில் பெடியோடு உனது அண்ணி**
**கண் கலங்கப் பார்த்திருக்க,**
**பார்த்தாயா... யார்? புரியவில்லை**
**நினைவில் தெரியவில்லை**
**தெருவோடு நீ ஓடி**
**துள்ளி அந்த வாகனத்தின் கூரையிலே**
**பாய்ந்தேறி**
**குழுவோடு அமர்ந்ததைத்தான் நாம் பார்த்தோம்**
**கனவாக மறைந்து போனாய்**
**'சும்மா பார்த்து விட்டுப் போகவந்தேன் ' என்றாய்**
**எம் கண்ணீரெல்லாம் காயாத**
**நீர் கோர்த்து விட்டுத்தானய்யா சென்றாய்.**

இப்படி அண்ணனின் கண்ணில் நீர்கோர்த்து விட்டுச் சென்றவன் நேரே பூநகரிக் களத்தை நோக்கித்தான் சென்றான். போகும் வழியில் பாசம் அவனை பாடுபடுத்தியதோ? நண்பன் சிட்டுவை (மாவீரர்) 'ஆத்தியடிக்கு அம்மாவிடம் போய் அக்கா அவர்களிடம் இருந்து கடிதங்கள் வந்திருக்கும் வாங்கிவா' என்று பலமுறை அனுப்பினானாம்.

கடைசிமுறையாக சிட்டு மயூரனிடம் கடிதத்துடன் போனபோது, மயூரன் என்ற முத்து மண்ணுக்கு வித்தாகிவிட்டது.

மயூரன் 11.11.93 அன்று போராட்ட அணியொன்றிற்கு தலைமை தாங்கிச் சென்று, பூநகரிக் களத்தின் காற்றிலே கலந்துவிட்ட செய்தியை தாங்கி வந்த சிட்டு, அதை எப்படி அம்மாவிடம் சொல்வதென்று தெரியாமல் தயங்கித் தவித்து கலங்கிச் சொன்னபோது, ஆத்தியடியே ஒரு முறை உயிர்வலிக்க அழுதது.

*சந்திரவதனா செல்வகுமாரன்–ஜேர்மனி*

# மாவீரர் நினைவுநாளில் சூளுரைப்போம்!

தான் நேசித்த தமிழீழ மக்களின் வாழ்வுரிமையை
மீட்டெடுக்க, தமிழீழ விடுதலைக்கு எழுச்சியூட்ட,
நீரும் அருந்தாது உண்ணா நோன்பிருந்து உயிர்
ஈகம் செய்தான் தமிழீழ மண்ணின் மைந்தன்
தீரன் லெப்.கேணல் திலீபன். இவனைப் போல்
விடுதலை வேள்விக்கு ஆகுதியாக்கிய
ஆயிரமாயிரம் வேங்கைகளின் நினைவுநாள்
நவம்பர் 27.

அந்நாளில் சூளுரைப்பீர்!
தமிழனுக்கொரு நாடு வேண்டும்!
சுதந்திரமான நாடு வேண்டும்!
அதுவே தமிழ் ஈழம்! அதை அடைந்தே
தீருவோம்!
அந்த உன்னத இலட்சியத்தின் உருவங்களாய்,
புறநானூற்றின் வடிவங்களாய்,
தமிழீழப் போராளிகளின் அங்கங்களாய்,
விடுதலைச் சிங்கங்களாய்
வா இளைஞனே வா!
வரிப்புலியாய் பாய்ந்து வா!

வெண்ணிலா மங்குமா?
வெண்ணலை தூங்குமா?
புலிபோத்து இளைஞனே
போர்க்கடல் மீது வா!
புகழ்தனை நாட்டவா!
கைகளில் துப்பாக்கிகள்! பைகளில் குண்டுகள்!
எங்கும் அலைகின்ற
சிங்களப் பூதங்கள்

தூங்கிக் கொண்டிருந்த காலம் போதும்! இனி
தாக்க வேண்டிய காலம் வாரும்!

கூப்பிடு பகைவரை! கூப்பிடு பகைவரை!
கொத்திக் கிளறிக் கொன்றிடுவோம்!
தமிழ் அன்னையின் கால்களில், காப்பிடுவோர்
கைகளை வெட்டிப் பங்கிடுவோம்!
எனச் சூளுரைப்போம்!

விடுதலையின் நினைவோடு
விடிவுவரும் கனவோடு
எரிமலையாய் எழுந்திடுவீர்!
இனம்காக்க விரைந்திடுவீர்!
தமிழ் ஈழம் மீட்டிடுவீர்!
தமிழ் மானம் காத்திடுவீர்!



*- உணர்ச்சிக் கவிஞர்*
*சிங்காரவேலன் - தமிழ்நாடு.*

*(1ம் பக்கத் தொடர்ச்சி)*

யும், தேவையையும் நாம் வலியுறுத்துகின்றோமே தவிர, பேச்சுக்களுக்கு நாம் நிபந்தனைகளை விதிக்கவில்லை.

போர் நெருக்கடி தளர்ந்து இயல்புநிலை தோன்றுவதற்கு இருதரப்பில் இருந்தும் நம்பிக்கையை வளர்க்கும் நல்லெண்ண நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட வேண்டுமென நோர்வே அரசு சில யோசனைகளை தெரிவித்திருக்கிறது. இதனை நாம் ஆர்வமாகப் பரிசீலணை செய்துவருகிறோம். எமது மக்கள் அனுபவிக்கும் துன்பச்சுமை குறைந்து பரஸ்பர நல்லெண்ணம் நிலவும் சமாதான சூழ்நிலை தோன்றுவதற்கான ஆக்கபூர்வ நடவடிக்கைகளை நாம் வரவேற்கிறோம். அதற்கான முன் முயற்சிகளை அரசாங்கம் மேற்கொள்ளுமானால் பதிலாக நாமும் நல்ல முடிவுகளை எடுப்போம்.

*சமாதனாப் பேச்சுவார்த்தை என்பது தமிழ் மக்களுக்கு ஒரு புதிதான விடயம் அல்ல. தமிழ் மக்கள் சார்பில் எமது விடுதலை இயக்கமும் எமக்கு முந்திய தலைமைகளும், சிங்களத்துடன் எத்தனையோ தடவைகள் பேச்சுக்களை நடத்தியுள்ளன. பண்டா - செல்வா ஒப்பந்த காலத்தில் இருந்து பல தசாப்தங்களாக பல வரலாற்றுச் சூழல்களில் பல்வேறு நிர்ப்பந்தங்களின் அடிப்படையில் பேச்சுக்கள் நடைபெற்றிருக்கின்றன. ஆயினும் இப் பேச்சுவார்த்தைகள் தமிழ் மக்களின் பிரச்சனையை தீர்த்துவைக்க தவறிவிட்டன.* இதனால், தமிழரின் பிரச்சனை மேலும் மேலும் சிக்கலடைந்து பெரும் போராக விஸ்வரூபம் பெற்றிருக்கிறது. இந்த துரதிஸ்ட நிலைமைக்கு பிரதான காரணம் தமிழரது பிரச்சனையின் அடிப்படைகளை, தமிழரது அரசியல் அபிலாசைகளை சிங்கள தேசம் ஏற்றுக் கொள்ள மறுப்பதுதான்.

தமிழரின் பிரச்சினைக்கு சமாதான வழியில் நிரந்தமான அரசியத்தீர்வு காணப்படவேண்டுமாயின் தமிழர் பற்றிய சில அடிப்படை உண்மைகளை சிங்கள தேசம் ஏற்றுக்கொண்டே ஆகவேண்டும். அத்தோடு தமிழ் மக்கள் எத்தகைய தீர்வை விரும்புகிறார்கள் என்பதையும் அவர்களது அடிப்படை அபிலாசைகள் என்ன என்பதையும் புரிந்து கொள்ள வேண்டும்.

ஈழத் தமிழர்கள் தனித்துவமான் இன அடையாளத்தை கொண்டவர்கள் ஒரு தேசிய இன்க் கட்டமைப்போடு அந்த இனத்துவ பிரக்ஞையோடு வாழும் ஒரு மக்கள் சமூகம் அவர்களுக்கு வரலாற்று ரீதியான தாயக மண்ணாக சொந்த நிலமுண்டு. எமது மக்கள் விரும்புவதெல்லாம் ஒன்றுதான். தமது சொந்த மண்ணில் நிம்மதியாக, நிறைவாக வாழவேண்டும் என்பது தான். மற்றவர்களது அதிகார ஆதிக்கமோ, நெருக்குவாரங்களோ இல்லாத ஒரு அரசியல் சூழலில் தம்மைத்தாமே ஆட்சி புரிந்து, கௌரவமாக வாழ வேண்டும் என்பதே எமது மக்களின் ஆழமான அபிலாசையாகும். சிங்கள மக்கள் இதனைப் புரிந்துகொள்ள வேண்டும். இந்த புரிந்துணர்வின் அத்திவாரத்தில் இருந்துதான் ஒரு நியாயமான, நிரந்தரமான தீர்வை கட்டியெழுப்புவது சாத்தியமாகும்.

தமிழர் பிரச்சனையின் அடிப்படைகளை உணர்ந்து சமாதன வழியில் தமிழர்களுக்கு தீர்வு வழங்க சந்திரிகா அரசு முன்வருமா என்பது எமக்கு சந்தேகமே.

தமிழர்களுக்கு எதிராக தென்னிலங்கையில் சூழுறும் இனக்குரோத வெறியாட்டங்கள், ஆட்சி அதிகாரத்தில் பேரினவாத சக்திகளின் மேலாண்மை, தொடர்ச்சியாக இராணுவ மயப்படுத்தப்படும் சிங்கள சமூகம், மகாசங்கத்தினரின் தமிழ் விரோதப்போக்கு, அரசாங்கத்தின் இராணுவத்தீர்வுத் கொள்கை இவற்றையெல்லாம் பார்க்கும்பொழுது தமிழரின் தேசிய இனப் பிரச்சினை சமாதான வழியில் தீர்க்கப்படுமா என்பது கேள்விக்குறியாகிறது. அத்தோடு சந்திரிகா அரசு மேற்கொள்ளும் சில குருட்டுத்தனமான அணுகுமுறைகளும் இனப்பிரச்சனையின் தீர்வுக்கு முட்டுக்கட்டையாகவும் அமைந்துவிடுகின்றது. பெருமாளுக்கு முதலமைச்சராக முடிசூட்டி முந்திய இந்திய அரசு இழைத்த மாபெரும் வரலாற்று தவறுபோல, சந்திரிகா அரசும் தமிழ் விரோதக்குழு ஒன்றை வட கிழக்கில் ஆட்சி அதிகாரத்தில் அமர்த்தியிருக்கிறது. இப்படியான நடவடிக்கைகள் மூலம் இந்த அரசாங்கம் தமிழ் மக்களின் வெறுப்பை சம்பாதித்துக் கொள்வதுடன் இனப்பிரச்சினையை மேலும் சிக்கலாக்கி விடுகிறது.

எமது அன்பான மக்களே,

**எமது தேசியப் பிரச்சினை இப்பொழுது உலக நாடுகளின் கவனத்தையும், ஆர்வத்தையும் ஈர்த்து வருகிறது. இப்பிரச்சினை சமாதான வழியில் தீர்க்கப்படவேண்டும் என சர்வதேச சமூகம் விரும்புகிறது. உலக மனச்சாட்சியின் பார்வை எம் பக்கம் திரும்பியிருப்பது நல்லதொரு அறிகுறியாகவே எமக்குத் தெரிகிறது.**

**நாம் சமாதானப் பேச்சுக்கோ அல்லது சமாதான வழியிலான அரசியத்தீர்விற்கோ முட்டுக்கட்டை போடவில்லை என்பதை உலகிற்கு உணர்த்தி வருகிறோம். சமாதானப் பேச்சுக்கு உகந்ததாக சமாதான சூழ்நிலை உருவாக்கப்பட வேண்டும் என்ற எமது நிலைப்பாட்டையும் தமிழர்களது அடிப்படைக் கோரிக்கைகளையும் உலக சமூகம் புரிந்து வருகிறது.** தமிழருக்கு எதிரான ஒடுக்குமுறையின் பின்னணியில் உள்ள சக்திகள் யாரென்பதையும் உலகம் இனங்கண்டு வருகிறது.

உலக நாடுகளில் இருந்து பெறப்படும் நிதி உதவியையும், ஆயுத உதவியையும் ஆதாரமாகக்கொண்டே சிங்கள அரசு தமிழருக்கு எதிராக இந்தப் போரை நடத்தி வருகிறது. பெரியதொரு அழிவுப்போரை நடத்திக் கொண்டு, பெருமளவு அப்பாவித் தமிழ் மக்களை கொன்றொழித்துக் கொண்டு சமாதானத்திற்காகவே சண்டையை நடத்துவதாக சந்திரிகா அரசு உலகத்தை ஏமாற்றி வந்திருக்கிறது. ஆயினும் சந்திரிகா அரசு நடத்தும் இப் போரின் நோக்கம் என்ன என்பதையும், இப்போரினால் புலிகளை வெற்றி கொள்ளவோ அன்றி தமிழரின் பிரச்சினையை தீர்க்கவோ முடியாது என்பதையும் மேற்குலகம் இப்பொழுது உணரத் தொடங்கியுள்ளது. எனவே சிங்கள இனவாத ஆட்சியாளரை சமாதானப் பாதைக்கு திருப்ப வேண்டும் என்றால் சிங்களத்திற்கு பொருளாதாரத் தீனி போட்டுவரும் உலக நாடுகளிடம்தான் அந்தக் கடிவாளம் இருக்கிறது. தென்னிலங்கை சமூகக் கட்டமைப்பின் சகல மட்டங்களிலும் பூதாகரமாக வளர்ந்துவரும் சிங்கள பௌத்த பேரினவாதம், தமிழ் மக்களை காருணியத்துடன் அரவணைத்துக் கொள்ளும் என நாம் நம்பவில்லை. சிங்கள தேசம் இனவாதப்பிடியில் இருந்து விடுபடாமல் தமிழர்களுக்கு எதிரான அடக்குமுறையை தொடருமானால் நாம் பிரிந்து சென்று தமிழீழத் தனியரசை அமைப்பதைத்தவிர எமக்கு வேறு வழியில்லை.

காலமும் வரலாறும் எமது போராட்ட இலட்சியத்திற்கு நியாயம் வழங்கியே தீரும். அப்போது உலகமும் அதனை ஏற்றுக் கொள்ளும்.

சத்திய இலட்சியத் தீயில் தம்மை அழித்துக்கொண்ட மாவீரர்கள் சரித்திரமாக நின்று எமக்கு வழிகாட்டுவார்கள். அந்த தர்மத்தின் வழியில் சென்று நாம் எமது இலட்சியத்தை அடைவோம் என்பது உறுதி.

புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்

வே. பிரபாகரன்
தலைவர்
தமிழீழ விடுதலைப் புலிகள்

# விடுதலைப் போரைத் தொடக்கி வைத்த தேசப் புதல்வர்களில்...

## லெப். சீலன்

சீலன் திருமலையின் வீர மண்ணிலே விளைந்த நன்முத்து. சிங்கள இனவெறியாளர்களின் நேரடியான ஒடுக்குமுறைக்குள் சிக்குண்டு கிடந்த திருமலையின் நடைமுறை அனுபவங்களை அவன் கண்கூடாகக் கண்டவன். சிறீலங்காவின் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்களும் கடற்படை, விமானப்படையின் அடக்குமுறைகளும் சிங்கள காடையர்கள், இராணுவம், பொலிஸ் ஆகியோரின் அரவணைப்புடன் தமிழ் மக்களைத் துன்புறுத்தும் கொடுமைகளும் திருமலையில் ஏராளம்.

இந்த ஆக்கிரமிப்புக்கு இடம்கொடுத்து வந்ததால்தான் திருமலை மண்ணையே சிங்களவர்களுக்கு பறிகொடுக்கும் நிலை வந்ததென்று சீலன் கொதிப்பான். கல்லூரி நாட்களிலேயே இனவெறிபிடித்த சிங்கள ஆளும் வர்க்கத்திற்கு எதிரான போராட்ட உணர்வு கொண்டவனாகச் சீலன் திகழ்ந்தான். 1978ம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் கொண்டுவரப்பட்ட சிறீலங்கா ஜனநாயக சோசலிசக் குடியரசின் அரசியல் சாசனத்தின் அடிப்படையில் ஜே.ஆர். ஜெவர்த்தன ஜனாதிபதியாகப் பதவியேற்கும் வைபவத்தினை தமிழீழ மண்ணில் அமர்க்களமாகக் கொண்டாட அரசு மேற்கொண்ட நடவடிக்கைகளை அம்பலப்படுத்தப் பாடசாலை மாணவனான சீலன் முன்வந்தான்.

இந்த வைபவத்தினையொட்டி திருமலை இந்துக் கல்லூரியில் தேசியக் கொடியை ஏற்றிவைக்க ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. நுட்பமான அறிவைப் பயன்படுத்தி பொஸ்பரஸ் என்னும் இரசாயனத்தை அத் தேசியக்கொடிச்சுருளில் மறைத்து வைத்தான். தேசியக்கொடி ஏற்றப்பட்டபோது, அது எரிந்து சாம்பலாகியது.

சந்தேகத்தின் பேரில் 18 வயது மாணவனான சீலன் கைது செய்யப்பட்டு சிங்களக் கூலிப்படையால் சித்திரவதை செய்யப்பட்டான். அந்த வயதிலும் தனக்கு உடந்தையாக இருந்த எவரையும் அவன் காட்டிக்கொடுக்கவில்லை. கொள்கையில் உறுதி கொண்டவர்களை சிறைச்சாலைகளும், சித்திரவதைகளும் என்ன செய்துவிடமுடியும்?

தனிமனித ரீதியிலான எதிர்ப்புணர்வால் அரச இயந்திரத்தை அழித்துவிட முடியாது என்ற அனுபவத்தையும் இவை சீலனுக்கு போதித்தன. இந்த அனுபவமே சீலன் தன்னை ஒரு புரட்சிகர இயக்கத்தில் இணைத்துக்கொள்ள உந்துசக்தியாக உதவியது.

★ ★ ★

## லெப். செல்லக்கிளி

07.04.1978 அதிகாலை 5.30 மணி, முருங்கன் - மடு வீதியின் உட்புறமுள்ள காட்டுக்குள் அமைந்திருந்த மரமுந்திரிகை தோட்டத்துக்குள் இருந்த விடுதலைப் புலிகளின் இருப்பிடத்தை முற்றுகையிட்ட உளவுப்படைப் பொலிஸ் அதிகாரி பஸ்தியாம்பிள்ளை குழுவினர் நிராயுதபாணிகளாக இருந்த விடுதலைப் புலிகளை சுற்றி வளைத்தனர். இயந்திரத் துப்பாக்கி, கைத்துப்பாக்கி, வேட்டைத்துப்பாக்கிகள் சகிதம் வந்திருந்த பொலிசாரிடம் பேச்சுக்கொடுத்து தன் புத்திசாதுரியத்தால் அவர்களின் கவனத்தை திசை திருப்புகிறான் செல்லக்கிளி.

பொலிசார் சற்று ஏமாந்திருந்த நேரத்தில் விடுதலைப் புலிகள் அனைவரும் பொலிசாரின் மேல் ஒன்றாகப் பாய்கிறார்கள். அடுத்தகணம்... பொலிசாரிடம் இருந்த ஆயுதங்கள் விடுதலைப் புலிகள் கைகளுக்கு மாறுகின்றன. முதன் முதலாக அன்றுதான் கையிலெடுத்த எஸ்.எம்.ஜி செல்லக்கிளி கைகளில் வேகமாக இயங்குகிறது. சில நிமிடங்கள் வேட்டுக்கள் தீர்க்கப்படுகின்றன...

விடுதலைப் புலிகளை வேட்டையாடவென வந்த இரகசியப் பொலிஸ் இன்ஸ்பெக்டர் பஸ்தியாம்பிள்ளை, பொலிஸ் இன்ஸ்பெக்டர் பேரம்பலம், சார்ஜன்ட் பாலசிங்கம், கான்ஸ்டபிள் சிறீவர்த்தன என ஒவ்வொருவராக சுட்டுவீழ்த்தப்பட்டனர். பொலிசார் கொண்டுவந்த ஆயுதங்களாலேயே அவர்கள் சுடப்பட்டதுடன், அவர்கள் வந்த காரையே எடுத்துக்கொண்டு விடுதலைப் புலிகள் ஆயுதங்களுடன் தப்பிச் சென்றனர். மூன்று நாட்களின் பின்னர்தான் பஸ்தியாம்பிள்ளை கோஷ்டியினரின் முடிவு பற்றிய செய்தி வெளியே தெரியவந்தது. செல்லக்கிளி மற்றும் போராளிகள் மத்தியில் இத் தாக்குதல் ஒரு புத்துணர்ச்சி ஏற்படுத்தியது.

★ ★ ★

## வீரவேங்கை ஆனந்த்

ஜே.ஆர். ஜெயவர்தனாவை பலத்த ஏமாற்றத்துக்குள்ளாக்கிய பெரும் தாக்குதலில் ஆனந்த் பங்குகொண்டிருந்தான். புலிகளை அடக்கி விட்டோம் என்று ஜே.ஆர் கொக்கரித்தபோது, விடுதலைப் போராட்டத்தினை அடக்கிவிட முடியாது என்ற செய்தியை 1982 மே மாதம் நெல்லியடியில் அரச படையினருக்கு எதிராக விடுதலைப் புலிகள் தொடுத்த வெற்றிகரமான தாக்குதல் தெளிவாக விளக்கியது. சிறீலங்கா சிங்கள அரச படைகளுக்கு எதிராக விடுதலைப் புலிகள் நடாத்திய இத் தாக்குதலை தமிழீழ மக்கள் மத்தியில் ஏற்பட்ட நம்பிக்கை அலையில் நல்லதொரு வெளிப்பாடாக ஆனந்த் அமைத்தான். இயக்க இரகசியத்தை பாதுகாப்பதற்காக சீலனை அடுத்து தன்னையும் சுட்டுவிடுமாறு சக வீரனைப் பணித்த ஆனந்தின் இலட்சியப்பற்று எம்மை எல்லாம் மெய்சிலிர்க்க வைக்கிறது.

★ ★ ★

## வீரவேங்கை சதீஸ்வரன்

உமையாள்புரத்தில் விடுதலைப் புலிகள் நடாத்திய தாக்குதலின்போது பயன்படுத்திய வாகனத்தை சதீஸ்வரனே வாங்கிக்கொடுத்தார் என்ற குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்டார். பயங்கரவாதக்குற்றச் செயலாகக் கருதப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டார். இது அவருள் மேலும் தேசிய இயக்கத்தினை வளர்க்கவேண்டும் என்ற பேரார்வமும் இலட்சியப்பற்றும் வளர்ந்ததே அன்றி ஒடுங்கிப்போய்விடவில்லை. வெலிக்கடைச் சிறையில் அடைக்கப்பட்டார். சிறைக்கம்பிக்குள் கட்டுண்டு கிடந்து பல இரவுகள் அழுதார். தனக்காக அல்ல, தன் தாய்த் தேசத்திற்காக. தன் தேச மக்களுக்காக இரண்டு ஆண்டுகள் சிறையில் கிடந்த சதீஸ்வரன் சிங்கள இனவாதக் குண்டர்கள் மூலம் தூண்டிவிடப்பட்டு வெலிக்கடைச் சிறைச்சாலைத் தாக்குதலின் போது நிராயுதபாணியாக சிங்கள காடையர்களின் சித்திரவதைக்குள்ளாகி வீரச்சாவைத் தழுவிக்கொண்டார்.



## லெப்.விக்டர்

### ஞா.விக்ரோறியன் நேசராஜா

*(கிளிநொச்சி)*

வயவையிலே மழலையாக
வன்னி மண்ணில் வரலாறாகிய எம் நேசா
அன்று உன் இதயமதிலிருந்த
இலட்சிய உறுதி இன்று ஓயாத அலைகளாய்
ஆர்ப்பரிக்கின்றது பார் !
அன்றொருநாள் இந்தியப்படை வந்து –
'வெந்ததைத் தின்று மூலையில்
முடங்கிக் கிடவென' எம்மினத்தை
அராஜகத்தால் அச்சுறுத்தியது.
எம் இன மானம் காக்க அணிதிரண்ட வேங்கைகளில்
நீயுமொருவனாய் அவ்வராஜகம் வீழ்த்த வீறுகொண்டாய் !
வீரக்களமாடி வித்தாக வீழ்ந்த உன்னை
எம் தாய் நிலம் கீறி விதைத்துவிட்டோம்.
மீண்டுமொருமுறை எம்தேசத்தைப் பார் !
ஆயிரமாயிரம் வேங்கைகள் அணியாகச் செல்கின்றனர்.
அவ்வணியின் எழுச்சியில் உன் முகமும் கீற்றாகத் தெரிகின்றது.



(06.08.1988 இல் நித்திகைக்குளம் - மணலாற்றில், இந்தியப்படை முகாம் மீதான தாக்குதலின்போது வீரச்சாவடைந்தார். இவருடன் வீரச்சாவடைந்த மாவீரர்களுக்கும் எமது வணக்கங்கள்)

*- அன்புக் குடும்பத்தினர்*

# ஓ... சலப்பையாறே

அன்றைய காலைப்பொழுது மிகவும் அமைதியாக மலர்கின்றது. அமைதிக்குப் பின் ஆபத்து ஏதும் உண்டு என்பது நியதி. எமது தோழர்கள் அன்று இரவு நிகழப்போகும் அதிர்ச்சியையும், சோகத்தையும் அறியாதவர்களாய் தமது பாசறைகளில் தத்தமது வேலைகளில் ஈடுபட்டுக்கொண்டிருந்தனர். கடந்த சில நாட்களுக்கு முன் நடந்த மோதலில் இரண்டாவது லெப். ராமுவின் வீரமரணத்தால் பாதிக்கப்பட்டு' சோகமயமாகக் காணப்பட்டனர். ஆனால், அவர்களின் செயல்களில் உறுதி மேலோங்கி நின்றது! ராமுவின் வீரமரணத்தை ஈடுசெய்வதற்காக ஐ.பி.கே.எவ். இனரைப் பழிவாங்க சுரேந்திரன் திட்டமிட்டான். 26.09.88 அன்று சுரேந்திரன் தலைமையில் நான்கு பிரிவுகளாக எமது தோழர்கள் புறப்பட்டனர். அதில் ஒரு பிரிவுக்கு சுரேந்திரன் தலைமை தாங்கினான். ஆனால், அதில் வீரமரணத்தைத் தழுவுவான் என்று யாரும் நினைக்கவில்லை! ஆம் அந்த சோகமயமான நிகழ்ச்சி அன்று இரவு [26.09.88] நடந்துவிட்டது. தனது தோழர்களை அழைத்துக்கொண்டு சலப்பையாற்றை நோக்கி விரைந்தான். அங்கே எமது தோழன் சுரேந்திரன் மிகவும் வீரத்துடன் சளைக்காமல் போராடி தன் உயிரை தமிழீழ விடுதலைக்காக அர்ப்பணித்தான். தமிழீழ மண்ணை தனது செங்குருதியால் நனைத்தான். ஆனால், அவன் உடல் மட்டுமே எம்மைவிட்டுச் சென்றது. அவனுடைய நினைவுகள் எம்முடனேயே உலாவருகின்றன. அவன் விட்டுச்சென்ற பாதச்சுவடுகளைப் பின் தொடர்கின்றோம். அவனுடைய இழப்பை ஈடுசெய்ய முடியாது. அவனுடன் இருந்த தோழர்கள் யாவரும் கதறி அழுதனர். சுரேந்திரன் போர்த் தலைவனாக நடந்ததில்லை. நண்பனுக்கு நண்பனாக, சகோதரனாக எல்லோருடனும் பழகினான். அவன் அன்பு எல்லோர் மனதிலும் நிறைந்திருந்தது. அவன் தன் வீரமரணத்திலும் காவியம் படைத்தான். அவன் சலப்பையாறு கடைசி மோதலில் பங்குபற்றி புதிய அத்தியாயம் படைத்துவிட்டுச் சென்றான். அவனுடைய வீரமரணத்தின் போது முதன் முதலாக திருகோணமலையில் ஐ.பி.கே.எவ் உடனான நேரடி மோதலில் பல ஆயுதங்களைக் கைப்பற்றினோம். SLR-2, SMG-1 கண்ணிவெடி கண்டுபிடிக்கும் கருவி-1 மற்றும் ரவைகள் ஆகியன அங்கு கைப்பற்றப்பட்டன.



திருமலையைப் பிறப்பிடமாகக் கொண்ட சிறீபாஸ்கர் என்ற இயற்பெயரைக் கொண்ட சுரேந்திரன் தன்னுடைய பள்ளிப்படிப்பு முதல் தமிழீழத்திற்காக தன்னுடைய பங்களிப்பை அர்ப்பணித்தவன். 1977 கலவரத்தின் போது தன்னுடைய வீட்டை இழந்து இருக்க இடமில்லாமல் ஒவ்வொரு இடமாகச் சுற்றித் திரிந்தவன்.

திருமலையில் தொடர்ந்து நடந்த வன்முறைச் சம்பவங்களால், தமிழின ஒடுக்குமுறையாளர்களாகிய சிறீலங்கா அரசுகளில் ஏற்பட்ட வெறுப்பினால் சுதந்திரத் தமிழீழம் ஒன்றேதான் எதிர்காலச் சந்ததிக்கு வழி என்று எண்ணி சிறீபாஸ்கர், 1983ம் ஆண்டு தமிழீழ விடுதலைப் புலிகளுடன் இணைந்து கொண்டான். பின் தன் பயிற்சியை முடித்துக்கொண்டு, சுரேந்திரன் என்ற பெயருள்ள வேங்கையாக நீண்டகாலப் போராட்டத்திற்குத் தன்னைத் தயார்ப்படுத்திக்கொண்டு களத்தில் இறங்கினான். தமிழீழ விடுதலைக்காக தன்னை அர்ப்பணித்த சுரேந்திரன் முதல் தடவையாக தமிழீழ விடுதலைப் புலிகளின் பயிற்சிக்கென வருபவர்களைப் பாதுகாப்பாக அழைத்து வருவதில் ஈடுபட்டான். பின் வடமராட்சியில் கப்டன் ரஞ்சன் லாலா [வீரமரணம் அடைந்த மத்திய குழு உறுப்பினர்] உடன் பணிபுரிந்தான். இவன் தனது தோற்றத்தினால் சிங்களவன் என்ற பட்டப்பெயரால் எல்லோராலும் அழைக்கப்பட்டான். சுரேந்திரன் என்றால் தெரியாதவர்கள் கூட சிங்களவன் என்றால் அவரா என்று சொல்கிற அளவிற்கு அன்புடனும், குழந்தை போன்றும் எல்லோருடனும் பழகிவந்தான். அந்த நாட்களில் ரஞ்சன் லாலாவுடன் தமிழீழத்தின் துரோகிகளுக்கு மரண தண்டனை வழங்குவதில் அவன் செயற்பாடுகள் குறிப்பிடத்தக்கவை.

கப்டன் பண்டிதர் [மத்திய குழு உறுப்பினர்] 1984ம் ஆண்டு வல்வெட்டித்துறையில் அட்டகாசம் புரிந்த சிறீலங்கா கடற்படையினரைத் தாக்கி 7 ஆயுதங்களைக் கைப்பற்றிய நிகழ்விலும் சுரேந்திரன் பங்கு குறிப்பிடத்தக்கது.

மற்றும் அக்காலகட்டத்தில் நடந்த பல தாக்குதல்களிலும் இவன் பங்குபற்றினான். ஒருமுறை சிங்களவன் என இவனை எண்ணிய தமிழ் மக்கள் பிடித்துவிட்டனர். பின்னர் எம்மவர்கள் சென்று அழைத்து வந்தனர். இவனைப் பார்த்து எவருமே தமிழன் என்று சொல்லமாட்டார்கள். வடமராட்சியில் நின்ற சுரேந்திரன், வீரமரணமடைந்த லெப்.கேணல் சந்தோசம் மாஸ்டருடன் தன்னுடைய சொந்த மண்ணுக்குப் புறப்பட்டான். அங்கும் அவன் தமிழீழப் பணிகளைச் சளைக்காமல் செவ்வனே புரிந்தான். ஆபத்தான வேளையிலும் அவனிடம் பதட்டம் இருக்காது. நிதானமாகச் செயற்படுவான். ஆபத்தென்றாலும், குதூகலம் என்றாலும் ஒரே நிலையில்தான் இருப்பான். எதற்கும் அஞ்சமாட்டான். திருமலையில் இவனுடைய சாதனைகளில் முதல் சாதனையாக வீரமரணமடைந்த லெப்.கேணல் புலேந்திரன் தலைமையில் பராக்கிரமபுரத்தில் சிறீலங்கா இராணுவத்திற்கு எதிரான மோதலில் பங்குபற்றினான். இதில் எம்மவர்கள் ஐங்கரன், கடாபி ஆகியோர் வீரமரணமடைந்தனர். இவன் பங்குபற்றிய தாக்குதல்களில் 85 இல் குச்சவெளி பொலிஸ் நிலையத் தாக்குதல், சிறீலங்கா இராணுவத்துடனான நேரடி மோதல் என்பன குறிப்பிடத்தக்கது. இத்தனைத் தொடர்ந்து 1987ம் ஆண்டு இலங்கை-இந்திய ஒப்பந்தத்தின் போது யாழ்ப்பாணத்தில் சில நாட்கள் தங்கினான். வீரமரணமடைந்த லெப்.கேணல் புலேந்திரனின் இறுதிச் சடங்கை இவன் முன்னின்று நடத்தினான்.

இதற்கிடையில் எமது வீரர் பன்னிரண்டு பேரின் வீரமரணத்தின் எதிரொலியாக இந்திய இராணுவத்துடன் மோதல்கள் ஆரம்பமானவுடன், தன்னுடைய தோழர்களுடன் திருமலையை நோக்கித் தன்னுடைய பயணத்தைத் தொடர்ந்தான்.

இதற்கிடையில் புதுக்கோட்டைச் சந்தியில் [புத்தூர்] எதிர்பாராத விதமாக இந்திய இராணுவத்தின் மூர்க்கத்தனமான தாக்குதலில் இருந்து வெற்றிகரமாக மீண்டு திருமலை சென்ற அவன், முதன் முதலாக அங்கு நடந்த கண்ணிவெடித் தாக்குதலில் முக்கிய பங்கு வகித்தான். அதில் கப்டன் அத்தான் [குமார்] வீரமரணமடைந்தான். இந்தத் தாக்குதலில் மிதிக் கண்ணிவெடிகள் [ஐ.பி.கே.எவ் இனரால் வைக்கப்பட்டவை] சிலவற்றைக் கண்டெடுத்தான். இப்படித் தமிழின விடுதலைக்காக ஒவ்வொரு அடியையும் நிதானமாக வைத்தான். இவன் எடுக்கும் முடிவுகள் நிதானத்துடன் இருக்கும். பதட்டம் என்பது இவனிடம் துளிகூட இல்லை. அருகில் இராணுவம் என்றாலும் பயப்படாமலும், பதட்டப்படாமலும் கையில் ஆயுதம் ஏதும் இல்லை என்றாலும் முன்னேறுவான். நண்பர்களைக் கேலிசெய்வதென்றால் இவனுக்குப் பிடிக்கும். இவனையும் சக போராளிகள் கேலி செய்வார்கள். கடைசி நேரத்திலும் நீண்டகாலப் போராட்டத்திற்கு உணவுப் பொருட்களைச் சேர்த்தவண்ணம் இருந்தான்.

அவனுடைய செயல்கள், நினைவுகள் எமது நெஞ்சை விட்டு என்றும் அழியாது.

*- சிறீபாஸ்கரன்*
*[முருகாபுரி- திருமலை.]*

[14–ம் பக்கத் தொடர்ச்சி]

## தாய் மடிவிட்டு...

யாரும் யாருடனும் கதைக்காமல் அமைதியாக இருந்தார்கள். ஆனால், நேரம் யாருக்கும் காத்துக்கொண்டிராமல் விரைந்து ஓடிக்கொண்டிருந்தது.

வித்தியாதரன் வருவதாய் காணவில்லை. வீட்டில் நிலவிய அமைதியைக் குலைத்து அம்மாவிடம் கதைகொடுத்தாள் மூத்தவள். 'அம்மா தேத்தண்ணி போடவே ' ஓம்பிள்ளை எனக்கும் வயிறு புகையுது வையன் குடிப்பம், 'ஏன்பிள்ளை இவ்வளவு நேரமாய் போச்சு தம்பியை இன்னும் காணேல்லை வந்திடுவான்தானே' என்று ஆவலாய் கேட்டாள் திலகம். 'ஓம் அம்மா அண்ணா வந்திடும்' என்று இளையவள் அம்மாவுக்கு ஆறுதல் கூறினாள். மூத்தவள் தேநீரை தாயிடம் கொடுக்கவும், வாசலில் ஒரு மோட்டார் சைக்கிள் வந்து நிற்கவும் சரியாக இருந்தது. மகன் இயக்கத்தில் சேர்ந்துவிட்டான் என்று சொல்ல ஒரு பெடியன் மோட்டார் சைக்கிளில் வந்த நினைவு மீண்டும் மனக்கண் முன் நிழலாட, வாசலுக்கு எழுந்து ஓடினாள் திகலம். இன்றும் அன்றுபோல வேறொரு இயக்க உறுப்பினர்தான் நின்றார். தம்பி... என்ற திலகத்தின் வாயில் இருந்து வேறு எந்தச் சொற்களும் வரமறுத்தன. கண்ணில் இருந்து கண்ணீர் வடிந்தது. வாய் விம்மியது. மோட்டார் சைக்கிளில் வந்தவர், 'அம்மா வீட்டுக்குள்ளை வாங்கோவன்' என்று வீட்டுக்குள் அழைத்துவந்தார். 'நானும் உங்கள் பிள்ளைதான் என்னைப் பார்க்க உங்கடை பிள்ளைபோல இல்லையா' என்று வலிந்து ஒரு புன்னகையை வரவழைத்துக்கொண்டார். 'எல்லாரும் என்ர பிள்ளைகள் தான் ஆனால், என்ர, ராசா ஏன் வரேல்லை' என்று கலங்கிய கண்களுடன் அந்தத்தாய் கேட்க என்ன சொல்வது என்று தெரியாமல் நின்றார் வந்தவர். தயங்கித் தயங்கி வந்தவர் ஏதோ சொல்ல எத்தனித்தார். சொல்ல முடியாமல் தவித்தார் என்பது அவரைப் பார்த்ததும் மூத்த மகளுக்கு விளங்கியது. 'அண்ணாவுக்கு என்ன நடந்தது சொல்லுங்கோ' என்று கத்தத் தொடங்கிவிட்டாள். அக்கம் பக்கத்தில் உள்ளவர்கள் எல்லாம் கூடத் தொடங்கிவிட்டார்கள். வந்தவரும் இனியும் தாமதிக்கக் கூடாது என்று நினைத்தவராக 'இண்டைக்கு ஆமிக்காரர் ஒரு இராணுவ நடவடிக்கை மேற்கொள்ள எத்தனித்தவங்கள், நாங்கள் எதிர்த்துப் போராடி அவங்களை காம்புக்கு திருப்பி அனுப்பிப்போட்டம், இதிலை அவங்களுக்கு நல்லசேதம். எங்கடை பகுதியிலும் ஆறு பேருக்குக் காயம் இரண்டு பேர் வீரச்சாவு' என்று இன்று நடந்த இராணுவ நடவடிக்க்கை பற்றி கூறிக்கொண்டு இருந்தார். சம்பந்தமில்லாமல் இப்படிக் கதைக்கமாட்டார் என்பது திலகம் உட்பட அனைவருக்கும் விளங்கியது. எல்லோரும் அழத்தொடங்கினார்கள். மீண்டும் வந்தவர் கதைக்கத் தொடங்கினார். 'வித்தியாதரன் இண்டைக்கு வீட்டுக்குத்தான் வருவதாகக் கூறியதாகவும், அம்மா பார்த்துக்கொண்டு இருப்பா என்றும் எனக்கு கூறிக்கொண்டிருக்கேக்கைதான் உயிர்பிரிந்தது' என்று ஒருவாறு சம்பவத்தைக் கூறி முடித்தார். எல்லாரும் யாருக்குயார் ஆறுதல் கூறுவது என்று தெரியாமல் அழுதுகொண்டிருந்தார்கள். வந்தவர் 'நான் போகப் போறன் இண்டைக்கு யுத்தத்திலை நிண்ட போராளிகளுக்குச் சாப்பாட்டுக்கு ஒழுங்கு பண்ணவேண்டும்' என்று எழும்பினார். அழுது கொண்டிருந்த திலகம் ஏதோ நினைத்தவளாய் கண்ணீரைத் துடைத்துக்கொண்டு எழுந்து 'சமைத்த சாப்பாடுகளை பாசல் கட்டி இந்த தம்பியிடம் கொடுத்துவிடு பிள்ளை பசியோடிருக்கும் எங்கடை பிள்ளைகள் சாப்பிடட்டும்' என்றாள். ஆம்! அவளும் துணிந்துவிட்டாள் ஒரு வீரத்தாயாக.

*- றாஜி தாசன் [இலண்டன்]*

# மீண்டும் யாழ். மண்ணில் பதிந்த எம் தடங்கள்



## பாகம் - 22

30-04-2000 அன்று பளை நகரைப் புலிகள் விடுவித்தனர். இதன்மூலம் 26-03-2000 அன்று வடமராட்சி கிழக்கில் தரையிறக்கப்பட்டு அப்படியே சிறுநீரேரியைக் கடந்து கண்டிவீதியை கைப்பற்றிய அணியினரும் ஏனைய அணியினரும் இணைந்து கொண்டனர். பிற்பகல் 6.30 மணியளவில் இந்தக் கைகுலுக்கல் இடம்பெற்றது. எனினும் திக்குத் திசை தெரியாது அங்கும் இங்கும் ஓடி கிளித்தட்டு மறித்துக் கொண்டிருக்கும் இராணுவத்தினர் திரிவதால் எமக்கு அங்கே செல்ல அனுமதி கிடைக்கவில்லை.

01-05-2000 அன்று காலை 7.00 மணியளவில் இப்பகுதிகளைப் பார்வையிடச் சென்ற தளபதி கேணல் பானு அவர்களுடன் நாமும் தொற்றிக்கொண்டோம். புதுக்கோட்டைச் சந்தியை அடையும்போது யுத்தப் பிரதேசத்தின் உண்மையான வடிவத்தைக் கண்டோம். குறுக்குமறுக்காக, வட்டுக்குள், மரங்களில் என எறிகணைகள் வீழ்ந்து வெடித்துச் சிதறியிருந்தன. போர்முறையில் சொல்வதானால் அந்த இடம் 'புக்கை'.

சில மினிமுகாம்களைக் கடந்து சென்றால் இரு தனியார் தொலைதொடர்பு நிலையங்கள் இருந்தன. ஒன்று வண்ணாங்கேணியில் உள்ள வளர்மதி தொலைத்தொடர்பு நிலையம், மற்றது தேவா தொலைத் தொடர்பு நிலையம். பின்னயதில் சிங்களத்திலும் குறிப்புகள் காணப்பட்டன. அதையும் தாண்டிச் சென்றால், பளை மத்திய பேருந்து நிலையம். பளைச் சந்தைக்குள் புதிய நவீன சந்தைக்கான இருமாடி கட்டடம் அரைகுறையாகக் காணப்பட்டது. அதற்குள்ளும் இராணுவத்தினர் மண்மூடைகளை அடுக்கி பாதுகாப்பு தேடியிருந்தனர்.

அதையும் தாண்டிச் சென்றால் பொலிஸ் நிலையம் இருந்தது. இது ஓரளவுக்குச் சுத்தமாக்கப்பட்டு இருந்தது. சீமெந்து மற்றும் தண்டவாளங்களைக் கொண்டு அமைக்கப்பட்ட பலமான பதுங்கு குழிகளை பார்வையிடச் சென்றபோது உள்ளே நிறைய மெத்தைகள் அடுக்கி வைக்கப்பட்டிருந்தன. உள்ளே முழுமையாகப் பார்ப்பதற்கு எனது மூக்கு ஒத்துழைக்க மறுத்துவிட்டது.

### களமுனையில் இருந்து

அந்தப் பொலிஸ் நிலையத்தின் முற் பகுதியிலும் ஒரு காப்பரண் இருந்தது. வீதி ஒழுங்குகள் பற்றிய சுவரொட்டி முதலானவற்றையும் கண்டோம். அங்கிருந்து புறப்பட்டு கைகுலுக்கல் நடைபெற்ற பகுதிக்குச் சென்றோம். போகும் வழியில் பளை வைத்தியசாலைக்கு அண்மையில் இராணுவச் சிப்பாயின் சடலம் ஒன்று காணப்பட்டது. அதையும் தாண்டிச் சென்றால் ஒரு இராணுவ வாகனம் பல பொருட்களுடன் இடைவழியில் கைவிடப்பட்டிருந்தது. அதற்கு அருகாமையிலும் பல இராணுவச் சடலங்கள் காணப்பட்டன. இங்கு நாம் விக்டர் கவச எதிர்ப்புப் படையணியைச் சேர்ந்த இளங்கீரன், சாள்ஸ் அன்ரனி படைப் பிரிவின் தளபதி ராஜசிங்கன் ஆகியோரைச் சந்தித்தோம். அங்கிருந்து பார்க்கையில் நீல நிற ஆட்டோ ஒன்று தெரிந்தது. இந்த ஆட்டோவில்தான் பிரசவம் முடிந்து திரும்பிய தம்பதிகள் மீது இராணுவத்தினர் சுட்டதில் அவர்கள் பலியாகியிருந்தனர். குழந்தைக்கும் துப்பாக்கிச் சூடுபட்டிருந்தது.

அங்கிருந்து நிலமைகளை அவதானித்துக்கொண்டே ராஜசிங்கன், இளங்கீரன் ஆகியோருடன் உரையாடினோம். அவர்கள் சண்டை நடைபெற்ற இடங்கள், இராணுவச் சடலங்கள் கிடக்கும் இடங்கள் பற்றிக் கூறினார்கள். அதேவேளை அடுக்கடுக்காக எறிகணைகள் வந்து வீழ்ந்து வெடித்துக் கொண்டிருந்தன. பேட்டி காண்பதா? பதுங்குகுழிக்குள் தஞ்சம் புகுவதா? என்ற நிலை எமக்கு. அவர்களோ சாவகாசமாகக் கதைத்துவிட்டு எம்மை அனுப்பி வைத்தனர். தொடர்ந்து பளை வைத்தியசாலையை சென்றடைந்தோம். அது பெயர்ப் பலகையில் தான் அரசினர் வைத்தியசாலை. வடிவமோ ஒரு இராணுவ வைத்தியசாலையாகவே இருந்தது. வெளியில் பஸ்தரிப்பு நிலையத்தில், 'துயர் உண்மையை உணர்த்தும்' என எழுதப்பட்டிருந்தது. வைத்தியசாலை வளாகத்தினுள் Strong Points என்ற தலைப்பில் ஒரு வரைபடம் காணப்பட்டது. இராணுவத்தால் விட்டுச் செல்லப்பட்டிருந்த இந்த வரைபடத்தில் தலைப்பிற்கு ஏற்றவாறு இடங்கள் குறிப்பிடப்பட்டிருந்தன.

அங்கிருந்து புலோப்பளை வழியாக 2 கிலோ மீற்றர் தூரத்தில் உள்ள பிரதான முகாமுக்குச் சென்றோம். பல பொதுமக்களின் வீடுகள் தொடர்ச்சியாக இணைக்கப்பட்டு இராணுவ முகாம் அமைக்கப்பட்டிருந்தது. வீடுகள் மட்டுமல்ல அங்கிருந்த பொருட்களும் தளபாடங்களும்தான். அங்கிருந்த ஆயுத தளபாடங்களைப் பார்வையிட்டோம். பொதுமக்களின் வீடுகள் இராணுவ முகாமாக்கப்பட்டதால் ஏற்பட்ட சேதங்களைப் பார்க்க முடிந்தது. நேரே புலோப்பளை வீதி வழியே கடற்கரைக்குச் சென்றோம். அங்கு இராணுவம் விட்டுச் சென்றிருந்த எச்ச சொச்சங்களை காணமுடிந்தது. அங்கு சில படகுகளும் காணப்பட்டன. பின்னர் அங்கிருந்து புறப்பட்டு புதுக்காட்டுச் சந்தியை அடைந்தோம். அங்கு கெமுனு வோச் 10வது பிரிவு தங்கியிருந்த பகுதியைப் பார்வையிட்டோம்.

அதன் பின்னர் மாசார் வழியாக மருதங்கேணி பாலத்தடியை அடைந்தோம். புலிகள் முன்னேறிச் சென்ற பாதை வழியே சென்றோம். அந்த அனுபவம் கொஞ்சம் திகிலானது.

[தொடரும்]


எமது தேசப் புதல்வர்களுக்காக தலைசாய்த்து வணங்குகிறோம்.

எம் தேசத்தின்



உயிர்ப்பூக்களே...

வண்ணத் தமிழ் ஈழத்திலே
எங்கள் வடிவழகர்கள்
துயில் கொள்ளும் ஆலயத்திலே
சிரம் தாழ்த்தி உம்மை வணங்கி நிற்கின்றோம்.
தலைவனுக்கு தோள் வலிமை தந்து
தமிழ் இனத்துக்கு பலம் தந்து
ஈழ மண்ணுக்கு உரம் தந்து
விண்ணுக்கு வீரம் தரச் சென்ற மாவீரரே !
கோணமாமலைக் கோட்டையிலே
எம் இனிய தலைவன் கரங்களாலே
ஏற்றிவைக்கும் புலிக்கொடி மேலே– மலர்தூவி
அஞ்சலி செய்ய விண்ணுக்கு முந்திச் சென்ற மாவீரரே !
வையம் உள்ளளவும் வான் புகழ் கொண்ட மாவீரரே !
எங்கள் தலைவனின் இலட்சிய வெற்றியாலே – நீவீர்
அமைதியாக துயில் கொள்ளுவீரே
தர்ம வழி தனில் எம் தலைவன்
ஏற்றபணி முடிந்தே உறங்குவீரே
மாவீரரே !

– வல்வைக்கிளி

02.12.2000 அன்று லண்டனில் நடைபெறும் மாவீரர் நாளை முன்னிட்டு மாவீரர்களை கௌரவிக்கும் முகமாக எமது நிறுவனம் மூடப்பட்டிருக்கும்.

தமிழினி
பல்பொருள் அங்காடி
TAMILINI Cash and Carry
195-197 The Broadway, Southall
Middx Ub1 1LZ
Tél: 0208-606 9900
Fax: 0181-813 8269



Lune
Éléctronique
Informatique
Tél: 01 53 26 76 70
அனைத்து வகை
கணினிகள்
DVD க்கள்
கைத்தொலைபேசிகள்
மற்றும்
ஏனைய
இலத்திரனியல்
உபகரணத் தேவைகளுக்கும்
நீங்கள்
நம்பிக்கையுடன்
நாடவேண்டியது....
Lune
ELECTRONIAQUE
INFORMATIQUE
SFR
5,Rue Perdonnet
75010 Paris
France




தென்றல் இல்லம்
தமிழீழ முறையில் உடனுக்குடன் உங்கள் முன்னிலையில்
சுவை, மணம் குன்றாமல் அரைத்துத் தரப்படுகின்றது
தென்றல் கோப்பித்தூள்.
உங்கள் இல்லங்களில் நிகழும் திருமண, பிறந்தநாள் விழாக்கள் மற்றும் அனைத்து வைபவங்களுக்குமான அலங்கரிக்கப்பட்ட கேக் வகைகள், நிச் கேக் என்பனவற்றை உங்கள் மனங்கவர் வடிவங்களில் செய்து தரவும், அனைத்துச் சிற்றூண்டி வகைகள், உணவு வகைகளை சுவையாகத் தயாரித்துத்தரவும்– அவற்றைப் பரிமாற எவர்சில்வர் தட்டுக்களை வாடகைக்குப் பெற்றுக்கொள்ளவும், மணவறை, மணமக்கள் அலங்காரம், கழுத்துமாலை, தலைமாலை, மணப் பெண்ணுக்கும் தோழியர்க்குமான மலர்ச் செண்டுகள் என்பனவற்றுடன், புடவைகளுக்கான சட்டைகளையும் [சாறி பிளவுஸ்] தைத்துத் தரவும், உங்கள் விழாக்களை சிறந்த முறையில் ஒளிப்பதிவு [வீடியோ] செய்துதரவும், தரமான நிழற்படங்கள் [போட்டோ] எடுக்கவும் நாடுங்கள்
தென்றல் இல்லம்.
தாயகத்தில் இயங்கும் செஞ்சோலை சிறுவர் நிலையத்தைப் பராமரிப்பதற்காக ஆரம்பிக்கப்பட்டுள்ள தென்றல் இல்லத்தின் சேவை உங்களுக்கே!
உங்கள் மகிழ்வில் மலர்ந்தாடவுள்ள செஞ்சோலைப் பூக்களை மலர்விக்க தென்றல் இல்லத்தை நாடுங்கள்.
60, Rue Louis Blanc,
75010 Paris.
Mº: La Chapelle
Tél: 01 42 09 36 09
தமிழ்ப் பெண்கள் அமைப்பு - பிரான்ஸ்




லாசப்பல் மெத்றோ அருகாமையில்
மக்கள் கடை
இலங்கை, இந்தியா, கென்யா, டொமினிக்கன் நாடுகளில் இருந்து தரமான மரக்கறி, கடலுணவு வகைகளை நாமே நேரடியாக இறக்குமதி செய்கின்றோம். புதன்கிழமை தோறும் விசேட மரக்கறிகளோடு முருங்கையிலை (கீரை) என்பனவும்.
ஐரோப்பா வாழ் தமிழ் மக்களின் நன்மதிப்புப் பெற்ற முன்னணிப்பொருட்களாகத் திகழும் Palmax, Kana, நரேஷ், லீலா, றொபினா ஆகியவற்றின் தயாரிப்புக்களான அரிசிமா, அரிசி, மிளகாய்த்தூள் மற்றும் அனைத்து பொருட்களை பெற்றுக்கொள்ளவும்,
உங்கள் உறவுகளோடு நீண்ட நேரம் தொலைபேசியில் பேசிட Lune Télécarte, Commando தொலைபேசி அட்டைகளை மலிவு விலையில் பெற்றுக்கொள்ளவும்
உங்கள் தேவைகளுக்குரிய சகல எவர்சில்வர் பாத்திரங்களுக்கும்
குறிப்பு: மரக்கறி வகைகள் அனைத்தும் வர்த்தகர்களுக்கும் விசேட மலிவு விலையில்.
தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டால் உங்களை நாங்களே நேரில் சந்திப்போம்.
மக்கள் கடை
61-63, Rue Louis Blanc,
75010 Paris.
Tél: / Fax: 01 42 05 99 02




# அல்ஜீரியாவில் நடந்த சித்திரவதைகளுக்கு பொறுப்பானவர்கள் தண்டிக்கப்படவேண்டுமென கோரிக்கை

*26.11.2000*

அல்ஜீரியாவில் சுதந்திரப் போராட்ட காலத்தில் இறந்து போனவர்களதும், பாதிக்கப்பட்டவர்களதும் நலன்களை கண்காணிக்கும் அமைப்பொன்று மேற்படி யுத்தத்தின்போது அல்ஜீரிய மக்களை சித்திரவதைக்குள்ளாக்கிய பிரெஞ்சு இராணுவ அதிகாரிகள் நீதியின் முன் கொண்டுவரப்பட வேண்டுமென கோரிக்கை விடுத்துள்ளது. அண்மையில், இரண்டு முன்னாள் பிரெஞ்சு இராணுவ அதிகாரிகள் 1957ல் நடந்த அல்ஜீரிய யுத்தத்தில் சித்திரவதைகளும், படுகொலைகளும் இடம்பெற்றன என கூறியதையடுத்து மேற்படி சம்பவங்கள் இப்போது சர்ச்சைக்குள்ளதாக மாறியுள்ளது. பிரான்சின் காலனித்துவ நாடாகவிருந்த அல்ஜீரியாவில் 1954ம் ஆண்டு முதல் 1962ம் ஆண்டு வரை தேசிய வாதிகளுடனான யுத்தத்தை பிரான்ஸ் நடாத்தியது. இந்த யுத்தத்தின்போது பிரெஞ்சு இராணுவத்தின் சில அதிகாரிகள் கட்டுப்பாடுகளை மீறி நடந்துகொண்டதாயும். அப்பாவி மக்கள் மீது கடுமையான சித்திரவதைகளை மேற்கொண்டதாயும் தற்போது சொல்லப்பட்டுள்ளது.

1945 மே—08 எனப்படும் அமைப்பின் தலைவர் சர்வதேச செய்தித் தாபனமொன்றிற்குக் கூறுகையில், அன்று நடந்த சித்திரவதைகளுக்குப் பொறுப்பானவர்கள் பிரெஞ்சு நீதி மன்றங்களுக்கோ அல்லது சர்வதேச நீதிமன்றங்களுக்கோ அழைக்கப்படவேண்டுமெனவும், அங்கு அவர்கள் விசாரிக்கப்பட வேண்டுமெனவும் கூறினர். சர்வதேச மன்னிப்புச் சபை வெள்ளியன்று விடுத்த அறிக்கையொன்றில் திட்டமிட்ட ரீதியில் நடாத்தப்பட்ட சித்திரவதைகளுக்கும் பரவலான ஆட் கடத்தல்களுக்கும் பொறுப்பானவர்கள் மனித உரிமை மீறல்களுக்கான விசாரணைகளை சந்திக்க வேண்டுமென கூறியுள்ளது. அன்று நடந்த யுத்தத்தின்போது தேசிய வாதிகளுக்கு ஆதரவாக செயற்பட்ட பிரெஞ்சுக் கம்யூனிசக் கட்சி நடந்த சம்பவங்களை விசாரிக்கப் பாராளுமன்ற அமைப்பொன்று ஏற்படுத்தப் படவேண்டுமென கேட்டுள்ளது.

மேற்படி சம்பவம் பற்றிய கருத்துக்கள் எதனையும் அல்ஜீரியா இதுவரை வெளியிடவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# கம்போடியத் தலைநகரில் ஆயுதக் குழுவினர் தாக்குதல்

*25.11.2000*

கம்போடியத் தலைநகரான றொம்பென்னின் பல பகுதிகளிலும் ஆயுதமேந்திய இளைஞர்கள் அரச அலுவலகங்கள் மீது தாக்குதல்களை மேற்கொண்டனர். இவர்களுக்கெதிரான தாக்குதல்களை இராணுவத்தினர் மேற்கொண்டதில் 7 பேர் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளனர். பலர் கைது செய்யப்பட்டுள்ளனர். மேற்படி சம்பவத்தில் சில இராணுவத்தினர் மற்றும் பொதுமக்களில் சிலரும் காயமடைந்தனர் என அரச அறிக்கை தெரிவித்துள்ளது. மேற்படிச் சம்பவத்திற்கு அமெரிக்க ஆதரவுகொண்ட கம்யூனிச எதிர்ப்பு இயக்கம் ஒன்றே பொறுப்பு என பாதுகாப்பு அமைச்சு குற்றம் சுமத்தியுள்ளது. 1997ம் ஆண்டு புரட்சியொன்றின் மூலம் பிரதமர் ஹுன்சென் பதவியேற்றதன்பின் நடந்த ᒥ மோசமான கலவரம் இதுவென சொல்லப்படுகின்றது. தலைநகரில் அமைந்துள்ள பாதுகாப்பு அமைச்சின் கட்டடம் அமைச்சர்களது அலுவலகம் மற்றும் வேறு சில அரச கட்டிடங்கள் மீது காலை ஆயுதம் தாங்கிய இளைஞர்கள் சுமார் 1 மணி நேரம் வரை துப்பாக்கிச் சமரை மேற்கொண்டனர்.

இராணுவத்தினர் உடனடியாக பதில் நடவடிக்கையை மேற்கொண்டனர். மேற்படி சம்பவத்திற்கு அமெரிக்க ஆதரவான கம்போடிய, விடுதலைப் போராளிகள் எனும் அமைப்பே பொறுப்பானது என்றும் தற்போதைய அரசை தூக்கி எறிவதற்கு நடாத்தப்பட்ட சம்பவம் இதுவென்றும் பிரதமர் கூறினார். துப்பாக்கிச் சண்டையில் ஈடுபட்டவர்களில் 22 பேர் இராணுவப் பொலிசாரால் கைது செய்யப்பட்டனர். சிலர் தலைமறைவாகியுள்ளனர் என்றும் அவர்களை தேடும் பணி தொடர்கின்றதென்றும் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

# இஸ்ரேலிய இராணுவத்தால் 5 பாலஸ்தீன இளைஞர்கள் சுட்டுக்கொல்லப்பட்டனர்

*27.11.2000*

இஸ்ரேலிய இராணுவத்தினர் கடந்த ஞாயிறன்று வாகனத்தில் வந்த 5 பாலஸ்தீன இளைஞர்களைச் சுட்டுக்கொன்றுள்ளனர். ஆனால், இச்செய்தி திங்களன்று காலையே வெளியாகியுள்ளது. இஸ்லாமிய புனித நோன்புக் காலமான றம்ழான் ஆரம்பமான 1ம் நாளான இன்று இச்சம்பவம் நடந்துள்ளதானது, ஒருபுறம் இரண்டு மாத காலக் கலவரங்களை முடிவுக்குக் கொண்டுவர மேற்கொள்ளப்பட்டுவரும் சமாதான முயற்சிகளுக்குக் குந்தகம் விளைவிக்கலாமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாலஸ்தீன கட்டுப்பாட்டு நகரமான குவால் கில்யா எனும் பகுதியில் மேற்படி சம்பவம் இடம்பெற்றுள்ளது. இதுபற்றி இஸ்ரேலியப் பாதுகாப்புப் படை அதிகாரி கூறுகையில், அப்பகுதியிலுள்ள யூதக் குடியேற்றம் ஒன்றின் அருகாமையில் ரோந்து சென்ற இஸ்ரேலிய இராணுவ அணிமீது மேற்படி பாலஸ்தீனர்கள் தாக்குதல் நடாத்த முயற்சித்தனர் என்றும், இதற்கு எதிரான தாக்குதலிலேயே ஐவரும் கொல்லப்பட்டனர் என்றும் கூறினார். ஆனால், பாலஸ்தீனப் பேச்சாளர் மேற்படி ஐவரும் சாதாரண பொதுமக்களே. இவர்கள் மீது நடாத்தப்பட்ட தாக்குதல்கள் கொடூரமானவை என்றும் கூறினார். இது ஒருபுறமிருக்க இஸ்ரேலிய பாதுகாப்பு அதிகாரிகளுக்கும், பாலஸ்தீன அதிகாரிகளுக்குமிடையே இரண்டு இடங்களில் பேச்சுவார்த்தைகள், சந்திப்புக்கள் இடம் பெற்றுள்ளன. ஆனாலும், எந்த வித உடன்பாடுகளுக்கும் இரு தரப்பினரும் வரவில்லையென சொல்லப்படுகின்றது.

மேற்குக் கரையில் பாலஸ்தீன அமைப்பான பாத்தாவினர் விடுத்த அறிக்கையொன்றில், இந்த ரம்ளான் மாதத்தில் மக்கள் எதிர்ப்பை அதிகப்படுத்த வேண்டுமென்றும் இஸ்ரேலுக்கெதிரான நடவடிக்கைகளை மேலும் முனைப்புடன் மேற்கொள்ள வேண்டுமென்றும் கூறியுள்ளது.

லெபனானின் எல்லையோர வீதியொன்றில் இஸ்புல்லா அமைப்பினர் வைத்திருந்த குண்டொன்று இஸ்ரேலிய ரோந்து அணியினருக்கருகில் வெடித்துள்ளது. இதில் சிலர் காயமடைந்தனர் என்றும் இதற்குப் பதிலடியாக லெபனான் பகுதியை நோக்கி, இஸ்ரேல் விமானங்களாலும், எறிகணைகளாலும் கடுமையான தாக்குதல்களை மேற்கொண்டது.

# சேர்பியர் மீதான தாக்குதல்களை நிறுத்த அல்பேனிய தீவிரவாதிகளுக்கு எச்சரிக்கும்படி புதிய யூகோ அதிபர் சர்வதேச நாடுகளிடம் கோரிக்கை

*27.11.2000*

கொசோவோ பகுதியில் சிறுபான்மை சேர்பியர்கள் மீது அல்பேனியத் தீவிரவாதிகள் அண்மைக்காலமாக தங்களது தாக்குதல்களை தீவிரப்படுத்தியுள்ளனர். கடந்த திங்களன்று இப்பகுதியில் இடம்பெற்ற மோதல் ஒன்றில் சேர்பியப் பொலிசார் ஒருவர் கொல்லப்பட்டார். ஆஸ்திரியத் தலைநகர் வியன்னாவில் நடைபெறும் ஐரோப்பிய பாதுகாப்பு மற்றும் கூட்டுறவிற்கான அமைப்பின் மாநாட்டில் கலந்துகொண்டபோதே, யூகோஸ்லாவிய அதிபர் கொஸ்ரோனிச்சா சர்வதேச நாடுகளிடம் மேற்கண்ட கோரிக்கையை விடுத்தார். நேட்டோ மற்றும் சர்வதேச நாடுகள் அல்பேனியர்கள் மேல் அழுத்தம் பிரயோகிக்க வேண்டுமென்றும், சேர்பியர்கள் மீதான தாக்குதல்களை நிறுத்த அவர்களை கோரவேண்டுமென்றும் யூகோ அதிபர் கோரியதுடன், கடந்த காலங்களில் அல்பேனிய தீவிரவாதிகளுக்குச் சார்பாக கொசோவோ பாதுகாப்பு படை (ஐ.நா. ஏற்பாட்டில்) இயங்கியுள்ளது என்று சொல்லப்படும் குற்றச்சாட்டுக்களுக்கு அல்பேனியர்களது தற்போதைய நடவடிக்கைகள் ஆதாரங்களை ஏற்படுத்தக் கூடியனவாக இருக்கின்றன என்றும் கூறிய யூகோ அதிபர், ஐ.நா.வின் கொசோவோ நிர்வாகம் மற்றும் அதனது பாதுகாப்புப் படை போன்றவை சேர்பியர்கள் மீதான தாக்குதல்களை தடுத்து நிறுத்தத் தவறிவிட்டன என்றும் குற்றம் சுமத்தினார். இதற்கிடையே சேர்பிய இராணுவ அணிகள் கொசோவோ பகுதியைநோக்கி நகர்த்தப்பட்டுள்ளதாகவும், இவ் எல்லைப் பகுதியிலுள்ள அல்பேனிய மக்கள் பாதுகாப்பான பகுதி நோக்கி நகர்ந்து வருவதாகவும் புதிய செய்திகள் தெரிவிக்கின்றன.

# ஐரோப்பிய ஒன்றிய இராணுவத்தில் ரஷ்யாவும் இணையும்

*26.11.2000*

ஐரோப்பிய ஒன்றியம் புதிதாக இராணுவப் பிரிவொன்றை 2003ம் ஆண்டளவில் அமைக்க உத்தேசித்துள்ளது. மேற்படி இராணுவப் பிரிவு பிராந்திய யுத்தங்களின் போதும், மனிதாபிமான உதவி நடவடிக்கைகளின் போதும் செயற்படுத்தப்படுமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த இராணுவத்தில் ரஷ்யாவும் தனது படைகளை இணைக்குமென வெளியுறவு அமைச்சர் இகோர் இவாநோவ் கடந்த சனியன்று தெரிவித்துள்ளார்.

நேட்டோ இராணுவத்திற்குப் பிறம்பாக அமைக்கப்படவுள்ள மேற்படி படையில் சுமார் 60,000 பேர் ஈடுபடுத்தப்படுவார்களென நம்பப்படுகின்றது. மேற்படி படையில் ரஷ்யப் படையினரும் இணைத்துக்கொள்ளப்படுவது பற்றி அந்நாட்டின் வெளியுறவு அமைச்சர் தெரிவிக்கையில், ஐரோப்பாவின் பாதுகாப்பையும், இஸ்திரத்தன்மையையும் உறுதிப்படுத்துவதில் எமது பங்களிப்பும், கூட்டான ஒத்துழைப்பும் ஏற்படலாமென கூறினார். மத்திய கிழக்கின் சமாதான முன்னெடுப்புக்களில் ரஷ்யாவும் ஓர் கூட்டு ஏற்பாட்டாளராக செயற்படுகின்றது. ஐரோப்பிய ஒன்றியத்துடன் இணைந்து சர்வதேச மத்தியஸ்த முயற்சிகளில் ரஷ்யா ஈடுபடுவதானது, ஓர் திறமையான பங்களிப்பாக அமையுமென அவர் மேலும் கூறினார்.

# ஈராக் மீதான தடைகளை அகற்ற சீனா கோரும்

*(27.11.00)*

ஈராக்கிய உதவிப் பிரதமர் தறிக் ஹசீஸ் சீனாவில் உத்தியோக பூர்வ விஜயம் ஒன்றை மேற்கொண்டுள்ளார். இவ் விஜயத்தின்போது அரச முக்கிய தலைவர்களை அவர் சந்தித்துப் பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டுள்ளார். சீன வெளியுறவு அமைச்சர் டாங் ஜியாக்சுவானை இவர் சந்தித்தபோது, ஈராக்கிற்கான சகல உதவி நடவடிக்கைகளையும் சீனா தொடர்ந்தும் மேற்கொள்ளும் எனக் கூறினார்.

ஈராக் மீதான தடைகளை அகற்றுவதில் சீனா நடவடிக்கைகளை மேற்கொள்ளும் எனக் கூறிய வெளியுறவு அமைச்சர், ஐ.நாவின் பாதுகாப்புச் சபை சரத்துக்களை ஈராக் கடைப்பிடிக்க வேண்டும் என்றும் கூறினார். ஈராக்கிய உதவிப் பிரதமருடனான சந்திப்பின் போது நீண்டகாலமாக ஈராக் சந்தித்து வரும் பொருளாதாரத் தடைகளால் மக்களின் கஷ்டங்கள் அதிகரித்துப் போகின்றன, இந்த மக்களுக்காக சீன மக்களும் தங்களது அனுதாபங்களை தெரிவித்துக் கொள்கின்றனர் எனக் கூறினார். மேலும், ஐ.நாவின் தடைகளை தளர்த்தி மக்கள் விமானச் சேவைகளை மீண்டும் பாக்தாத்தில் இடம்பெற வைக்க சீனா பாடுபடும் என்றும் கூறினார்.

# மாவீரர் நாள் 2000

### பிரான்சில்

காலம்: 03.12.2000 ஞாயிற்றுக்கிழமை
நேரம்: பிற்பகல் 3.00 மணி
இடம்: **Espace Jean Monnet, 47 Rue Des Solets, 94533 Rungis.**
தொடர்புகளுக்கு: 01 43 58 11 42

### இலண்டனில்

காலம்: 02.12.2000 சனிக்கிழமை
நேரம்: பிற்பகல் 3.00 மணி
இடம்: **London Arena, Limeharbour, London. E14 9TH.**
தொடர்புகளுக்கு: 020 7403 4554

### நெதர்லாந்தில்

காலம்: 02.12.2000 சனிக்கிழமை பிற்பகல் 3 மணி
இடம்: `Maresca' மண்டபம், Satreweg 1-3. UTRECHT
(Veemarkt இற்கு அருகில் - சென்ற ஆண்டு நடைபெற்ற மண்டபம்)
தொடர்புகளுக்கு: 070 3461963, 0224 217181, 06 21853914



### இத்தாலியில்

**பலெர்மோவில்**
03.12.2000 ஞாயிறு மாலை 5 மணிக்கு
Al Ranchibile (don Bosco)
Via , Liberta , 130, PALERMO
Via Gorki No 10 - Territoria Corticella, BOLOGNA

**நப்போலியில்**
03.12.2000 ஞாயிறு மாலை 5 மணிக்கு
Parocchia Di S.Matteo - Via Roma, NAPOLI

### சுவீடனில்

காலம்: 02-12-2000
பிற்பகல் 15.00 மணி
இடம்: **Fittjaskolan, Fittja, STOCKHOLM**

### நோர்வேயில்

**Drammen நகரத்தில்:**
*02.12.00 சனிமாலை 18.00 மணி*

**Bergen நகரத்தில்:**
*10.12.00 சனிமாலை 18.00 மணி*

### டென்மார்க்கில்

**Holbæk (கொல்பெக்) நகரத்தில்**
இடம்: **Fritidscenter** (ஃறி ரீட்ஸ் சென்ரர்)
காலம்: 02.12.2000 சனிக்கிழமை
நேரம்: மாலை 4.30 மணி


# Sikaram

(இலங்கை) கொழும்பு வவுனியா – திருகோணமலை – மட்டக்களப்பு – மன்னார் – கனடா – சகல ஐரோப்பிய நாடுகள் – சிங்கப்பூர் தாய்லாந்து – ஹொங்கொங் – அவுஸ்திரேலியா – இந்தியாவின் அனைத்துப் பாகங்களுக்கும் 1 மணித்தியாலத்தில் கொடுப்பதற்கான புதிய சேவை ஒன்று எமது பணமாற்றுச் சேவையில் ஆரம்பிக்கப் பட்டுள்ளது என்பதை மகிழ்வுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

பட்டுப்புடவைகள், ஆண், பெண்களிற்கான சகல புடவை வகைகள் சிறுவர் சிறுமியர்களுக்கான ஆடைகள், எவர்சில்வர் பாத்திரங்கள், மளிகைப் பொருட்கள், மரக்கறி வகைகள், பதப்படுத்திய மீன் வகைகள் அனைத்தையும் ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ள

## சிகரம்

மேலும் விபரங்களிற்கு

**Schoenegg Str-15**
**8004.Z.H**

எங்களிற்கு வேறு கிளை ஸ்தாபனங்கள் கிடையாது.

Singapore Conduct No:
0065 - 96171175
Tel&Fax:
0065 7430644



## சிகரம்

மேலும் விபரங்களிற்கு:
T.P: 01 2912862
01 2913951
Rest: 01 2422718
H.P: 079-3008759
079-6225077
Fax: 01 2913534

உரிமையாளர்- சேகர்

Pub. Sw

## சிறீலங்காவின் தேசிய பாதுகாப்பு என்பது சிங்களவர் பாதுகாப்பு

# புலிகளை அடக்கி தமிழர் பிரச்சினையைத் தீர்த்துவிடலாம் என்பதில் சிங்கள கட்சிகளுக்குள் இருவேறு கருத்தில்லை

மட்டக்களப்பிலிருந்து நடேசன்

இலங்கையில் தமிழ் மக்கள் தமது உரிமைகளை வென்றெடுப்பதற்காக 1958களில் இருந்து சாத்வீக ரீதியாகவும், 1983களில் இருந்து ஆயுதங்களில் நம்பிக்கை வைத்தும் போராடி வருகிறார்கள். ஆனால் மாறி மாறி ஆட்சி செய்த ஐக்கிய தேசியக் கட்சியும் சரி, சிறீலங்கா சுதந்திரக்கட்சியான பொதுஜன ஐக்கிய முன்னணியும் சரி இனப்பிரச்சினையின் பரிமாணங்களை புரிந்து கொள்ளாது பல்வேறு வடிவங்களில் அழுத்தங்களை பிரயோகித்து அன்று முதல் இன்று வரை தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்தை அடக்கி ஒடுக்கவே முயன்று வருகிறார்கள். வடக்கு கிழக்கு தமிழர்களின் தாயகப் பிரதேசம் என்ற கருத்தியலை உடைப்பதற்காக 1950-களில் இருந்து மாறிமாறி ஆட்சி செய்த இரு பிரதான கட்சிகளும் ஏட்டிக்குப் போட்டியாக திட்டமிட்ட குடியேற்றங்களை மேற்கொண்டு வருகிறார்கள். திருமலை, அம்பாறை மாவட்டங்களில் தமிழர் பிரதிநிதிகளைப் பாராளுமன்றத்திற்கு தெரிவு செய்யமுடியாத அல்லது பகீரதப் பிரயத்தனம் எடுக்க வேண்டியளவுக்குப் பறிபோய்க் கொண்டிருக்கிறது. வடக்கு கிழக்கு இணைந்த தாயகம் என்ற நிலையைப் போக்க மணல் ஆறு வெலிஓயாவாகி படைப்பலத்துடன் சிங்கள மக்கள் குடியேற்றப்பட்டுள்ளனர்.

அரச நியமனங்கள், பல்கலைக் கழக அனுமதி மற்றும் தேசிய மட்டத்திலான பல்வேறு வாய்ப்புக்களை தமிழ் மக்கள் பெறுவதற்கு தடைக்கற்கள் போடப்பட்டு சமூக பொருளாதார ரீதியாகவும் தமிழ் மக்கள் ஒடுக்கப்பட்டு வருகிறார்கள். சிங்களவர் பிரதேசங்களில் தமிழர்கள் எவரென்றாலும் 'புலி'கள் என்று கூறுமளவிற்கு இன்று இலங்கையில் இனமுரண்பாடுகள் பகை முரண்பாடுகளாகிவிட்டன. தேசிய பாதுகாப்பு என்பது தேசத்தின் பாதுகாப்பு என்ற அர்த்தம் சிறீலங்காவில் கொள்ளப்படுவதில்லை. தேசிய பாதுகாப்பு என்பது சிங்களவர் பாதுகாப்பு என்ற ரீதியில் அர்த்தம் கொள்ளப்படுகிறது. இதனால் தமிழ் மக்கள் தமது இழந்த உரிமைகளுக்காக எந்த வடிவத்தில் போராடினாலும் சரி, கருத்து தெரிவித்தாலும் சரி அது சிங்களவர் நலன்களைப் பாதிக்கும் என்ற அர்த்தத்தில் அத்தகையவர்களைப் பயங்கரவாதி என்று சொல்லும் அளவிற்கு குரூர நிலைமை உள்ளது. அரசியல் அமைப்பில் வழங்கப்பட்ட அடிப்படை உரிமைகள் தமிழ் மக்களைப் பொறுத்த வரை சிங்களவர் நலனுக்காக மட்டுப்படுத்தக் கூடியதாகவே உள்ளது. பிந்துனுவெவ புனர்வாழ்வு முகாம் படுகொலை தொடர்பாக விசாரணை தீவிரம் பெறவில்லை. ஆனால் அதற்காக மலையக பிரதேசங்களில் கண்டித்த போராட்டம் இடம் பெற்று வருகிறது. சிலர் கைதாகியுள்ளது சிறீலங்காவில் உள்ள இன்னொரு விசித்திரம். சிறீலங்கா அரசாங்கம் என்பது கூட பல்லின மக்கள் வாழும் நாட்டு அரசாங்கம் என்ற நிலையில் இல்லை. சிங்களவர் அரசாங்கமாகவே உள்ளது. இதனால் தமிழ் மக்களுக்கு என்று அரசாங்கம் இல்லை. மரம் அரியும் இயந்திரத்தில் தமிழன் தலையை அரிந்தாலும் சரி,

> **நோர்வே புலிகளின் ஏஜன்ட் என்று கூறி, நோர்வே தேசியக் கொடியை எரித்து ஆர்ப்பாட்டம் செய்யும் போது கைகட்டி பார்த்து கொள்ளும் அரசு பிந்துனுவெவ இளைஞர் புனர்வாழ்வு முகாம் படுகொலைகளை கண்டித்து பேரணி நடாத்த வடக்கு கிழக்கில் அனுமதி மறுத்தது.**

நெருப்பில் உயிரோடு போட்டு தீயிட்டாலும் சரி கைகட்டி பார்த்து நிற்குமளவிற்கே சிறீலங்கா அரசின் யதார்த்த நிலைமை உள்ளது.

பல்லின மக்கள் வாழும் நாட்டில் தேசியக் கட்சிகள் என்பது அனைத்து இன மக்களதும் அபிலாசைகளைப் பிரதிபலிக்கும் கொள்கைத் திட்டங்களை கொண்டிருப்பதுடன், கட்சியில் நிர்வாக நடவடிக்கைகள் முதல் செயற்பாடுகள் வரை அனைத்து நடவடிக்கைகளிலும் சகல இனமக்களது பங்களிப்பும் இருக்க வேண்டும். கட்சியின் ஏதாவது முடிவுகளை எடுப்பதிலும் குறைந்த பட்ச ஆளுமையாவது செலுத்த கூடியவர்களாக இருக்க வேண்டும். ஆனால் சிறீலங்காவில் தேசியக் கட்சிகளும் - சிங்களவர் கட்சிகளாக, சிங்களவர் மைய கொள்கைச் செயற்பாடுகளைக் கொண்டவையாகவே உள்ளன. தேசிய நலனில் அவற்றிற்கு கிஞ்சித்தும் அக்கறையில்லாத நிலைமை காரணமாகவே நாடு படுபாதாளத்தை நோக்கிச் சென்று கொண்டிருக்கிறது.

கட்சிகள் தமது தேசியத் தன்மையை பெயரளவில் காட்டுவதற்காகவே சிறுபான்மை மக்களை, பிரமுகர்களை அங்கத்தவர்களாகக் கொண்டிருக்கிறது. அத்தகைய பிரதிநிதிகள் பெயரளவில் அங்கத்துவம் வகிக்கிறார்களே தவிர கட்சி தீர்மானங்களில் எந்தவித செல்வாக்கையும் செலுத்த முடியாதவர்களாகவே உள்ளனர். நடந்து முடிந்த பொதுத் தேர்தல், பொதுஜன ஐக்கிய முன்னணி சார்பில் தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற்ற ஒரேயொரு தமிழர் மட்டக்களப்பு மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்டார். ஆனால் அவருக்கு பிரதியமைச்சர் பதவி அதுவும் செல்வாக்கில்லாத அமைச்சையே வழங்கியுள்ளது. அது தமிழர்களுக்கு தேசிய கட்சிகள் கொடுக்கும் முக்கியத்துவத்தையே பிரதிபலிக்கிறது.

இந்த மாதிரியான புறச்சூழல்கள், காலத்துக்கு காலம் இன முரண்பாடுகளை பகை முரண்பாடுகளாக்கி வருவதுடன் புதிய பரிமாணங்களையும் ஏற்படுத்தி வருகின்றன. இந்த நாடு பல்லின மக்கள் வாழும் நாடு என்பதை இந்த நாட்டின் கல்வித்திட்டமோ, அரசியலமைப்பு திட்டமோ, அரசியல் கட்சிகளோ சிங்கள மக்களுக்கு உணர்த்தத் தவறிவிட்டன. இதனாலேயே சிஹல உறுமய, வீரவிதான. பூமி புத்திர போன்ற முற்று முழுதாக இனவாதத்தை மையமாக கொண்ட கட்சிகள் உருவாகியுள்ளன. பௌத்தம் அரசியலமைப்பு சட்ட மூலம் தேசியமதமாக்கப்பட்டதோடு, பௌத்த பிக்குமார், மதக்கருமங்களை விட தேசிய பிரச்சினைகளை தலையில் தூக்கி போடுமளவிற்கு அரசியல் சக்திமிக்கவர்களாக உள்ளனர். வட மத்திய மாகாணத்தில் சகல பொது அபிவிருத்தி திட்டங்களும் மகா நாயக்கர்களுடன் கலந்துரையாடப்பட்டு அவர்களின் ஆலோசனையுடனும், ஆசீர்வாதத்துடனும் அமுல்படுத்தப் படுமென முதலமைச்சர் பேட்டி பிரேம்லால் திசாநாயக்கா அறிவித்திருக்கிறார்.

இன்று இலங்கையில் எங்கும், எதிலும், எவற்றிலும் சிங்களமே கோலொச்சி வருகிறது. அரசியல்வாதிகளை விட மேல்மட்ட நிர்வாகிகளிடம் இனவாதம் தலைக்கேறி இருப்பதுடன் சிஹல உறுமய போன்ற அமைப்புக்களின் ஆணிவேராகவும் அத்தகையவர்களே அதிகம் உள்ளனர். இதனால் ஆட்சி அதிகாரத்தை நிலை நிறுத்துவதற்காக அரசு தமிழ் மக்களுக்காக அறிவிக்கும் அற்ப சொற்ப சலுகைகளையும் கூட மக்களை சென்றடைவதற்கு போடக்கூடிய தடைகளைப் போட்டு வருகின்றனர். இதை விட தேசிய பாதுகாப்பை நிலை நிறுத்தி சட்டமும் ஒழுங்கையும் நிலைநாட்ட வேண்டிய பொலிஸ் மற்றும் முற்படைகளிலும் இன விகிதாசாரம் பேணப்படாது 99 சதவீதம் சிங்களவர்களே உள்ளனர். இதனால் தமிழர்கள் ஜன நாயக உரிமைகளுக்காக ஆர்ப்பாட்டம் நடத்துவது கூட தேசிய பாதுகாப்புக்கு விரோதமானதென்று கருதி நடவடிக்கை எடுக்கும் நிலை உள்ளது. அத்தோடு சிங்களவர் படையாகவே உள்ளதால் தமிழர்கள் எல்லோரையும் புலிகளாகவும், எவரையும் சந்தேகத்தின் பேரில் பிடித்து எவ்வளவு காலத்திற்கும் தடுப்பு காவலில் வைக்கலாமென்ற நிலை உள்ளது. அதாவது தேசிய பாதுகாப்பு என்பது சிங்களவர் பாதுகாப்பு என்ற நிலையில் படையினரது செயற்பாடும் உள்ளது. ஒட்டுமொத்தமாக விடுதலைப் புலிகள் மற்றும் சமாதான தீர்வு முயற்சிகள் தொடர்பாக சிங்களத் தரப்பினர் குறிப்பாக தற்போது மூன்றாவது சக்தியாக வளர்ந்து வரும் ஜே.வி.பி. கூட பௌத்த மொழிக்கு கண்ணோட்டத்தையே கொண்டுள்ளனர். தமிழர்கள் பிரச்சினையை புலிகளை அடக்குவதன் மூலம் தீர்த்து விடலாம் என்பதில் சிங்களத்தரப்பினர் இருவேறு கருத்தில்லாது உள்ளனர்.

ஆனால் தமிழர் தரப்பைப் பொறுத்தவரை, விடுதலைப் புலிகள் கடந்த 24 வருடங்களாக ஒரே குறிக்கோளுடன் போராடி வருகிறார்கள். ஆனால் தனி ஈழம் கோரி ஆயுதப் போராட்டத்தில் குதித்துத் திசை மாறிய முன்னாள் ஆயுதக் குழுக்கள் சிங்களத் தரப்பினரின் போக்கோடு ஒத்துப் போகும் நிலைப்பாட்டை எடுத்துள்ளனர். விடுதலைப் புலிகள் மீது அரசு தீவிரநடவடிக்கை எடுக்க வேண்டுமென்று வலியுறுத்துவதுடன் அவசரகால சட்ட நீடிப்புக்கு ஆதரவாகவும் வாக்களித்து வருகின்றனர். இந்த நிலையில் ஜனநாயக நடைமுறைகளின் கீழ் இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கு விடுதலைப் புலிகள் தடையாக உள்ளனர். என்று ஆட்சியாளர் கூறுவதில் எந்தளவு உண்மையிருக்கிறது என்பது சிந்திக்க வேண்டியதாகும். பொதுத் தேர்தலை மட்டும் மையமாகக் கொண்டு சிங்கள பௌத்த மேலாதிக்க உணர்வுகளை சிங்கள மக்கள் மத்தியில் வளர்த்து வாக்குகளை வசீகரிக்கும் அரசியலையே பாரம்பரிய சிங்களக் கட்சிகள் முதல் புதிய சக்தியாக தோற்றம் பெற்றுள்ள ஜே.வி.பி. வரை நடாத்தி வருகின்றன. நோர்வே சமாதான துாதுவர் வன்னி சென்று வந்ததற்காக் கைது செய்ய வேண்டும். நோர்வே புலிகளின் ஏஜன்ட் என்று கூறி, நோர்வே தேசியக் கொடியை எரித்து ஆர்ப்பாட்டம் செய்யும் போது கைகட்டி பார்த்து கொள்ளும் அரசு பிந்துனுவெவ இளைஞர் புனர்வாழ்வு முகாம் படுகொலைகளை கண்டித்து பேரணி நடாத்த வடக்கு கிழக்கில் அனுமதி மறுத்தது. மலையகத்தில் ஏற்பட்ட ஆர்ப்பாட்டங்களை வன்முறை மூலம் அடக்கியது. இது ஆட்சியாளரின் உணர்வுகளைத் துல்லியமாகப் புலப்படுத்துகிறது.

எனவே இலங்கை இனப்பிரச்சினைக்கு ஜனநாயக ரீதியில் தீர்வு காண்பதற்கான தடைக்கற்கள் சிங்களத் தரப்பினரிடமே உள்ளது. தமிழர்களுக்கு எதையுமே வழங்காது அதேவேளை விடுதலைப் புலிகளை ஒடுக்கினால் தமிழர்களின் விடுதலைப் போராட்ட வீரியம் குறைந்து விடுமென சிங்களத் தரப்பினர் எண்ணுகிறார்கள். புலிகளை கட்டுப்படுத்துவதன் மூலம் தமிழர்களது பலத்தை அடக்கலாம். விடுதலைப் புலிகளது பலத்தையும் பலவீனத்தையும் பொறுத்தே பேச்சுவார்த்தை ஒன்று இடம் பெற்றால் பேரம் பேசல் அமையுமென்பதை சிங்களத் தரப்பினர் புரிந்துள்ளனர். எனவே இலங்கை இனப்பிரச்சனைத் தீர்வு விடுதலைப் புலிகளின் பலத்தில் அல்லது பலவீனத்திலேயே தங்கியுள்ளது. பலம் தமிழர்களுக்கு சாதகம் பலவீனம் சிங்களத் தரப்பினருக்கு சாதகமானது என்பதை தமிழர்கள் உணரவேண்டும். அத்தோடு சிறீலங்காவில் தேசிய பாதுகாப்பு, அரசு, தேசியக்கட்சிகள், படைகள், பொலிஸ் யாவும் சிங்களவர்கள் நலன் சார்ந்தவை என்பதையும் எண்ணித் தெளிய வேண்டும். தமிழர்களுக்கு சமாதானம் என்பது இன்னும் பல தண்டைகளைத் தாண்டியே செல்ல வேண்டியுள்ளது.




ரதி ஜுவலர்ஸ்



28, Ealing Road, Wembley, Middx HA0 4TL

'எப்பொழுதுமே மலிவு விலை'

Tel: 0181-9033063-Fax: 0181-9039711

OPEN: 7 Days a Week

Mon -Sat: காலை 10 முதல் மாலை 6.30 வரை

Sun: மதியம் 12 முதல் மாலை 6.30 வரை.

Pub

# இனவாதப் போக்கை கொண்ட சிறிலங்கா அரசியலில் சமாதான முயற்சிகளுக்கு உளப்பூர்வமான ஆதரவு வழங்கப்படும் என எதிர்பார்க்க முடியாது

**வவுனியாவில் இருந்து தீபன்**

யுத்தத்தை நடத்திக்கொண்டே சமாதானம் பேச முடியுமா? முடியும் என்கின்றது இலங்கை அரசாங்கமும், அதன் இராணுவமும். யுத்தமும் சமாதானமும் வெவ்வேறானவை. இரு துருவங்களைச் சேர்ந்தவை. சிறுவர்களுக்கும் இது தெரியும். யுத்தம் செய்து கொண்டே சமாதானம் பேசலாம் என்பது அபத்தமானது. இரண்டு தோணிகளில் கால் வைப்பதற்கு அது சமனானது. இந்த நிலைப்பாட்டை அரசாங்கம் என்ன காரணத்திற்காக எடுத்துள்ளது?

சமாதானம் பேசினால், தமிழர்களின் அரசியல் அபிலாஷைகளைப் பூர்த்தி செய்வதற்குப் பல உரிமைகளைக் கொடுத்தாக வேண்டும். அவர்களின் அரசியல் நிலைப்பாட்டுக்கு, அவர்களின் பிரதேசங்களை நிர்வகிப்பதற்குத் தேவையான அதிகாரங்களை வழங்கியே ஆகவேண்டும். வளங்களையும், பிரதேசங்களையும் அவர்களுடன் குறைந்த பட்சத்திலாவது பகிர்ந்து கொண்டாக வேண்டும். இவைகளைக் கொடுக்காமல், அவர்களுடன் பகிர்ந்து கொள்ளாமல் ஒருநாளும் சமாதானம் பற்றி பேச முடியாது. அரசாங்கத்தினால் குறைந்த பட்ச இழப்புக்கள் அல்லது விட்டுக் கொடுப்புக்களுடன் சமாதானத்தை இலங்கையில் ஏற்படுத்த முடியாது. இவ்வாறான குறைந்த பட்ச அதிகாரப் பகிர்வுக்கும், அரசியல் உரிமைப் பகிர்வுக்கும் மற்றும் அவசியமானவற்றையும் கொடுப்பதற்கு பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கம் எந்த அளவிற்குத் தயாராக இருக்கின்றது என்பதை அறிந்துகொள்வது முக்கியமானதாகும். சமாதானத்தை ஏற்படுத்தப் போகின்றேன் என கூறிக்கொண்டு அரசியல் தீர்வுப் பொதி ஒன்றை, தீர்வுக்கான ஆலோசனைகளைக் கொண்டது எனத் தெரிவித்து தயார்செய்தது. இது தமிழ் மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காகத் தயாரிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்ட போதிலும், அதில் தமிழ் மக்களின் எதிர்பார்ப்புகள், தேவைகள் பிரதிபலிக்கப்படுவதற்காக அல்லது உள்ளடக்கப்படுவதற்காக அவர்களுடன் முறையாகக் கலந்தாலோசிக்கப்படவில்லை. அவ்வாறு கலந்தாலோசிக்கப்படாமல் மேற்கொள்ளப்பட்ட தீர்மானங்களை உள்ளடக்கியதாக அமைந்த பொதுஜன ஐக்கிய முன்னணியின் தீர்வுப் பொதிதான் கடந்த ஓகஸ்ட் மாதத்தில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுவதற்காகக் கொண்டு வரப்பட்டு, பலத்த எதிர்ப்புகளுக்கு மத்தியில் கைவிடப்பட்டது.

தமிழ் மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக, அவர்களின் பிரச்சினை காரணமாக இலங்கையில் ஏற்பட்டுள்ள யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வருவதற்காக முன்வைக்கப்பட்ட தீர்வுப் பொதி பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்படுவதற்கு, பல முனைகளிலும் பலத்த எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டது. தீர்வுக்கான ஆலோசனைகள் அடங்கிய அது அரைவேக்காடானதாக, தமிழ் மக்களின் அடிப்படைப் பிரச்சினைகளுக்கு உரிய தீர்வு யோசனைகளை உள்ளடக்கப்படாததாக இருந்த போதிலும் நாட்டின் முக்கிய எதிர்க்கட்சியான ஐக்கிய தேசிய கட்சியும். பௌத்த மாகசங்கத்தினரும், அவர்களைச் சார்ந்தவர்களும் அதனை எதிர்த்தனர். தமிழ் மக்களின் பிரதிநிதிகளாகப் பாராளுமன்றத்தில் குந்தியிருந்தவர்கள் அந்த தீர்வு யோசனை பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டிருந்தால் எல்லோருக்கும் முன்னதாகக் கையுயர்த்தி அதனை ஆதரித்திருப்பார்கள். அவர்களின் பண்பு அது. ஏனென்றால், தமிழ் மக்களை வகைதொகையின்றி கைது செய்து பயங்கரவாதியென்று முத்திரைகுத்தி, அவர்களைச் சிறைச்சாலைகளில் அடைத்து வைத்து காலத்திற்குக் காலம் சிறைக் கூடங்களை வெறுமைப் படுத்துவதற்காக, அங்குள்ளவர்களைக் குண்டர்களையும் பாதகர்களையும் கொண்டு படுகொலை செய்வதற்கு உதவியாக உள்ள பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்திற்கு முழு மனதோடு ஆதரவு தெரிவிப்பவர்களாயிற்றே.

தன்னினத்தைச் சேர்ந்தவர்கள், தனது உறவினர்கள், அப்பாவிகள், ஆண்கள், பெண்கள், வயோதிபர்கள் என்ற பேதமின்றி அனைவரையும் பயங்கரவாதிகள் என்றும், பயங்கரவாதிகளுக்கு உதவி செய்பவர்கள், ஆதரவாளர்கள் என்றும் சந்தேகத்தின் பேரில் கைது செய்யும் போது, சலுகைகளைப் பெற்று சுகபோகவாழ்க்கை வாழ்பவர்களினால் வேறு என்னதான் செய்ய முடியும்? அவர்கள் அரசாங்கம் கூறுகின்ற அனைத்தையும் வேதவாக்காகத்தான் எடுப்பார்கள். அதுமட்டுமல்ல. அவர்கள் காலால் இடுகின்ற பணிகள் அத்தனையையும் சிரமேற்கொண்டு நிறைவேற்றுவார்கள். இவர்கள் அரசாங்கத்தினால் கொண்டுவரப்படுகின்ற யோசனைகள், மசோதாக்களை எதிர்ப்பார்கள் என்று எந்த வகையிலும் எதிர்பார்க்க முடியாதுதான். அப்படியானால், உருப்படியில்லாத தீர்வு யோசனைகளைக் கூட, ஐக்கிய தேசியக்கட்சியும், பௌத்தமகா சங்கத்தினரும், அவர்களுடன் சார்ந்தவர்களும் ஏன் எதிர்க்கின்றார்கள்? அவர்களின் நோக்கம் என்ன?

இலங்கையைப் பொறுத்தமட்டில், இலங்கை அன்னியர்களின் ஆட்சியில் இருந்தகாலம் தொட்டே தமிழர்கள் கடின உழைப்பாளிகளாகவும், அறிவுக் கூர்மை மிக்கவர்களாகவும், செயற்திறமை வாய்ந்தவர்களாகவும் விளங்கிவருகின்றார்கள். நாட்டிலும் சமூகத்திலும் முன்னணியில் திகழ்ந்த அவர்கள், பல துறைகளிலும் வாய்ப்புக்களையும் வசதிகளையும் கொண்டவர்களாகத் திகழ்ந்ததில் வியப்பேதும் இல்லை. ஆனால், இந்த நிலைமையை மாற்றி, அவர்களைப் பின்னால் தள்ளி, தமது இனத்தவரை அவ்விடங்களில் ஏற்ற வேண்டும். தாங்கள் வசதிகள் மிக்கவர்களாக இருக்க வேண்டும். பெரும்பான்மையினமாகிய சிங்களவர்கள் நாட்டின் சகல நிலைகளிலும், அனைத்து விடயங்களிலும் முன்னணியில் இருக்க வேண்டும். அதற்காகத் தமிழ் மக்களை நசுக்குவதைத் தவிர வேறு மார்க்கமில்லை என்று சிங்கள முன்னோடிகளான அரசியல்வாதிகளும், புத்திஜீவிகளும் எண்ணமிட்டார்கள். தமது எண்ணத்தை மிகவும் சாதுரியமாக நடைமுறைப்படுத்துவதற்குத் திட்டமிட்டுச் செயற்பட்டார்கள்.

இதன் காரணமாகத்தான், சிங்கள மொழி அரச கரும மொழியாகியது. சிங்களவர்களின் மதமாகிய பௌத்த மதம் அரச மதமாகியது. இரண்டுக்கும் நாட்டின் அரசியலமைப்பு தொடக்கம் நாளாந்த செயற்பாடுகள் வரையில் முன்னுரிமையும் அதியுயர்ந்த முதலிடமும் கொடுக்கப்பட்டது. கல்வியில் தரப்படுத்தல் கொண்டுவரப்பட்டது. தொழில்வாய்ப்பில் தரப்படுத்தல் ஏற்படுத்தப்பட்டது. இதற்கு வாய்ப்பாகவும், நியாயமான நடவடிக்கை என்று பார்க்கின்ற அயல்நாட்டவர்களும் ஒப்புக்கொள்ளும் வகையில் இன விகிதாசார நடைமுறை கொண்டுவரப்பட்டது. எவருக்கும் எதிலும் திறமை இருக்கலாம். ஆனால், அவர்களுக்கான வாய்ப்புக்கள், வசதிகள் என்பன விகிதாசார முறைமைக்கு அமைய முடிவு செய்யப்படும் என்பது சட்டமாகியது. நாட்டில் வருடாந்தம் ஆயிரம் மருத்துவர்கள் உருவாக்கப்படும் என்றால், அது இனவிகிதாசாரத்திற்கு அமையவே மேற்கொள்ளப்படும் என்ற நியதி கொண்டுவரப்பட்டதன் மூலம், அதற்குரிய தகைமைகளும் குறைக்கப்பட்டன. தரமும் குறைக்கப்பட்டன. இதன் மூலம் தான் அரசாங்கத்தின் அனைத்துத் துறைகளிலும் ஆதிக்கம் செலுத்திவந்த தமிழர்களின் எண்ணிக்கை ஒன்றுமில்லை என்ற நிலைமைக்குக் கடந்த அரை நூற்றாண்டு காலத்தில் கொண்டு வரப்பட்டது.

இந்த வெற்றிகரமான செயற்பாட்டை அடுத்து, சகல நிலைகளிலும் தமிழ் மக்களை இன ரீதியாக ஒடுக்க வேண்டும் என்ற நோக்கத்தில் அவ்வப்போது அவர்கள் மீது வன்முறைகள் கட்டவிழ்த்துவிடப்பட்டன.

நாட்டில் பொதுத் தேர்தல் நடந்தால், தேர்தல் முடிவுகள் வெளியாகியதும், வெற்றி பெற்றவர்களுக்கும், தோற்றவர்களுக்கும் இடையில் வழமையாக ஏற்படுகின்ற, வெற்றி தோல்விகளை உணர்ச்சிபூர்வமாகப் பார்க்கின்ற தன்மையும் சிறுபான்மை மக்களாகிய தமிழ் மக்களை இன ரீதியாக ஒடுக்குவதற்கும் ஒழிப்பதற்கும் உரிய ஒரு செயற்பாட்டுத் தளமாகக் கையாளப்பட்டு வன்முறைகளை அவர்களுக்கு எதிராகக் கட்டவிழ்த்து விடப்படுகின்ற பண்பாடொன்று நிலவி வந்தது. இந்த நிலைமை 1977ம் ஆண்டோடு ஓரளவிற்கு முடிவுக்குக் கொண்டுவரப்பட்டிருந்த போதிலும், வன்முறைகளை வேண்டிய நேரத்தில், வேண்டிய இடத்தில் சிறிய சம்பவத்தைப் பெரிதுபடுத்தி, இனவாத வன்முறைகளைத் தூண்டிவிட்ட சம்பவங்கள் பல இடம் பெற்றுள்ளன.

கடந்த 1983ம் ஆண்டில் யாழ்ப்பாணம் திருநெல்வேலியில் கொல்லப்பட்ட 13 இராணுவத்தினரின் மரணங்களை இனவாதத் தீயாகத் தூண்டிவிட்டதன் மூலம், மிகமோசமான வன்முறைகளைக் கட்டவிழ்த்து ஆயிரக்கணக்கான தமிழ் மக்களைக் கொன்று குவித்தது தெரிந்ததே. இதன் அடியொற்றியே வெலிக்கடை, களுத்துறை, மகசின் சிறைச்சாலைகளில் தமிழ் அரசியல் கைதிகள் படுகொலை செய்யப்பட்டார்கள். அந்த வரிசையில் அண்மையில் பண்டாரவளை பிந்துனுவெவ புனர்வாழ்வு முகாம் படுகொலையும் இடம்பெற்றுள்ளது. இதுபோன்ற எத்தனையோ பெரிய சம்பவங்களும், சிறுசிறு சம்பவங்களும் அப்பாவிகளைக் கொன்று குவிப்பதற்காகப் பெரும்பான்மை குண்டர்களினால், சிங்கள அரசியல்வாதிகளினதும், அரச அதிகாரத்தினதும், ஆசீர்வாதத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்டது. மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இத்தகையதோர் இனவாதப் போக்குடன் செயற்பட்டுவந்துள்ள, செயற்பட்டு வருகின்ற சிங்கள இனவாதப் போக்கை அடிநாதமாகக் கொண்ட அரசியல் நிர்வாகக் கட்டமைப்பில் அதிகாரக் கதிரைகளை அலங்கரித்துக் கொண்டிருக்கின்ற அரசியல் தலைவர்களினால் நியாயமான சமாதானத்திற்கான முயற்சிகள் முன்னெடுக்கப்படும் என்பதோ, நேர்மையான நோக்கத்திற்காக மேற்கொள்ளப்படுகின்ற மத்தியஸ்தர்களின் சமாதான முயற்சிகளுக்கு உளப்பூர்வமான ஆதரவு வழங்கப்படும் என்று எதிர்பார்க்க முடியாது. இன்றைய இலங்கையின் அரசியல், இராணுவ போக்குகளின் பின்னணியில் உள்ள இனவாத வெறித்தனத்தின் அடிப்படையில் அவ்வாறான எதிர்பார்ப்பானது, அர்த்தமற்றதாகவே அமையும் என்பதில் சந்தேகமில்லை.

> **தமிழ் மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக, அவர்களின் பிரச்சினை காரணமாக இலங்கையில் ஏற்பட்டுள்ள யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வருவதற்காக முன்வைக்கப்பட்ட தீர்வுப் பொதி பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்படுவதற்கு, பல முனைகளிலும் பலத்த எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டது.**

NÆRKØB TRAVELS Ltd
MONEY & TRANSFER

* Colombo
* Madras
* Singepor
* Canada
* London

இந்த நாடுகளுக்கு பயணம் செய்யும் எமது வாடிக்கையாளர்களுக்கு மிக மலிவான முறையில் விமானச் சீட்டு வழங்குகிறோம்.

★ உலகில் எப்பாகத்துக்கும் விமானச்சீட்டுக்களைப் பெற நாடவேண்டிய ஸ்தாபனம் NÆRKØB TRAVEIS LTD (15 நாட்கள் தங்குமிட வசதியுடன்)
★ சென்னை சுற்றுலா: வருடாவருடம் சென்னை சுற்றுலா விமானப்பயணம் ஒருவருக்கு 9.955 Kr (அண்ணளவாக)மட்டுமே. வருகிறவருடத்துக்கான ஆசனங்களை இப்பொழுதே பதிவுசெய்து கொள்ளுங்கள்.
★ NÆRKØB TRAVEIS LTD _ Korskervej. 104 _ 7000 Fredericia _ Danmark
★ தொலைபேசி _ 75 91 58 40 _ 75 91 58 05 / 75 91 58 41 _ 75 91 58 04 _ தொலைநகல்: 75 91 58 42

| NÆRKØB பேருந்துசேவை | ஒருவழி | இருவழி |
|---|---|---|
| Danmark _London | 540 Kr | 890 Kr |
| Danmark _Paris | 540 Kr | 865 Kr |
| Danmark _Hombrg | 205 Kr | 327 Kr |

* பாரிசில் இருக்கும் டிஸ்னிலாண்ட் & லூட்ஸ் கோயில் புனித பயணத்திற்கும் பேருந்து விசேடமாக உள்ளது.

உடன் பணமாற்று சேவை

உலகில் எப்பாகங்களுக்கும் உடன் பணத்தை கொடுக்கவோ / எடுக்கவோ நாடவேண்டிய ஸ்தாபனம் NÆRKØB LTD

★ கொடுத்து 30 நிமிடங்களுக்குள் உங்கள் உறவுகள் கைக்குக் கிடைக்கும் என்பது நிச்சயம்.

Pub

## Graphique 14

Impression Couleur - Noir et BlanC

உங்கள்
அனைத்து அச்சு
வேலைகளுக்கும்

# தமிழ் அச்சகம்

59 rue Louis Blanc
75010 Paris. FRANCE
M° : La Chapelle or Gare du Nord
Tél et Fax : 01 42 09 60 64
www.tamilachchakam.com - Grph14@aol.com

## Restaurant Le Saint -Gilles

Spécialites des iles de la Réunion - Maurice - Seychelles

Diner aux Chandelles
Piste de danse
Ambiance soleil de l'Océan Indien



Ouvert midi et Soir sauf le Dimanche Midi

15 rue Jules chaplain
75006 PARIS
M° :Vavin
Tél et Fax : 01 43 25 12 84
www.lesaintgilles.com

31-12-2000 வரை
வர்த்தகர்களிற்கு:
PALMAX
தயாரிப்புக்கள் யாவும்
மிக மலிவு விலையில்.

## Kana

## Palmax
FOOD VILLAGE



எமது பொருட்கள்
தரமானவை மட்டுமல்ல
மலிவானவையும்கூட
உங்கள் வாழ்க்கைக்கு
உற்ற தோழனாய்
Kana / PALMAX

Kana / PALMAX தயாரிப்புக்கள்
மொத்தமாகவும், சில்லறையாகவும்
மிகக் குறைந்தவிலையில்
பெற்றுக்கொள்ள.

**KNK**
55, rue Lenine
94200 IVRY sur Seine
Tel: 01 46 81 72 74
Tel: 01 46 72 81 63
Fax: 01 46 81 81 86




Pub.Fr.

# புதுமையை நோக்கிய அரங்கேற்றம்

புலம் பெயர்ந்த சூழலில்- தாய் மொழி அறிதல் - தாய் மொழிக் கலைகள் கற்றல் - வேரறிதல் -விழு தெறிதல். கற்பனையாக இருக்குமோ என்ற அச்சம் எழாமலும் இல்லை. மிகப் பெரிய வாழ்க்கைக் கல்வி தாயக உணர்வைப் பெற்றிருத்தலே.

'தேமதுரத் தமிழோசை உலகமெல்லாம் பரவிடச் செய்தல் வேண்டும்' என்ற பாரதியாரின் கனவு நனவாகி வருகிறதான சமிக்ஞைகள் வெளிக்கிளம்பத் தொடங்கியுள்ளன.

இத்தகைய நல்ல சமிக்ஞைகளுக்குப் பின்னால் சமூகப் பிரக்ஞைமிக்க பெற்றோர்களே காரணம் என்ற கருத்தும் பலமாக எழுகின்றது. பெற்றோர்கள் தங்கள் குழந்தைகள் மீது காட்டும் அக்கறையே எதிர்காலச் சிற்பிகளை உருவாக்கித் தரும், பல்துறை ஆற்றல் மிக்கவர்களாக்கும், செயற்பாட்டாளர்களாக்கும்

சோர்வின்றி உழைப்பவர்களாக்கும், பன்மொழி ஆற்றல் புலமையாளர்களாக ஆக்கும், நல்ல மனிதர்களாக ஆக்கும்.

இவற்றுக்கெல்லாம் பின்பலமாக சமூக அக்கறையாளர்களும், கல்விமான்களும் அமைப்புக்களும் செயற்படத் தொடங்கினால் எமது நிகழ் நிலையில் உயரிய மாற்றங்கள் ஏற்படும்.

அத்தகைய நம்பிக்கைகளின் சாட்சியாக செல்வி அன்ரன் சோபியாவின் அரங்கேற்ற நிகழ்வு அமோர்க் மண்டபத்தில், பாரிசில் 29.10.2000 அன்று அமைந்திருந்தது.

ஆடற் கலையின் நுணுக்கங்களையும், முகபாவ வெளிப்பாடுகளையும் மிக நன்றாக அவளால் எவ்வாறு வெளிப்படுத்த முடிந்தது என்ற கேள்விகள் பார்வையாளர்களிடமிருந்து எழும்பின.

பிரமிப்பு, உற்சாகம், சந்தோசம், நம்பிக்கை, நம்மட பிள்ளையொருத்தி எவ்வளவு அற்புதமாக ஆடினாள் என்றும் பேசினர்.

பிரஞ்சுக்கிளைப் பொறுப்பாளர் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு, ஆற்றிய உரையில் பன்முக ஆற்றல் மிக்கவராக எமது இளம் சமூகம் உருவாக்கப்படல் வேண்டுமென்றும், அத்தகைய இளம் கலைஞர்களில் இவர் ஒரு முன்னோடிச் சிறுமியாக விளங்குகின்றார் என்றும் குறிப்பிட்டார்.



சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்ட பேராசிரியர் ஜோன் மரி யூலியா அவர்கள் எமது இளம் சிறார்களின் எதிர்கால நல்வாழ்விற்காக எல்லோரும் உழைக்க முன்வரவேண்டுமென்றும், அதற்குத் தன்னாலான உதவிகளை நல்கத் தயாராகவுள்ளேன் என்றும் குறிப்பிட்டார். தமிழ்த் தேசியத்தின் நாளைய சக்திகளாக, நாளைய தூண்களாக உருவாக்கும் பணியில் கடுமையாக உழைக்கவேண்டுமெனக் குறிப்பிட்டார்.

இந்த அரங்கேற்ற நிகழ்வு பல புதுமைகளைக் கொண்டிருந்தது. அரங்கேற்றத்தோடு நின்றுவிடாத கலைப் பயணமே பல கதவுகளைத் திறக்கும் என்கின்ற நம்பிக்கை மட்டும் திரைவிழுந்து மண்டபத்தைவிட்டு வெளியேறியபோதும் மனதில் நின்றுகொண்டிருந்தது.

- சிட்டு



## நீதியான சமாதானத்திற்கான திருப்பலி

நீதியான சமாதானத்திற்கான திருப்பலி ஒப்புக்கொடுத்தலும், இலங்கை அரசினால் மேற்கொள்ளப்படும் தமிழீழத் தமிழர்கள் மீதான மனிதவுரிமை மீறல்கள், வெளியுலகக் கண்களுக்குப் புலப்படுத்தும் ஒன்றுகூடலும் என்ற தலையங்கத்துடன், புலம்பெயர்ந்தோர் தினத்தை. முன்னிட்டு வலே மாநிலத்தில் சியோன் நகர் பெரிய தேவாலயத்தில் 11.11.2000 சனிக்கிழமை இரவும் 12.11.2000 ஞாயிற்றுக்கிழமை காலையும் திருப்பலியும், ஒன்றுகூடலும் நடைபெற்றது.

11.11.2000 சனிக்கிழமை மாலை 6 மணிக்கு நடைபெற்ற பூஜையில் நூற்றுக்கு மேற்பட்ட சுவிஸ் நாட்டவரும், கணிசமான அளவு தமிழர்களும் கலந்துகொண்டார்கள். இந்நிகழ்வின்போது இலங்கையில் கடந்த ஆண்டுகளில் தமிழர்கள் மீது நடாத்தப்பட்ட மனிதவுரிமை மீறல்களின் புள்ளி விபரங்களுடன் கூடிய நீதியான சமாதானத்தை நோக்கிய உரையொன்று செல்வி. தவராஜா சார்ளி நகோமியால் ஆற்றப்பட்டது. இதில் நோர்வேயின் சமாதான முன்னெடுப்பு தெரிவிக்கப்பட்டதுடன், சிங்களப் பௌத்தர்களின் நிலைப்பாடும் குறிப்பிடப்பட்டது. திருப்பலியின் பின்னர் தேவாலய முன்றலில் சிறு கலந்துரையாடலும் நிகழ்ந்தது. பின்பு தேவாலய விடுதி மண்டபத்தில் தமிழீழத்தின் அழிவுகளை விவரிக்கும் புகைப்படக் கண்காட்சியும், ஒளிப்படக் (வெண்திரை புகைப்படத் தட்டு) காட்சியும் மடு தேவாலயக் குண்டு வீச்சு, புதுக்குடியிருப்புக் குண்டு வீச்சு வீடியோப் பிரதியும் காண்பிக்கப்பட்டது. அவ்வாறே 12.11. 2000 அன்றும் காலை 8.30 மணிக்கும் 10 மணிக்கும் திருப்பலி ஒப்புக்கொடுப்பும், உரையும் நிகழ்த்தப்பட்டது. பின்பு தேவாலய விடுதி மண்டபத்தில் தேச நிகழ்வு காட்சிகளும், தமிழ்த் தேச விளக்கக் கலந்துரையாடலும் நிகழ்த்தப்பட்டது. தொடர்ந்து பறை முரசு முழங்கி குதிரையாட்டமும், கரகாட்டமும், நடாத்தப்பட்டு, இன அழிப்பு விபரங்கள் அடங்கிய ஒரு துண்டுப்பிரசுரமும் விநியோகிக்கப் பட்டது.



இந்நிகழ்வு வலே மாநிலத்தில் வாழும் சிறுதொகை தமிழர்களையும், சுவீஸ் நாட்டவரையும் ஒன்றிணைத்து தமிழர்களின் அவலங்களை வெளிக்கொண்டுவர ஒரு உறவுப் பாலமாக அமைந்தது. மேலும் இனிவரும் காலங்களில் சிறப்பாக ஒழுங்கு செய்ய தகவல்களும் சேகரிக்கப் பட்டன.



## இத்தாலியில் விடுதலைக் கானச்சிட்டு 2000

கடந்த 05.11.2000 ஞாயிற்றுக் கிழமை மாலை 5 மணிக்கு (S.EUGENIO-PAPA, PIAZZA EUROPA) கப்பல் கோயில் மண்டப மேஜர் சிட்டு அரங்கில் விடுதலைக் கானச்சிட்டு 2000 சிறந்த பாடகர் தெரிவுப்போட்டி நடைபெற்றது.

தாயகத்தில் சிங்கள இனவாத அரசின் இன அழிப்பினுள் சிக்கி வலுவிழந்து வாழும் எம் தமிழ் உறவுகளின் மேம்பாட்டு நிதிக்காக தமிழர் புனர்வாழ்வுக்கழக இத்தாலிக் கிளையினரால் இப்போட்டி நிகழ்ச்சி நடாத்தப்பட்டது.

நிகழ்ச்சி ஆரம்பத்தில் ஜயசிக்குறாய் சமரில் வீரச்சாவைத் தழுவிய மாவீரர் மேஜர் சிட்டுவின் நினைவாக போராட்டத்துடனும், கலைப்பாதையிலும் இறுதிவரை உழைத்த போராளிக் கலைஞனாகவும், தமிழீழ நெஞ்சங்களில் நிறைந்துவிட்ட அம் மாவீரனின் நினைவாக நிகழ்ச்சி மண்டபம் 'மேஜர் சிட்டு அரங்க'மாகிக் காட்சிளித்தது.

தாயக மண்மீட்புப் போரில் தமது இனிய உயிர்களை அர்ப்பணித்த மாவீரர்களுக்காகவும், சிங்கள இனவாத அழிப்பினுள் சிக்கி மடிந்த மக்களுக்காகவும் அமைதி வணக்கம் செய்து, தமிழர் புனர்வாழ்வுக்கழக செயற்பாட்டாளராகிய திரு. ஞானச்சந்திரன் அவர்கள் வரவேற்புரை வழங்க; போட்டி நிகழ்ச்சி ஆரம்பமாகியது.

கீழ்ப்பிரிவு, மேற்பிரிவு என இரண்டு பிரிவுளாகப் பிரித்து, முப்பது போட்டியாளர்கள் விடுதலைக் கானச் சிட்டாகி வந்திருந்தனர். விடுதலைக் கானச் சிட்டு போட்டியில் சிறந்த பாடகர்களைத் தெரிவு செய்வதற்காக ஜேர்மனியிலிருந்து கலைபண்பாட்டுக் கழகத்தின் துணைப் பொறுப்பாளரும், தமிழீழ இசைக் குழுவின் பாடகரும், பிரதான இசையமைப்பாளரும், இன்னிசை வேந்தன் திரு.பொன். சுந்தரலிங்கம் அவர்களின் மாணவனுமாகிய திரு.சி.கண்ணன் அவர்களும், இத்தாலிப் பொலோனியா நகரில் இருந்து இந்தியாவில் திருமதி. லீலா ஆறுமுகையா அவர்களின் 39வது மாணவியாக அரங்கேற்றியவரும் மதுரை தமிழ்நாடு அரச இசைக் கல்லூரியில் மூன்று வருடங்கள் வாய்ப்பாட்டு வீணை பயின்று, முதற்தர சித்திபெற்றவரும், பொலோனியா மாலதி கலைப்பள்ளியின் நடன ஆசிரியையுமாகிய திருமதி. அ. சுஜிந்தினி அவர்களும் நடுவர்களாக வருகை தந்து சிறப்பித்தனர்.

**கீழ்ப்பிரிவு போட்டியில்:**

**முதலாமிடத்தை – செல்வன் இருதயம் பேக்கிளின் றொய்சர்**
**இரண்டாமிடத்தை – செல்வி கிங்ஸ்லி ஜென்சி றிசா**
**மூன்றாமிடத்தை – செல்வி. ஞானச்சந்திரன் மாதங்கி**

ஆகியோரும் பெற்றனர்.

**மேற்பிரிவுப் போட்டியில்:**

**முதலாமிடத்தை – அல்பிரட் ஜெரால்டன்**
**இரண்டாமிடத்தை – வேலாயுதம் சிறுமூர்த்தி**
**மூன்றாமிடத்தை – தெட்சணாமூர்த்தி பாலமுரளி**

ஆகியோரும் பெற்றிருந்தனர்.

போட்டியில் பங்குபற்றியோருக்கான சான்றிதழ்களை தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் செயற்பாட்டாளர் ஆகிய திரு. எட்மன், திரு.குமாரசாமி, திரு. ஞானச்சந்திரன் ஆகியோர்கள் வழங்கினர்.

விடுதலைக் கானச்சிட்டுகளின் பாடல்களுக்கு இத்தாலிப் பணியக தமிழர் கலைபண்பாட்டுக்கழக கலைஞர்கள் சிறப்பாக இசை வழங்கியிருந்தனர். போட்டியின் முடிவில் நடுவர்களாக கடமைபுரிந்த திரு.எஸ்.கண்ணன் அவர்களும், திருமதி. அ.சுஜிந்தினி அவர்களும் விடுதலைப் பாடல்களைப்பாடி, நிகழ்ச்சியை சிறப்பித்தனர்.

போட்டியின் முடிவுகளில் சிறந்த பாடகர்களை எப்படி தெரிவுசெய்தது பற்றி திரு. சி. கண்ணன் அவர்கள் விரிவுபடுத்தினார். தொடர்ந்து பாடல்களுக்கு இசை வழங்கிய கலைஞர்கள் கௌரவிக்கப்பட்டனர். சிறந்த பாடகர் தெரிவுப் போட்டியில் 2000 ஆண்டின் சிறந்த கானச்சிட்டாக தெரிவு செய்தவர்களுக்குரிய பரிசுகளையும், சான்றிதழ்களையும், தமிழர் புனர்வாழ்வுக் கழகப் பொறுப்பாளர் திரு.கோணேஸ்வரன் அவர்கள் வழங்கிக் கௌரவித்தார். அத்துடன், தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தால், புலம்பெயர் மண்ணில் வாழ்கின்ற மக்கள், தாயகத்தில் வாழுகின்ற துயருறுகின்ற மக்களுக்கு எப்படியான செயற்திட்டங்கள் மூலம் உதவவேண்டும். தமிழீழத்தில் செயற்படுத்தப்படுகின்ற புனரமைப்புத் திட்டங்களுக்கு இக்கிளையினர் எவ்வகையில் உதவிக்கரம் கொடுக்க வேண்டும் என்பதையும், திட்டக் கோவைகள் மூலம் வெளிப்படுத்தினார்.

போட்டி நிகழ்ச்சிக்கு நடுவர்களாக கடமையாற்றியவர்களுக்கு தமிழீழ விடுதலைப் புலிகளின் இத்தாலிப் பணியகப் பிரதிநிதி விடுதலைக் கானச்சிட்டு நினைவுப்பரிசு வழங்கிக் கௌரவித்தார்.

தொடர்ந்து லவன் அவர்களின் நெறியாள்கையில் உருவாகிய 'சொன்னால் நம்பமாட்டீர்கள்' என்னும் நகைச்சுவை நாடகம் புலம் பெயர்ந்து வாழும் மக்கள் ஆற்றவேண்டிய பங்குபற்றியும், சிரிப்புடன் சிந்தனையையும் உருவாக்கி வெளிப்படுத்தினர்.

விடுதலைக் கானச்சிட்டு 2000 சிறந்த பாடகர் தெரிவுப் போட்டி முதன் முதலாக நடைபெற்றாலும், விடுதலைப் பாடல்களை உள்வாங்கி, இலைமறைகாயாக ஒளிந்திருக்கும் கலைஞர்களை வெளிக்கொண்டுவரும் முயற்சியில் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் செயற்பட்டமை வரவேற்கத்தக்கது.



சுவிசில் நடைபெற்ற லெப்.கேணல் நாதன், கப்டன் கஜன் ஆகியோரின் நான்காம் ஆண்டு நினைவு நிகழ்வில்.

# யாழ். தொழில்நுட்பக் கல்லூரி மாணவனை விடுவிக்கக்கோரி பகிஸ்கரிப்பு

(27.11.00)

சிறீலங்கா படையினரால் கைதுசெய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள யாழ்ப்பாணம் தொழில் நுட்பக் கல்லூரி மாணவன் இ. சிறீரங்கநாதனை விடுவிக்கக்கோரி சக மாணவர்கள் தொடர்ந்து வகுப்புகளுக்குச் செல்லாது பகிஸ்கரிப்புப் போராட்டம் நடத்தி வருகின்றனர் என செய்திகள் தெரிவிக்கின்றன. எதிர்வரும் டிசம்பர் மாதம் 2ம் திகதி ஆண்டிறுதிப் பரீட்சை ஆரம்பமாகவுள்ளதால், இவரை உடனடியாக விடுவிக்க வேண்டுமெனக் கோரி சக மாணவர்கள் பகிஸ்கரிப்பு போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இதேவேளை, இம் மாணவனைக் கைதுசெய்த படையினர், தற்போது இவரைக் தாம் கைதுசெய்யவில்லையென கூறியுள்ளனர். இதனால் இவருக்கு என்ன நடந்துள்ளது என்பது பற்றி தெரியவில்லை என அச்சம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### வருந்துகிறோம்

மாவீரர் சிறப்பிதழுக்காக உங்கள் ஆக்கங்களை அனுப்பிவைத்தமைக்கு எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம். எனினும் ஏற்பட்ட இடநெருக்கடி காரணமாக அனைவரது ஆக்கங்களையும் பிரசுரிக்க முடியவில்லை. இதற்காக வருந்துகிறோம். பிரசுரிக்காத உங்கள் ஆக்கங்கள் ஆவணப்படுத்தப்பட்டுள்ளன. காலதேவைக்கு ஏற்பு, அவை ஈழமுரசு இதழில் பயன்படுத்தப்படும் என்பதையும் அறியத் தருகின்றோம்.

ஆ—ர்

# சிறீலங்காவின் பிரதி அமைச்சர் மரணம்

(26.11.00)

சிறீலங்காவின் பிரதி சுகாதார அமைச்சர் லயனல் குணவர்த்தன கடந்த 22ம் திகதி மரணமாகியுள்ளார். கல்பொலவில் வைபவம் ஒன்றில் கலந்து கொண்டிருந்தபோது திடீர் சுகவீனம் ஏற்பட்டதையடுத்து, கொழும்பிலுள்ள தனியார் வைத்தியசாலையில் கொண்டு சென்று அனுமதித்தபோது இவர் மரணமாகியுள்ளார்.

(30-ம் பக்கத் தொடர்ச்சி)

### ஐரோப்பிய...

தமது பங்களிப்பினை வழங்கியது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, சுவிஸ் பேர்ண் நகரில் இன்று நடைபெற்ற மாவீரர் நினைவு எழுச்சி நிகழ்வில் ஐயாயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் கலந்துகொண்டு மாவீரர்களுக்கு தமது மலர் வணக்கத்தை செலுத்தியுள்ளனர். மிகவும் எழுச்சிகரமாக நடைபெற்ற இவ் மாவீரர்நாள் நிகழ்வில், தமிழகத்தில் இருந்து கவிஞர் அறிவுமதி கலந்துகொண்டு சிறப்புரையாற்றியுள்ளார். இதன்போது தனக்கு கிடைத்திருந்த பெருமதியான பரிசுப்பொருளான ஐந்து பவுண் தங்கத்தினை தமிழீழ தேசிய பாதுகாப்பு நிதிக்கு வழங்கி, தேசிய பாதுகாப்பு நிதிப் பங்களிப்பினை தொடங்கி வைத்தார். இந்நிகழ்வில் தமிழிசைப் பாடகர் கலைவாணர் இசைக்குழுவினரின் எழுச்சியிசை நிகழ்வும் இடம் பெற்றது. இதன்போது பாடப்பட்ட அள்ளிக்கொடுங்கையா... அள்ளிக் கொடுங்கையா வெள்ளிப் பணத்தை... என்ற பாடலின் போது மக்கள் பெருமளவான நிதியை வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

(30-ம் பக்கத் தொடர்ச்சி)

### செய்தியாளர்....

யில் பாவித்து மனித உரிமை ஆர்வலர்கள், வழக்கறிஞர்கள் மற்றும் புத்துஜீவிகளை அவதூறு செய்து வருகின்றனர். அதுமட்டுமல்லாது தமிழ் மக்களுக்கு ஆதரவான மனித உரிமைச் செயற்பாட்டில் பங்கெடுத்தக் கொள்ளும் கல்விமான்களையும் புத்திஜீவிகளையும் அவர்களின் உயிருக்கு அச்சுறுத்தல் மேற்கொள்ளும் முகமாக பட்டியல்களையும் தயாரித்துள்ளதாகவும் இதில் தமிழர் உரிமை மையத்தின் பொதுச் செயலாளர் வி.கிருபாகரனின் பெயரும் இடம்பெற்றிருப்பதாக அறியப்படுவதாகவும் இவ்விதழ் குறிப்பிட்டுள்ளது.

(30-ம் பக்கத் தொடர்ச்சி)

### வவுனியாவில்....

களை இராணுவத்தினர் கைது செய்திருக்கலாம் எனவும், இவர்கள் தற்போது எங்கு வைக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதை அறியமுடியாத நிலையில் இருப்பதாகவும் காணாமல் போனவர்களின் உறவினர்கள் தெரிவித்துள்ளனர். இதேவேளை, காணாமல் போன் இப் 14 பேர் தொடர்பாக சிறீலங்கா இராணுவத்தினருடனும், பொலிசாருடனும் தொடர்புகொண்டு வருவதாக மனித உரிமைகள் ஆணைக்குழுவினர் தெரிவித்துள்ளனர்.

(30-ம் பக்கத் தொடர்ச்சி)

### யாழ். நகரில்....

ஓரிரவிற்குள் பெருமளவிலான சுவரொட்டிகள் யாழ்குடாவின் பல்வேறு பகுதிகளிலும், இராணுவ காவலரண்களுக்கு அருகிலும் ஒட்டப்பட்டிருந்தமை படைத்தரப்பினரை அதிர்ச்சிக்கு உள்ளாக்கியுள்ளது. இதனையடுத்து இன்று காலை அச்சுவேலி, ஆவரங்கால் பகுதிகளை சுற்றிவளைத்த சிறீலங்காப் படையினர் கடும் தேடுதல்களை நடத்தியுள்ளனர். காலை ஏழு மணியிலிருந்து நண்பகல் வரை நடாத்தப்பட்ட இத்தேடுதலின் போது, வீடுவீடாகச் சென்ற படையினர் அங்கிருந்தவர்களை அச்சுவேலி வைத்தியசாலைக்கு அருகில் அழைத்துத் தீவிர சோதனைக்கு உட்படுத்தியதுடன் விசாரணையும் நடத்தியுள்ளனர்.

## 2ம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்: 07 – 06 – 1927

மறைவு: 25 – 11 – 1998

### திருமதி தெய்வானைப்பிள்ளை இராசையா

திதி: 02.12.2000

*தாயே!*
*எங்கள் நெஞ்சமெல்லாம் நிறைந்தவளே*
*நீ எங்கு சென்றாய் எமைவிட்டு...*
*வாழும்வரை எம்மை வாழவைத்துவிட்டு மீளாத்துயில் கொண்டதேனம்மா...*
*மீண்டும் உனைக்காண முகம்தேடி அலைகின்றோம்*
*ஆண்டவன் உனை அழைத்து ஆண்டு இரண்டாயிற்றே!!*

எமது தாயாரின் இரண்டாமாண்டு நினைவுநாளையொட்டி 02.12.2000 சனிக்கிழமை 26, Rue du Département, 75018 Paris இல் அமைந்துள்ள பாரிஸ் முத்துமாரி அம்மன் ஆலயத்தில் விசேட அபிசேக ஆராதனையும், அன்னதானமும் நடைபெறவுள்ளது.

உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரையும் இவ் வைபவத்தில் பங்குகொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

தகவல்:
கணவன், பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்

Pub

MULHOUSE
மாவீரர் நாள்
10.12.2000 ஞாயிறு
பிற்பகல் 3.00 மணி
இடம்:
Foyer ALTRAM
22, Rue de Provence
MULHOUSE

பாரிஸ் தமிழர் கல்வி நிலையம்
Centre Parisien d'Education pour les Tamouls
பாரிஸ் தமிழர் கல்வி நிலையத்தால் நடாத்தப்படும்

கணனிக்கண்காட்சியும் கருத்தரங்கும்
நீங்கள் யாராக இருப்பினும்
20ம் நூற்றாண்டின் Computer & Internet
உலகிற்கு உங்களை தயார்படுத்திக்கொள்ள விரும்புகிறீர்களா?

சிறுவர்களுக்கான கணணிக்கண்காட்சி
இளம் தலைமுறையின் வளர்ச்சியை கருத்தில் கொண்டு பெற்றோர்களுக்கான கணனி, இணையம் தொடர்பான விளக்கங்களும் செயல் முறை விளக்கங்களும் கொடுக்கப்படுவதால் சிறுவர்களுடன் பெற்றோர்களும் சமூகமளிக்க தவறாதீர்கள்.
நேரம் : 1:00 – 3:00 மணிவரை

இணையம் (Internet) தொடர்பான கருத்தரங்கும் செயல்முறை விளக்கங்களும் பிரான்சின் முன்னணி விரிவுரையாளர்களால் நடாத்தப்படுகின்றன.
நேரம் : 3:30 – 6:00 மணிவரை

தையல் கண்காட்சி
பாடசாலை மாணவர்களே ! இல்லத் தரசிகளே !
உங்களுக்கான ஓர் அரிய வாய்ப்பு
சிறுவர் முதல் மணப்பெண் வரை மட்டுமல்லாமல் இல்லத்திற்கான சகல தையல் தேவைகள் அனைத்தையும் அடிப்படைக் கல்வியுடன் பூர்த்திசெய்த பாரிஸ் தமிழர் கல்வி நிலைய மாணவர்களால் நடாத்தப்படுகிறது.
நேரம் : 2:00 – 6:00 மணிவரை

காலம் : 10.12.2000 ஞாயிறு
இடம் : 165 rue de Charonne 75011 PARIS
அனுமதி இலவசம்
அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்
- நிர்வாகம்

தமிழர் வித்தியாலயம்
75, rue Philippe de Girard, 75018 Paris - Tel: 01 40 05 11 16
Métro: Marx Dormoy அல்லது La Chapelle அல்லது Bus: 60, 65

டியூசன் கல்வி Soutien Scolaire
* École: CP.CE1. CE2. CM1. CM2
Collège: 6e. 5e. 4e. 3e
Lycée: 2nd, BEP, 1ère, la Terminale
* பல்கலைக்கழகப் பட்டம் பெற்று, தமிழும் தெரிந்து, கற்பிப்பதில் ஈடுபாடுடைய 25 பிரெஞ்சு ஆசிரியர்கள் தனிக்கவனத்துடன் கற்பிக்கிறார்கள்.
* Français Math. SVT. Biologie. Physique. Chimie. Histoire Géographie. Anglais. Allemand. Espagnol. Philosophie. உடன் Tamoul (Bac) என 13 பாடங்கள்.
* சனி, புதன் 14 மணி - 19 மணிவரை. ஞாயிறு : 10 மணி - 17 வரை
* வார நாட்களில் 17h15 - 19h15 ⇒ CE, CM, Collège

யோகாசனம், கராட்டி, யூடோ
வீணை, சங்கீதம், பரதநாட்டியம், ஓர்கன், வயலின்
மேக்கப் தையல் அலங்கார ஐசிங் கேக்

ச.சச்சிதானந்தம் M.A. D.S. Ph.D (10 பிரெஞ்சு, ஆங்கில நூல்களின் ஆசிரியர்)

பிரெஞ்சு வகுப்புக்கள் Le cours de français
* வாரநாட்கள்: காலை—மாலை வகுப்புக்கள் ⊃ ❸ மாத கற்கை நெறி
* சனி—ஞாயிறு: பகல் —மாலை வகுப்புக்கள் ⊃ ❻ மாத கற்கை நெறி
* ஆரம்ப நிலை, இடைநிலை, உயர்நிலை வகுப்புக்கள்

நல்ல ஆங்கிலம் Good English
ஆங்கிலேய ஆசிரியர், Miles Spencer (University of London)
TOEFL பரீட்சைக்குத் தயார்செய்யும் வகுப்பும் தொடங்குகிறது.
சிறுவர், பெரியோர் விசேட வகுப்புகள்

நல்ல தமிழ்
தமிழ், பிரெஞ்சு மொழிகள் மூலம் கற்பிக்கப்படுகிறது.

இங்கு தரப்படும் டியூஷன் கல்வியினால், படிப்பில் பின்தங்கி உள்ள மாணவர்கள் முன்னேற்றம் அடைகிறார்கள். விவேகமான மாணவர்கள் வகுப்பேற்றப்படுகிறார்கள். தேர்ச்சி அறிக்கையில் பாடங்களுக்கு Progrès, Encouragements, Excellent, Félicitations போன்ற குறிப்புக்கள் இருக்கின்றன. மாணவர்களுக்கு நம்பிக்கை ஏற்படுத்தும் மாணவர் மையக்கல்வி.

கம்பியூட்டர் பயிற்சி நெறிகள்:
Windows 95, 98, NT. C.C+ +Visual Basic Internet. HTML. Javascript. Flash 4.E - mail Free Phone.

இவ்வித்தியாலயம் Préfecture de Police இல் Association 1901 சட்டப் பிரிவில் பதிவு செய்யப்பட்டது. தொழில் மற்றும் வேலைவாய்ப்பு அமைச்சிடமிருந்து தொழிற்கல்வி கற்பிப்பதற்கு ஒப்புதல் பெற்றது. ஆனால் பாடசாலை என்பதற்கான அரச அங்கீகாரம் பெற்றது அல்லது.
Pub

ஈழமுரசு
Eelamurasu Weekly

அனைத்துத் தொடர்புகளுக்கும்:
"EELAMURASU"
22, Rue Perdonnet
75010 Paris
Tél: 01 40 37 63 63
Fax: 01 40 37 64 64

மேற்கு லண்டன் மாநகரில்
துவாரகா
Cash & Carry
இல்லை என்பது இங்கில்லை
N°: 199, The Broadway, Southall, Middx. T.P: 0181/813 91 26
Pub

# ஐரோப்பிய நாடுகளில் மாவீரர்நாள் நிகழ்வுகள்

## பல்லாயிரக்கணக்கான மக்கள் கலந்துகொண்டனர்

(27.11.00)

தமிழீழ விடுதலைக்காக விதையாகி வீழ்ந்த மாவீரர்களுக்கு வணக்கம் செலுத்தும் மாவீரர்நாள் நிகழ்வுகள் தமிழர்கள் வாழும் ஐரோப்பிய நாடுகள் எங்கும் நடைபெற்று வருகின்றன. ஜேர்மனி, சுவிஸ், டென்மார்க் மற்றும் பல நாடுகளிலும் உள்ள தமிழர்கள் வாழும் நகரங்களிலும் இந்நினைவு எழுச்சி நிகழ்வுகள் நேற்று முன் தினம், நேற்று, இன்று நடைபெற்றுள்ளன.

நேற்று முன்தினம் ஜேர்மனியில் டோன்மூண்ட் நகரில் நடைபெற்ற மாவீரர்நாள் நிகழ்வில் 8000ற்கும் மேற்பட்ட மக்கள் கலந்துகொண்டு மாவீரர்களுக்கு தமது மலர் வணக்கத்தை செலுத்தியுள்ளனர். சனியன்று மாலை மூன்று மணிக்கு நகரின் மிகப்பெரிய வேஸ்ட்பாலன் கலைமண்டபத்தில் இந் நிகழ்வு நடைபெற்றது. பிரமாண்டமான கோட்டையை இரண்டு புலிகள் பாதுகாப்பதுபோன்று அமைக்கப்பட்ட மேடையில் எழுச்சிக் கலை நிகழ்வுகள் இடம்பெற்றன. மண்டப முன் வாயிலில் அலங்கார வளைவுகள் அமைக்கப்பட்டிருந்ததுடன், மக்கள் மலர் வணக்கம் செலுத்துவதற்கு மாதிரி மாவீரர் துயிலும் இல்லம் ஒன்றும் மண்டபத்தின் உள்ளே அமைக்கப்பட்டிருந்தது. இரவு பதினொரு மணிவரை நடைபெற்ற இந் நினைவு எழுச்சி நிகழ்வுகளில் மக்கள் தேசிய பாதுகாப்பு நிதிக்கு நீண்டவரிசையில் நின்று

(தொடர்ச்சி 29ம் பக்கம்)

## யாழ். நகரத்தில் மாவீரர்நாள் சுவரொட்டிகள், பதாகைகள்

(27.11.00)

சிறீலங்காப் படையினரின் ஆக்கிரமிப்பில் உள்ள யாழ் நகரப்பகுதியில் மாவீரர் நாள் நினைவுச் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளதுடன், பதாகைகளும் கட்டப்பட்டுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன. யாழ். இந்துக் கல்லூரிச் சந்திக்கு அருகில் பெரிய பதாகையொன்று கட்டப்பட்டிருந்ததாகவும் இத் தகவலை அறிந்த படையினர் உடனடியாக அவ்விடத்திற்கு சென்று அதனை அகற்றும் நடவடிக்கையில் இன்று காலையில் ஈடுபட்டிருந்ததாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதேவேளை, இன்னும் இராணுவ ஆக்கிரமிப்பிலுள்ள வடமராட்சி மற்றும் வலிகாமம் பகுதிகளிலும் மாவீரர்நாள் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டிருந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

(தொடர்ச்சி 29ம் பக்கம்)

## செய்தியாளர் போர்வையில் சிறீலங்கா அரசிற்கு பிரச்சாரம்

### தமிழர் மனித உரிமை இதழ் குற்றச்சாட்டு

(27.11.00)

செய்தியாளர் என்னும் கோதாவில் சிறீலங்கா அரசிற்கு பிரச்சாரம் செய்யும் மூன்று சிங்கள செய்தியாளர்களை தமிழர் மனித உரிமை மையத்தின் இதழான தமிழரின் மனித உரிமை ஐப்பசி மாத இதழ் இனங்காட்டியுள்ளது. பிரித்தானியாவில் இருக்கும் றொஹான் குணசேகர, கொழும்ப ஐலண்ட் பத்திரிகையின் ஆக்கங்களை வழங்கும் துர்ஸி ரணதுங்க, அவுஷ்ரேலிய மெல்போன் நகரில் வராந்த வானொலிசேவை நடத்தும் மகிந்தபால ஆகிய மூவருமே இவ்வாறு இனங்காட்டப்பட்டுள்ளனர்.

சிறீலங்காவின் பிரச்சாரப் பீரங்கிகளாச் செயற்படும் இவர்கள் செய்தியாளர் என்னும் தகமையை துஷ்பிரயோகம் செய்ததுடன் ஊடகத்துறையையே தமக்கு விரும்பிய வழி

(தொடர்ச்சி 29ம் பக்கம்)

## வவுனியாவில் 14 பேர் காணாமல்போயுள்ளனர்

(26.11.00)

வவுனியாவில் இம்மாதம் மட்டும் 14 பேர் காணாமல் போயுள்ளதாக வவுனியாவில் உள்ள மனித உரிமைகள் ஆணைக்குழுவிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. காணாமல் போனவர்களின் உறவினர்களே இம் முறைப்பாட்டினை மனித உரிமை ஆணைக்குழுவிடம் செய்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. காணாமல் போயுள்ள இவர்

(தொடர்ச்சி 29ம் பக்கம்)

## கோப்பாயில் மணியடிக்க படையினர் தடை

யாழ். கோப்பாய் பகுதியில் ஆலயங்களில் மணியடிக்க படையினர் தடை விதித்துள்ளனர். கடந்த மூன்று நாட்களாக இத் தடையை அமுலப்படுத்தியுள்ள சிறீலங்காப் படையினர் ஆலய குருக்களையும், தேவாலய குருமார்களையும் மணியடிக்க கூடாது என எச்சரித்தும் உள்ளனர்.

மாவீரர் தினத்தை முன்னிட்டு ஆலயங்களில் மணியடிக்கலாம் என்ற காரணத்தினாலேயே இத் தடையினைப் பண்டையினர் விதித்துள்ளனர். இதேவேளை, கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லத்தை சுற்றி வளைத்து யாரும் சுடரேற்ற செல்லதாவாறு பாதுகாப்பை பலப்படுத்தியிருந்தனர். கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லத்தில் உள்ள மாவீரர்களின் கல்லறைகள் யாழ். குடா ஆக்கிரமிக்கப்பட்டதன் பின்னர் சிறீலங்காப் படையினரால் இடிக்கப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது.

மாவீரர்களுக்கு எமது வீரவணக்கங்கள்
Southharrow Food & Wines
234 & 236 Northolt Road, South Harrow, HA2 8DU
Tel: 02084236321
எமது வாடிக்கையாளர்களின் அன்றாட தேவைகளை கருத்தில்கொண்டு எமது நிறுவனம் மேலும் விஸ்தரிக்கப்பட்டுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.
★ வாரம் ஏழு நாட்களும் இரவு 11 மணி வரையும் திறந்திருக்கும்
Pub

## 2ம் லெப். பிலிப்ஸ் (பப்பா)

**(கிருஷ்ணர் ரகுநாதன்– காங்கேசன்துறை)**

*தாயக மண்ணில்: 16.01.1986*

**(உருத்திரபுரத்தில் சிறீலங்காப் படையுடனான மோதலில் வீரச்சாவு)**



**முதன் முதலில் காங்கேசன்துறை**
**மண்ணிலிருந்து தமிழீழ**
**விடுதலைக்கு களப்பலியான**
**வேங்கையே!**
**தமிழீழம் நாம் காண்போம்!**
**நம் தலைவன் தலைமையிலெனெ!**
**பிறந்த மண்ணுக்கு ண் வரும்போது**
**செப்புவாய் உணர்வோடு...**
**உன் வீரக்கனவு**
**நனவாகும் வேளையிது**
**நீ அறிவாயோ?**
**தங்கத் தலைவன் மீது**
**ண் கொண்ட பாசம் – சதா**
**முழங்குவாய் அவர் பெருமை**
**பொங்கிண் பூரிக்கும் உன்வதனம்**
**இன்றும் நம் கண்ணுக்குள்**
**நிழற்படமாய் விரிய....**



*(இவருடன் வீரச்சாவைத்*
*தழுவிக்கொண்ட*
*வீரவேங்கை ரகு,*
*வீரவேங்கை*
*உக்கன்*
*ஆகியோருக்கும்*
*எமது வணக்கங்கள்)*

- சகோதரர்கள்

## வரலாற்றுப் பாடம்

காண்டீபன் மூன்று பேருடன் கூடப்பிறந்தவன், இவன் தான் மூத்தவன். இவன் சிறு வயதில் யாழ்ப்பாணத்தில் தனது ஆரம்பக்கல்வியை தொடர்ந்தான். பின் பாடசாலை மாறி கல்வி கற்க வந்தபோதுதான் அவன் எனக்கு நண்பன் ஆனான். இவன் சிறு வயதிலேயே தமிழ் மீதும், நமது தேசத்தின் மீதும் மிக்க அன்பு கொண்டவன். நாம் பாடசாலையில் கல்வி கற்கும்போது 'வரலாற்றுப்' பாடத்தை ஆசிரியர் கற்பித்தபோது அதில் தமிழ் மன்னர்களைக் கொண்டு தான் சிங்கள மன்னர்கள் நாட்டைப்பிடித்து ஆண்டனர். சிங்கள மொழியை ஆட்சி மொழி ஆக்கினார்கள். சிங்களவர்களுக்கு சகல துறைகளிலும் முக்கியத்துவம் கொடுத்தனர்... என்று கூறினார். இதைக்கேட்டதும் இவன் அதிகம் கோபப்படுவான். இவனுக்கு தமிழ் தேசப்பற்றால் ஆசிரியரைக்கூட சில சமயம் எதிர்த்து பேசியது உண்டு. அவர் கூறுவார் காண்டீபன் நீ எங்கள் மொழிமீது உள்ளபற்றால் இப்படி கோபப்படுகின்றாய். நான் வரலாற்றைத்தான் கூறுகின்றேன் என்பார்.

எங்களிடம் அடிக்கடி தமிழருடைய அடிமை வரலாற்றை மாத்திக் காட்டணும் என்று கூறி உணர்ச்சி வசப்படுவான். காலம் நகர்ந்தது எமது வீரப் போராட்டத்தில் இவன் தானும் ஈடுபடத் தொடங்கினான். பின் காலம் போகப்போக தாய், தகப்பன், சகோதரர்கள் நண்பர்கள் யாவரையும் மறந்தவன் போல் தமது இலட்சியப் போராட்டத்தில் தன்னை முழுமையாக ஈடுபட வைத்தான். அனால், நாம் இவனை மறக்கவில்லை. நாங்கள் கூறுவது இவன் தேசத்தின் மீதுகொண்ட அன்பால் பாசத்தால் தான். பாசத்தை மற்றவர்களுக்கு தெரியாதது போல் நடந்துகொண்டான். இவனது தாய், தந்தை கூட அவன் தேசத்தை காக்கச்சென்று உள்ளான் என்று கூறுவார்கள். இவனோ எதிரிகளின் ஆக்கிரமிப்பை தடுக்கும் நடவடிக்கையில் நாளொரு வண்ணமும் பொழுதுதொரு மேனியுமாக ஈடுபட்டான்.

தனது தாய், தந்தை, சகோதரிகளை, நண்பர்களை எல்லாம் மறந்து தேசத்தை காப்பதே தனது இலட்சியம் என்று எண்ணியவனுக்கு கொடுக்கப்பட்ட பொறுப்புக்கு காலமும் கைகூடிவர தனது உடம்பில் குண்டுப் பொதிகளை கட்டிக்கொண்டு ஆக்கிரமிப்பாளர்களுக்கு சாவு மணியடித்தான். எங்கள் மாவீரன் காண்டீபன்.

*- ம.ஜெகன் (இத்தாலி)*

## கோடி பெறும்

***மாவீரனைப் பெற்ற மணிவயிறோ கோடி பெறும். அவன் சுவட்டைப் பின் தொடருமுன் பிறப்பும் கோடிபெறும். கோடானகோடி தனையிழந்தும் குறிதவறா- ஈழமதின் பின்புலமாய்த் தமைவரியும் மானத் தமிழ் மனமும் கோடி பெறும்.***

***சாத்திரங்கள் கூறுமந்தக் கீர்த்திபெற்ற ஞானமெல்லாம் சரித்திரங்கள் படைக்குமெங்கள் மாவீரர் தானறியார். தந்தைதாய் குருவேனும் தம்மண்ணின் விடுதலையை வென்றெடுக்கும் ஞானமதோ அவர்தம் வேதாந்தம்.***

***போரினில் நாங்கள் வாகையைச்சூட புறமுதுகிட்டுச் சிங்களம் ஓடும். ஓடும்.....ஓடும்..... சிங்கள மோதும். பாரினில் உயர்ந்த நாடுகள் சபையில் பட்டொளி வீசிப் புலிக்கொடி பறக்கும்... பறக்கும் பறக்கும் புலிக்கொடி பறக்கும்***

*- க.சிவசுப்பிரமணியம்*

## மாவீரர்கள் புனிதர்கள்

மக்களுக்காக மண்ணுக்காக மரணித்தவர்களே !
மண்ணிலும் கடலிலும் விண்ணிலும் பகை வென்றவர்களே !
உங்கள் ஈகையால் தமிழர் நாம் தலை நிமிர்ந்தோம்
தமிழ், தமிழ் என்று தொடர்ந்து சொன்னால் அமிழ்த் தென்று முடியும்
இது தமிழுக்குள்ள தனிச்சிறப்பு – மாவீரரே
உங்கள் தற்கொடையால் சரித்திரத்தில்
தமிழர் என்று சொன்னால் வீரம் என்று சொல்லப்படும்
எனி உலகில் விடுதலை வேண்டி போராடும் மக்களுக்கு
உங்கள் தியாகங்கள் தீரங்கள் தான் வழிகாட்டியாக அமையும்
கண்ணுக்கு மைதீட்டி அழகு சேர்க்கும் எம் மங்கையருள்
நீங்களோ களத்தினில் நின்று காவியம் படைத்தவர்கள்
பொன்னை நேசித்த பெண்களில் மண்ணை மக்களை நேசித்த
மனித தெய்வங்கள் மங்கையர் திலகங்கள் நீங்கள்.
வரும் காலங்களில் தியாகம் என்பதற்கு நீங்கள் உதாரணமாவீர்கள்
உலகமெல்லாம் எம்மவர் உல்லாசமாக வாழும்போது
நீங்களோ ! உறக்கமின்றி ஊர் உறவுகாத்த உத்தமர்கள்
தமிழ்– தமிழர், தமிழ்மண் வாழ சாவை அணைத்த சரித்திரவான்களே !
கல்லறைக்குள் கண்ணுறங்கும் கண்மணிகளே !
நீங்கள் எம்தேசத்தின் காவல் தெய்வங்கள்
உங்கள் துயிலும் இல்லங்கள் நாம் துதி பாடும் ஆலயங்கள்
மனிதர்கள் எல்லோரும் மரணத்தை கண்டு அஞ்சும் போது
அதெப்படி மரணத்தை தேடி மகிழ்வுடன் போனீர்கள்..?
ஓ..... நீங்கள் மனிதர்கள் அல்ல புனிதர்கள்
ஆம் புனிதர்களுக்கு மரணம் நிகழ்வதில்லையே !
பூமி உள்ள மட்டும் உங்கள் புகழ் வாழும் புனிதம் போற்றப்படும்
நாளை விடியும் எம்தேசத்தில் நீங்கள் வணங்கப்படும் தெய்வங்கள்.



- அருணா (சுவிஸ்)

## மாவீரரால் பெற்றோம்

தந்தை தாயிடம் இருந்து
உயிர் பெற்றோம்
உறவுகளிடம் இருந்து
பாசத்தைப் பெற்றோம்
மலர்களிடம் இருந்து
வாசனை பெற்றோம்
தாய் மண்ணுக்காக
விதையான மாவீரர்களால் – நாம்
விடுதலை பெற்றோம்,
தமிழீழம் பெற்றோம்.

*- க. உதயகுமார் (சுவிஸ்)*

# ஈழமுரசு



தமிழீழ தரைப்படை



ராதா விமான எதிர்ப்பு அணி



கடற் புலிகள்



கிட்டு பீரங்கிப்படையணி







விக்டர் கவச எதிர்ப்புஅணி

கரும்புலிகள்



20ம் நூற்றாண்டுக்கு விடை கொடுத்து உலகம் 21ம் நூற்றாண்டுக்குள் நுழையத் தயாராகின்றது. இத்தனை நூற்றாண்டுகளாக அடிமைகளாக அடங்கிக் கிடந்த தமிழினம் எழுச்சி கொண்டு எழுந்தது இருபதாம் நூற்றாண்டின் இறுதிக் கால் நூற்றாண்டுகளே. அதுவும் தமிழினத்திற்கு வரலாறு கொடுத்த மிகப்பெரும் கொடையான எமது தேசியத் தலைவரின் வழிநடத்தல் எமக்கு கிடைத்த பின்னரே இப்பாரிய எழுச்சி ஏற்பட்டது. ஒரு கைத்துப்பாக்கியுடன் ஆரம்பமான விடுதலைப் போர், இன்று மக்கள் சக்தியின் மகத்தான பலத்துடன், பதினாறாயிரத்துக்கும் மேற்பட்ட போராளிகளின் உயரிய உயிர் அர்ப்பணிப்புக்களினால் பலம்பொருந்திய படையணியாக விடுதலையின் எல்லையை தொட்டு நிற்கின்றது.

எம் தேசியத் தலைவரால் கட்டியெழுப்பப்பட்ட தமிழர்களின் சேனை, மிகக் குறுகிய காலத்தில் உலகமே வியக்கும் வண்ணம் வளர்ச்சிபெற்று, இன்று பல்வேறு படையணிகளாக விரிவடைந்து தமிழர்களின் தேசிய இராணுவமாக வளர்ச்சி கண்டுள்ளது.



எல்லைப்படையணி

தமிழீழ மருத்துவ அணி



தமிழீழ காவற்துறை

